பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் ,19 வள்ளுவர் ஆண்டு 2035 ஆடி 21 வியாழக்கிழமை (05-08-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:254

# இடைக்கால நிர்வாக விடயத்தில் அரசின் நிலைப்பாட்டில் குழப்பம்

## உள்வீட்டுச் சர்ச்சை பூதாகரமாகிறது; முன்னுக்குப்பின் முரணாக அறிவிப்புகள்

கொழும்பு,ஓக.5

விடுதலைப் புலிகள் சமர்ப்பித்துள்ள இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனை குறித்து - பேச்சு நடத்துவது குறித்து கொள்கை ரீதியாக முடிவெடுப்பதில் அரசுக்கூட்டமைப்புக்குள் குழப்பம் முற்றியிருப்பதாகத் தெரிகின்றது.

இதனால் அரசுத்தரப்பில் இருந்தே முன்னுக்குப்பின் முரணான அறிவிப்புகள் வெளியிடும் சூழ்நிலையும் ஏற்பட்டிருக்கிறது.

சர்வதேச அழுத்தம் மற்றும் நாட்டின் மோசமான பொருளாதார நெருக்கடியைச் சமாளிப்பதற்கு உலக நாடுகளின் உதவியைப் பெறவேண்டிய தேவை இருப்பதால் அவற்றின் எதிர்பார்ப்பை நிறைவுசெய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஆகியவை காரணமாகப் புலிகளுடன் சமாதானப்பேச்சை ஆரம்பிக்க வேண்டிய கட்டாயத்தில் ஜனாதிபதியும், அவரது அரசுத்தரப்பினரும் உள்ளனர்.

வடக்கு - கிழக்குக்கென இடைக்காலத்தன்னாட்சி அதிகார சபை ஒன்றை அமைப்பது தொடர்பான யோசனைகளை முன்வைத்துள்ள விடுதலைப் புலிகள் அது குறித்தே முதலில் பேசப்பட வேண்டும் என்று வற்புறுத்துகின்றார்கள்.

புலிகளின் இந்த நிலைப்பாடு நியாயமற்றதல்ல என்ற கருத்து சர்வதேச சமூகத்தில் மேலோங்கி வருகின்றது.

ஆனால், இடைக்காலத்தன்னாட்சி அதிகாரசபை குறித்து அரசு, புலிகளுடன் பேசும் விவகாரம் தொடர்பாக அரசின் பிரதான பங்காளிக்கட்சியான ஜே.வி.பி. நெருப்பெடுத்து வருகின்றது.

இதனால் சமாதானப் பேச்சை ஆரம்பிக்கவும் முடியாமல், கைவிடவும் முடியாமல் இருதலைக் கொள்ளி எறும்பாகத் தவிக்கிறார் அரசுத் தலைவி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

இந்நிலையில் கடந்த செவ்வாயன்று நடைபெற்ற அரசுத்தரப்புக் கூட்டமைப்பின் கூட்டத்திலும் இந்த விவகாரம் எதிரொலித்தது.

பங்காளிக்கட்சியான ஜே.வி.பியைச் சமாளிப்பதற்காக ஜனாதிபதி (16ஆம் பக்கம் பார்க்க)

## ஜே.வி.பி.போக்கால் கடும் எரிச்சல்

# ஆளும் கூட்டமைப்பின் தலைமைப் பதவியை

# ஜனாதிபதி சந்திரிகா திடீரென இராஜினாமா!



## நிறைவேற்று அதிகாரத்தை சுதந்திரமாக பிரயோகிப்பதற்குத் தயாராகிறார் அவர்

கொழும்பு,ஓகஸ்ட்5

**ஆளும் மக்கள் ஐக்கிய சுதந்திரக் கூட்டமைப்பின் தலைமைப் பதவியை நேற்றுத் திடீரென இராஜினாமாச் செய்தார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.**

**தமது ஆளுங் கூட்டமைப்பின் பிரதான பங்காளிக்கட்சியான ஜே.வி.பி. கொடுத்துவந்த தொல்லையால் கடும் எரிச்சலுற்றிருந்த ஜனாதிபதி இந்த நடவடிக்கை மூலம் ஜே.வி.பியைத் தூரத்தள்ளி வைத்துவிட்டு தனிவழி போகத் தயாராகிவிட்டார்.**

கூட்டுக்கட்சிகளினதோ, ஏனையோரினதோ தலையீடு ஏதுமின்றி ஜனாதிபதி என்ற முறையில் தனது நிறைவேற்று அதிகாரத்தைத் தனித்துப்பிரயோகிக்க அவர் ஆயத்தமாகிவிட்டார் என அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

ஜனாதிபதி தனக்கு ஏற்பட்டுள்ள வேலைப் பளுக்கள் காரணமாகவே கூட்டமைப்பின் தலைமைப் பொறுப்பில் இருந்து தன்னை விடுவித்துக் கொண்டார் என ஜனாதிபதி செயலகம் விடுத்த செய்திக்குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கூட்டமைப்பின் தலைமைப் பதவியை ஜனாதிபதி இராஜினாமாச் செய்தாலும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவியில் தொடர்ந்தும் நீடிப்பார் என்றும் கூட்டமைப்பின் தலைமைப் பதவியை அவர் துறந்ததற்குக் கருத்துமுரண்பாடு காரணம் அல்ல என்றும் கட்சி வட்டாரங்களில் கூறப்பட்டது.

ஆளுங்கூட்டமைப்பின் தலைவராக இருக்கும் வரை கூட்டமைப்பின் கூட்டங்களுக்குத் தலைமைவகிக்க வேண்டியவராகவும் -

ஜனாதிபதி என்ற முறையில் அவர் எடுக்கும் நடவடிக்கைகள் தொடர்பாக அக்கூட்டங்களில் பங்காளிக் கட்சிகளின் பிரதிநிதிகள் எழுப்பும் பல்வேறு கேள்விகளுக்கும், சர்ச்சைகளுக்கும் (16ஆம் பக்கம் பார்க்க)

## உயர்தரப் பரீட்சை முடிவுகள் நாளை

கொழும்பு,ஓக.5

கடந்த ஏப்ரல் மாதம் நடந்த ஜி.சீ.ஈ. (உயர்தர) பரீட்சையின் முடிவுகள் நாளை வெள்ளிக்கிழமை மாலை வெளியிடப்படும் என்று பரீட்சைத் திணைக்களம் தெரிவித்தது.

அன்று மாலை பரீட்சைத் திணைக்கள (16ஆம் பக்கம் பார்க்க)

## முல்லை. செயலகமும் பட்டதாரிகளால் முற்றுகை

முல்லைத்தீவு,ஓக.5

பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கும் திட்டத்தில் முல்லைத்தீவு மாவட்டப் பட்டதாரிகள் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டமைக்கு ஆட்சேபம் தெரிவித்து நூற்றுக்கு மேற்பட்ட பட்டதாரிகள் நேற்று முல்லைத்தீவு செயலகத்தை முற்றுகையிட்டனர். நேற்றுக் காலை 8.30 மணிமுதல் செயலகத்தை முற்றுகையிட்ட பட்டதாரிகள் செயலகத் (16ஆம் பக்கம் பார்க்க)

## ஈழவேந்தனின் ஒழுங்குப் பிரச்சினை நாடாளுமன்றில் விவாதிக்கப்படவில்லை

கொழும்பு,ஓக.5

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினரான ம.கா. ஈழவேந்தனின் நாடாளுமன்றச் சிறப்புரிமையை இந்தியா மீறிவிட்டதான ஒழுங்குப் பிரச்சினை நேற்று நாடாளுமன்றில் பிரஸ்தாபிக்கப்படவில்லை.

அண்மையில் பெங்களூரில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சிக்காகத் தூதாண்மை கடவுச்சீட்டில் சென்றிருந்த ம.கா.ஈழவேந்தனை சென்னை விமான நிலையத்தில் வைத்து இந்தியாவுக்குள் நுழைய விடாமல் அதிகாரிகள் திருப்பி அனுப்பியிருந்தனர்.

ஈழவேந்தனின் கோரிக்கையின் பேரில் நேற்று இந்த விவகாரம் நாடாளுமன்றத்தில் கேள்வி நேரத்தின் பின்னர் விவாதிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் இந்தியாவின் செய்கை இலங்கை - இந்திய நல்லுறவுக்கு ஈடுசெய்ய முடியாத பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது என்றும், இதனால் இந்த விடயத்தை இந்தியாவின் கவ (16ஆம் பக்கம் பார்க்க)

## இரணைமடுவில் 'ஹன்டர்' மோதி சைக்கிளில் வந்தவர் மரணம்!

மணல் ஏற்றிவந்த 'ஹன்டர்'ரக வாகனமும் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளானதில் சைக்கிளில் வந்த நபர் உடல் நசிந்து பரிதாபகரமாக உயிரிழந்தார்.

இச்சம்பவம், நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில் இரணைமடுச் சந்தியில் இடம்பெற்றது.

கிளிநொச்சி, பாரதிபுரம் மேற்கைச் சேர்ந்த பச்சையா ரத்தினசாமி (வயது-55) என்ற நபரே இவ்விபத்தில் உயிரிழந்தவராவார்.

சம்பவ இடத்துக்கு விரைந்த தமிழீழகாவல் துறையினர் விபத்துத் தொடர்பான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். 'ஹன்டர்' வாகனத்தின் சாரதியும் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனையின்பின் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

(ஐ-305-405)

## கருணாவின் சகா ஒருவர் ஏறாவூரில் சுட்டுக்கொலை

ஏறாவூர்,ஓக.5

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர், மாவடிவேம்புப் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு தமிழ் இளைஞர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

மாவடிவேம்பைச் சேர்ந்த கே.விமலேந்திரன (வயது-32) என்பவரே இச்சம்பவத்தில் கொல்லப்பட்டவராவார்.

செவ்வாய்க்கிழமை இரவு 8.30 மணியளவில் மேற்படி இளைஞர் தனது வீட்டில் இருந்தவேளை, மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு ஆயுதம் தாங்கிய இனந்தெரியாத நபர்கள் இவர்மீது சரமாரியாகத் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்து விட்டுத் தப்பிச்சென்றுள்ளனர்.

சம்பவ இடத்திலேயே மரணமான இளைஞரின் சடலம் நேற்றுக் (புதன்கிழமை) காலை செங்கலடி மாவட்ட வைத்தியசாலை, சவச்சாலையில் வைக்கப்பட்டிருந்தது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக் (16ஆம் பக்கம் பார்க்க)

## ஆடி அமாவாசைதினம் என்றாலும்

# புலமைப்பரிசில் பரீட்சை திட்டமிட்டபடி 15 ஆம் திகதி!

கொழும்பு,ஓக.5

ஐந்தாம் ஆண்டுப் புலமைப்பரிசில் பரீட்சை திட்டமிட்டபடி எதிர்வரும் 15ஆம் திகதி இடம்பெறும். பரீட்சைத் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் நடந்த கூட்டம் ஒன்றில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 15ஆம் திகதி இந்துக்களின் முக்கிய விரத தினங்களில் ஒன்றான ஆடி அமாவாசை வருவதால், பரீட்சைத் திகதியை மாற்றும்படி இந்து அமைப்புகளும், பொது அமைப்புகளும் பரீட்சை ஆணையாளரிடம் கோரிக்கை விடுத்திருந்தன.

இக்கோரிக்கை தொடர்பாக நேற்றுமுன்தினம் பரீட்சைத் திணைக்களத்தில் நடந்த கூட்டம் ஒன்றில் ஆராயப்பட்டது.

(16ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# நாடாளுமன்றில் ஒரு பிரேரணையைக் கூட சமர்ப்பிக்க வக்கில்லாத அரசாங்கம் இது!

## பேராசிரியர் பீரிஸ் விசனம்

கொழும்பு,ஓக.5

ஆட்சிப் பொறுப்பை ஏற்றது முதல் இது வரை ஒரு பிரேரணையைக் கூட இந்த அரசு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை. நாட்டின் அபிவிருத்திகளிலோ, மக்களின் பொருளாதார விடயங்களிலோ அரசுக்கு எவ்வித அக்கறையும் கிடையாது.

- இவ்வாறு முன்னாள் அமைச்சரும் ஐ.தே.க. எம்.பியுமான பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

நேற்று எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

நாட்டில் அமைதித் தீர்வு ஒன்றைக் காண்பதற்காக அரசு எடுக்கும் சமாதான முயற்சிகளுக்கு ஐ.தே.க. நிபந்தனையற்ற ஆதரவு வழங்க முன்வந்த போதிலும், அமைச்சர் அநுரா பண்டாரநாயக்கவும், ஜே.வி.பியினரும் அதனை நிராகரித்துவிட்டனர். சமாதானப் பேச்சுக்களை முன்னெடுக்கும் விடயத்தில் அரசுக்கு நிலையான கொள்கை கிடையாது.

வடக்கு - கிழக்கு இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபைக் கூட்டமைப்பின் பிரகாரம் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கத் தாம் தயார் என நோர்வேப் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கிஸனிடம் ஜனாதிபதி கூறியிருந்தார்.

ஆனால், அந்த அடிப்படையில் பேச முடியாது என ஜனாதிபதி இப்போது கூறிவருகின்றார். சமாதானப் பேச்சு விடயத்தில் ஜனாதிபதியும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசும் இரட்டை வேடம் பூண்டிருக்கின்றன.

பொதுவாக இந்த அரசுக்கு நாட்டைப் பற்றியோ, மக்களைப் பற்றியோ கவலை கிடையாது. நாடாளுமன்றத்தில் தனது அரசின் பெரும்பான்மையை நிருபிப்பதற்கான பகீரதப்பிரயத்தனங்களையே ஜனாதிபதி மேற்கொண்டு வருகின்றார்.

அரசின் வேலைகளை இன்று எதிர்க்கட்சிகளே செய்துகொண்டிருக்கின்றன. ஊடகச் சுதந்திரத்தை ஏற்படுத்தும் முயற்சிகளிலும் எதிர்க்கட்சிகளே ஈடுபாடு காட்டுகின்றன.

மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஆட்சியில் நாடாளுமன்றம் செயலிழந்து போயுள்ளது.

டொலரின் பெறுமதியும், பெற்றோல், ஷெல் காஸ் போன்றவற்றின் விலைகளும் உயர்ந்துள்ளன. அதனைக் கட்டுப்படுத்துவதற்கு அரசு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

நாட்டில் பாரிய பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுக் கொண்டு வருகின்றது. மக்கள் மீது வீணாகப் பளு சுமத்தப்படுகின்றது. தேர்தல் காலங்களில் மக்களுக்கு அளித்த வாக்குறுதி எதுவும் நிறைவேற்றப்படவில்லை.

- இப்படி பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் எம்.பி. குறிப்பிட்டார். (ஐ-க)

### கணக்கியல், வர்த்தக பட்டதாரிகளுக்கான கலந்துரையாடல்

உயர் தேசிய கணக்கியல், வர்த்தகப் பட்டதாரிகளுக்கான கலந்துரையாடல் ஒன்று, இன்று வியாழக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவகக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளதால் பட்டம்பெற்று வெளியேறிய அனைத்துப் பட்டதாரிகளும் இக்கலந்துரையாடலில் கலந்துகொள்ளுமாறு யாழ். மாவட்ட உயர் தேசிய கணக்கியல், வர்த்தகப் பட்டதாரிகள் சங்கம் அறிவித்துள்ளது. (8)

### பொதுக்கூட்டம் பிற்போடப்பட்டது

இன்று முற்பகல் 10 மணிக்கு அரச அதிபர் அலுவலகத்தில் நடைபெறவிருந்த பிரதேச செயலர், உதவி அரச அதிபர்களுடனான கலந்துரையாடல் தவிர்க்க முடியாத காரணத்தினால் எதிர்வரும் 17 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு பிற்போடப்பட்டுள்ளது என அரச அதிபர் அறிவித்துள்ளார். (-3)

### கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஓக.5

யாழ்ப்பாணம் விஞ்ஞான சங்கத்தின் தூய விஞ்ஞானம் பிரிவு 'ஏ' இன் ஆதரவில் விசேட கருத்தரங்கு ஒன்று, இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். பல்கலைக்கழக இரசாயனவியற்றுறை விரிவுரை மண்டபம் 1 இல் இடம்பெறவுள்ளது.

இதில் பௌதிகவியல் கதிரியக்கச் சிகிச்சை என்னும் தலைப்பில் கலாநிதி தவேந்திரராஜா கருத்துரை வழங்குவார். (-201)

## காணாமற்போனோர் வழக்கு:

# தமக்குரிய சட்டத்தரணியை நியமிக்க கோப்ரல் ராஜபக்ஷவுக்கு அவகாசம்

யாழ்ப்பாணம்,ஓக.5

குடாநாட்டில் 1995 - 1996 ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் படையினரால் கைதுசெய்யப்பட்ட பின்னர் காணாமற்போனோர் என்று கூறப்படும் அறுவர் தொடர்பான ஆள்கொணர்வு வழக்குகளில் முதலாவது எதிர்மனுதாரரான லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷவுக்கு சட்டத்தரணி ஒருவரை நியமிக்க மேலும் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு யாழ். மேல் நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்ட சமயம் மேல் நீதிமன்ற நீதிபதி கே.பி.எஸ்.வரதராஜா இந்தக் கால அவகாசத்தை வழங்கினார்.

இராணுவ லான்ஸ் கோப்ரலாக இருந்த ராஜபக்ஷ சார்பில் அரச சட்டவாதி ஆஜராக மறுப்புத் தெரிவித்ததையடுத்து, தமக்கென சட்டத்தரணி ஒருவரை ஏற்படுத்துமாறு நீதிமன்றம் ராஜபக்ஷவைக் கேட்டிருந்தது.

தனிப்பட்ட ரீதியில் சட்டத்தரணியை ஏற்படுத்த முடியாத பட்சத்தில் சட்ட உதவி நிறுவனம் மூலம் சட்டத்தரணி ஒருவரை ஏற்பாடு செய்யும்படியும் -

சட்ட உதவி நிறுவனத்தின் யாழ். இணைப்பாளர் சட்டத்தரணி செல்வி சாந்தா அபிமன்னசிங்கத்துடன் தொடர்பு கொண்டு சட்ட உதவியைப் பெறும்படியும் -

மேல் நீதிமன்றம் கடந்த தவணையின் போது ராஜபக்ஷவைக் கேட்டிருந்தது.

ராஜபக்ஷவின் கோரிக்கையை அடுத்து சட்டத்தரணி சாந்தா அபிமன்னசிங்கம் சட்ட உதவி மன்றத்தின் தலைவர் ஹேமந்த வர்ணகுலசூரியவுடன் தொடர்புகொண்டார்.

கொலை வழக்கு ஒன்றில் மரண தண்டனை பெற்ற ஒரு கைதி சார்பில் தமது மன்ற உறுப்பினர்கள் ஆஜராகமாட்டார்கள் என்று அவர் சாந்தா அபிமன்னசிங்கத்திடம் தெரிவித்திருந்தாராம்.

நேற்று இந்த வழக்கு நீதிபதி கே.பி.எஸ். வரதராஜா முன் எடுக்கப்பட்ட சமயம் இந்த விவரங்கள் நீதிமன்றத்தில் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டன.

அதையடுத்து கொழும்பில் இயங்கும் சட்ட உதவி நிறுவனங்கள் மூலமோ அல்லது தனிப்பட்ட வகையிலோ சட்டத்தரணி ஒருவரைத் தமக்கென ஏற்படுத்தி, அது பற்றிய விவரத்தைச் செப்ரெம்பர் மாதம் 30 ஆம் திகதி நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கும்படி எதிர்மனுதாரருக்கு உத்தரவிட்ட நீதிபதி, அன்றைய தினம் வரை வழக்கை ஒத்திவைத்தார்.

எதிர்மனுதாரரான ராஜபக்ஷ, கிருஷாந்தி குமாரசுவாமி கொலை, பாலியல் வல்லுறவு வழக்கில் குற்றவாளியாகக் காணப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-3-5)

# கோப்பாய் விபத்து தொடர்பாக சாரதி, உதவியாளர் கைது!

யாழ்ப்பாணம்,ஓக.5

கோப்பாய்ப் பகுதியில் இடம்பெற்ற விபத்துச் சம்பவம் தொடர்பாகச் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட இருவரை எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்.நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

பருத்தித்துறை வீதியில் உள்ள மாதா கோயிலடியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் தலை நசியுண்டு உயிரிழந்தார். இச்சம்பவம் தொடர்பாக விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனசாரதியான ஜெயவீரசிங்கம் குணசீலன், அவரது உதவியாளரான அரியேந்திரம் மயூரன் ஆகிய இருவரையும் கோப்பாய் பொலீஸார் கைதுசெய்தனர்.

இருவரையும் யாழ்.நீதிமன்றில் நீதிவான் இ.த.விக்கினராசா முன் ஆஜர் செய்தபோது இவ்விரு சந்தேகநபர்களையும் எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

இதேவேளை, சம்பவம் இடம்பெற்ற போது இந்த இருவரும் தாங்கள் சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி வாகனத்தைச் செலுத்தினர் என்று அங்கிருந்தவர்களிடம் கூறியதாக சாட்சி ஒருவர் மன்றில் தெரிவித்தார்.

இதனை அடுத்து இவ்விரு சந்தேகநபர்களையும் எதிர்வரும் 9 ஆம் திகதி அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்துமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இதற்கமையச் சந்தேகநபர்களை அடையாளம் காணுவதற்கான அடையாள அணி வகுப்பு எதிர்வரும் திங்கட்கிழமை யாழ்.மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் இடம்பெறவுள்ளது.

இதேவேளை - விபத்துடன் சம்பந்தப்பட்ட வாகனத்தின் உரிமையாளரை நேற்றுக் கைது செய்த கோப்பாய் பொலீஸார், அவரை இன்று நீதிமன்றில் ஆஜர் செய்வர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-5)

# கல்வியியல் கல்லூரி மாணவன் நிறுத்தப்பட்டது பற்றி விசாரணை

## பீடாதிபதிக்கு ஆணைக்குழு அழைப்பு

யாழ்ப்பாணம்,ஓக.5

யாழ். தேசியக் கல்வியியல் கல்லூரியிருந்து மாணவர் ஒருவர் இடைநிறுத்தப்பட்டமை தொடர்பான முறைப்பாடு ஒன்றின் மீதான விசாரணைக்காக யாழ். கல்வியியல் கல்லூரிப் பீடாதிபதி மற்றும் கல்வியியல் கல்லூரிகளின் ஆணையாளர் ஆகியோரை எதிர்வரும் 10 ஆம் திகதி கொழும்பிலுள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைமையகத்திற்குச் சமுகமளிக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

யாழ். கல்வியியல் கல்லூரியிலிருந்து பீடாதிபதியால் இடைநிறுத்தப்பட்டார் என்று கூறப்படும் ஆர்.ரவிராஜ் என்பவர், மனித உரிமைகள ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்திருந்தார். அந்த முறைப்பாட்டை அடுத்தே விசாரணைக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது. (ஐ-9)

### சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஓக.5

சில்லாலை கதிரைமாதா ஆலய வருடாந்த திருவிழா நாளை வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

ஆரம்ப நிகழ்வுகளைப் பங்குத்தந்தை அருட்திரு. ஏ.பி. அந்தோனிப்பிள்ளை அடிகளார் நடத்திவைப்பார்.

எதிர்வரும் 14 ஆம் திகதி மாலை 7 மணிக்கு மரியாளின் மாலை ஆராதனையும் நற்கருணைப் பவனியும் இடம்பெறும். மறுநாள் காலை பெருநாள் பாடல் பூசையும் திருச்சொரூபப் பவனியும் இடம்பெறவிருக்கின்றன. (3-235)

★ ★ ★

தென்மராட்சி,ஓக.5

சாவகச்சேரி, விளைவேலி துர்க்கா அம்பாள் ஆலய வருடாந்த பெருந்திருவிழா எதிர்வரும் ஆறாம் திகதி முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும்.

ஓகஸ்ட் 14 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்குத் தேர் உற்சவமும் மறுநாள் காலை 9.30 மணிக்குத் தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (3-31-78-117)


★ ★ ★

கொழும்புத்துறை,ஓக.5

யாழ்.புனித மரியன்னை பேராலய வருடாந்த திருவிழா நாளை மாலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

நவநாள் ஆராதனைகளைத் தொடர்ந்து 14 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு நற்கருணைப் பெருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்குத் திருவிழாத் திருப்பலியும் மாலை திருச்சொரூபப் பவனியும் ஆசிரும் இடம்பெறும். (3-30)




# யாழ்.வங்கிப் பணியாளர்கள் நேற்று கறுப்புப்பட்டிப் போர்

## ஒரு மணி நேரம் மறியலிலும் ஈடுபட்டனர்

யாழ்ப்பாணம்,ஓக.5

மக்கள் வங்கியின் மானிப்பாய் கிளையின் காசாளர் சுந்தரம் பஞ்சலிங்கம், அண்மையில் இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து குடாநாட்டில் உள்ள வங்கி ஊழியர்கள் கறுப்புப் பட்டியணிந்து நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

நேற்றுக் காலை குடாநாட்டிலுள்ள அனைத்து வங்கி ஊழியர்களும் கறுப்புப் பட்டியணிந்து சேவையில் ஈடுபட்டதுடன் முற்பகல் 10 மணி முதல் சுமார் ஒரு மணித்தியாலம் தமது கடமைகள் அனைத்தையும் இடைநிறுத்தி சுலோக அட்டைகளைத் தாங்கியபடி தத்தமது வங்கிக் கிளைகளுக்கு முன்பாக அமர்ந்து எதிர்ப்புப் போராட்டத்திலும் ஈடுபட்டனர்.

சுலோக அட்டைகளில் 'பஞ்சலிங்கத்தின் கொலைக்கு யார் காரணம்?', 'வங்கி ஊழியர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்து', 'வங்கி ஊழியரின் படுகொலையை வன்மையாகக் கண்டிக்கின்றோம்' என்ற வாசகங்கள் எழுதப்பட்டிருந்தன.

இலங்கை வங்கி, மக்கள் வங்கி, வர்த்தக வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, ஹற்றன் நஷனல் வங்கி மற்றும் செலான் வங்கி ஆகியவற்றைச் சேர்ந்த சகல தர ஊழியர்களும் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். இதனால், குடாநாட்டில் சகல வங்கிகளின் பணிகளும் ஒரு மணித்தியாலம் ஸ்தம்பிதமடைந்திருந்தது.

(போராட்டத்தில் ஈடுபட்டிருந்த வங்கி ஊழியர்களைப் படங்களில் காணலாம்).

(8-5-173-139-31)

உதயன்

# ஏமாற்று நாடகத்தில் மூன்று முகங்கள்

வடக்கு - கிழக்கு இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை ஒன்றை வழங்கவேண்டும் என்று தமிழர் தரப்பு வற்புறுத்தி வருகின்றது. இது தொடர்பாக விடுதலைப் புலிகள் சமர்ப்பித்துள்ள யோசனையின் அடிப்படையில் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பது தொடர்பான விடயத்தில் நாட்டின் தலைவியான ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நாளொரு கதையும் பொழுதொரு பேச்சுமாகக் கருத்து வெளியிட்டு வருகின்றார் என இப்பத்தியில் ஏற்கனவே பல தடவைகள் சுட்டிக்காட்டிவந்துள்ளோம. அதனை உறுதிப்படுத்தும் வகையில் தொடர்ந்து செயற்பட்டு வருகிறார் போலும் ஜனாதிபதி.

இந்த விடயத்தில், சமாதான முயற்சிகளுக்கு அனுசரணை வழங்கும் நோர்வேத் தரப்புக்கு ஒன்று கூறுகின்றார். தன்னைச் சந்திக்கும் தமிழ் எம்.பிக்களுக்குப் பிறிதொன்றைக் கூறுகின்றார். தனது கட்சியின் பிரமுகர்களுக்கு வேறொரு கதை விடுகின்றார். தனது அரசின் ஏனைய கூட்டமைப்புக் கட்சிகளைச் சந்திக்கும்போது தட்டையே திருப்பித் தலைகீழாக மாற்றிவிடுகின்றார். நாட்டு மக்களுக்கு உரையாற்றும் போதே ஒன்றையுமே திட்டவட்டமாகத் தெளிவுபடுத்தாமல் குழப்பமாகக் கருத்தை முன்வைக்கிறார்.

அந்த வகையில், இப்போது தனது அரசின் பங்காளிக் க்ட்சிகளுடனான கூட்டத்தில் வைத்து "இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை விடயத்தின் அடிப்படையில புலிகளுடன் சமாதானப் பேச்சுகளை ஆரம்பிப்பதில்லை என்ற தனது கூட்டமைப்பின் நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை" - என்று அவர் கூறினார் என அரசுத் தரப்பு நாளேடு நேற்றுக் குறிப்பிட்டது. ஆனால், செய்தி வெளியான கையோடே ஜனாதிபதி அப்படிக் கூறவில்லை என்ற மறுப்புத் தகவல் அரசுப்பக்கத்தில் இருந்து வெளிவந்துள்ளது.

ஆக, இந்தக் கூட்டம் தொடர்பாக அரசுத் தரப்பிலிருந்து வெளியான தகவல்களின்படி இடைக்கால நிர்வாகம் குறித்துப் பேசும் விடயத்தில் ஜனாதிபதி இன்னும் தீர்க்கமான ஒரு முடிவுக்கு வரவில்லை என்பது தெளிவு.

உண்மையில் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை அடிப்படையில் பேச்சை ஆரம்பிக்க அவர் விரும்பவில்லை என்றால், அனுசரணையாளர்களான நோர்வேத் தரப்பிடமும், சர்வதேச சமூகத்திடமும் தமிழர் தரப்பிடமும் இதே கருத்தை வெட்டு ஒன்று துண்டு இரண்டாகக் கூறி நிலைமையை அவர் தெளிவுபடுத்த வேண்டும். அப்படி அவர் செய்வாராயின், ஈழத்தமிழர்கள் தங்களுக்குரிய பாதையில் தாங்களே விரைந்து நடைபோட அது பேருதவியாக இருக்கும்.

ஆனால், அவர் அப்படிக்கூறமாட்டார். சர்வதேச உலகத்திடமும் மக்களிடமும் புரியாத வகையில் புதுக் கதை விடுவார் அவர்.

அவரின் இந்தப் போக்கை மட்டக்களப்பு மாவட்டத் தமிழ்க் கூட்டமைப்பு எம்.பியும், முன்னாள் பத்திரிகையாளருமான அரியநேந்திரன், அம்பிலாந்துறையில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் புட்டுப்புட்டு வைத்திருக்கின்றார்.

*"ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் மூன்று முகங்களுடன் உள்ளார். ஒன்று போர்முகம், மற்றது சமாதானமுகம், மூன்றாவது சதிமுகம்.*

*"சர்வதேச சமூகத்திடமிருந்து நிதி உதவிகளைப் பெற்றுத் தென்பகுதியை அபிவிருத்தி செய்யவும், சிங்களத்தின் இராணுவ வலிமையைப் பெருக்கவும் அவர் சமாதான முகத்தைக் காட்டுகிறார்.*

*"சிங்களப் பேரினவாதிகளான ஜே.வி.பி. போன்ற தரப்பினரிடம் தனது போர் முகத்தைக் காட்டி ஆட்சி அதிகாரத்தைத் தக்கவைக்கப் படாதபாடுபடுகின்றார்.*

*"ஈழத் தமிழ்மக்களிடம் தன்னை ஒரு சமாதான விரும்பியாகக் காட்டிக்கொண்டு மறுபுறத்தில் யுத்தத்திற்கு ஆயத்தமாகும் சதிமுகப் போக்கை முன்னெடுக்கிறார்".*

இப்படி விளக்கியிருக்கிறார் அரியநேந்திரன் எம்.பி.

ஆக, சர்வதேச நிதிக்கும் ஆதரவுக்கும் சமாதான முகம், ஆட்சியைத்தக்கவைக்கப் போர் வெறிமுகம், ஈழத் தமிழரை ஏமாற்றச் சதிமுகம் இதுதான் ஜனாதிபதி சந்திரிகா தனது கபட நாடகத்தை அரங்கேற்றுவதற்குப் போடும் மூன்று வேடங்கள்.

இந்த மூன்று வேடங்களையும் அம்பலப்படுத்தாமல் கதையை நகர்த்திச் செல்வதுதான் அவரது ஆட்சி அதிகார நாடகத்தின் மூலத்திட்டம்.

ஆனால், அது பிசுபிசுத்துப்போய் அவரது வேடம் சர்வதேச சமூகத்தின் முன்னால் கலைந்து நாடகத்தின் மூலக்கதையே பொலபொலத்துப்போயிருப்பது தான் கதாசிரியருக்குத் துன்பியல் நிகழ்வாகும்.

சமாதான வேடம் அம்பலமானதால் சர்வதேச சமூகம் அவரை ஒதுக்கத்தொடங்கிவிட்டது.

போர்வெறி வேடம் சிங்களத் தீவிரவாதிகளுக்கு விளங்கிவிட்டதால் அந்த வேடத்தை அவர் எப்போது கலைத்தாலும் அவரது அரசை வீட்டுக்குக் கலைக்க அவர்கள் தயாராகக் காத்திருக்கின்றனர்.

தமிழ் மக்கள் முன் அவர் போடும் சதிவேடம் 1995 இலிருந்தே எடுபடாமல் போய்விட்டது.

இந்த அரசின் ஏமாற்று நாடகத்தில் கதாநாயகி தாங்கிய மூன்று வேடங்களும் கலைந்த நிலையில் பார்வையாளர்களான சர்வதேச சமூகம் தமிழர்கள், சிங்களவர்கள் உட்பட நாட்டின் ஏனைய மக்கள் அனைவர் முன்னாலும் தோற்றுப்போய் நிற்கிறார் நாடகத்தின் கதாநாயகியும் கதாசிரியரும் இயக்குநருமான ஜனாதிபதி.

மூலக் கதாபாத்திரங்களில் மாற்றம் வந்தாலன்றி இந்த நாடகம் கடைத்தேறுவது கஷ்டமே.

நீதிமன்ற உத்தரவில் பறிமுதலான

# தமிழக மீனவரின் 4 றோலர்கள் தீவுப்பகுதிப் பயணிகள் சேவையில்

யாழ்ப்பாணம்,ஓக.5

இலங்கைக் கடற்பரப்புக்குள் ஊடுருவி மீன்பிடித்த குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்களிடம் இருந்து நீதிமன்றத்தினால் பறிமுதல் செய்யப்பட்ட றோலர்களில் நான்கைத் தீவுப்பகுதிக்கான படகுச் சேவையில் ஈடுபடுத்துவதற்கென யாழ்.செயலகம் பொறுப்பேற்றுள்ளது.

நீதிமன்ற உத்தரவின் பேரில் பறிமுதல் செய்யப்பட்ட தமிழக மீனவர்களின் றோலர்கள் மீன்பிடி அமைச்சினால் பொறுப்பேற்கப்பட்டுள்ளன.

இந்த றோலர்களில் நான்கு றோலர்களைத் தீவுப்பகுதியில் பயணிகள் சேவைககு வழங்கும்படி யாழ்.அரச அதிபர் மீன்பிடி அமைச்சிடம் கோரியிருந்தார்.

இந்தக் கோரிக்கையை ஏற்று, நான்கு றோலர்களை அரச அதிபரிடம் அமைச்சு கையளித்துள்ளது.

இந்த றோலர்களில் இருக்கைகள் அமைத்து அவற்றை நவீன மயப்படுத்தும் பணிகள் தற்சமயம் நடைபெற்று வருகின்றன.

பணிகள் பூர்த்தியடைந்ததும் இந்தப் படகுகள், தற்சமயம் படகுகளைச் சேவையில் ஈடுபடுத்தும் கூட்டுறவு அமைப்புக்களிடம் கையளிக்கப்படவிருக்கின்றன.

நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு போன்ற தீவுகளுக்கான சேவைகளை நடத்துவதற்கெனச் சம்பந்தப்பட்ட கூட்டுறவு அமைப்புக்களிடம் இவை கையளிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-3)

# குடாநாட்டுக்கு மீண்டும் நீர் மின்சாரம் ஜப்பானியக்குழு யாழ். வந்து ஆராய்ந்தது

யாழ்ப்பாணம்,ஓக.5

குடாநாட்டுக்கு மீண்டும் நீர் மின்சாரம் வழங்கும் சாத்தியம் குறித்து ஜப்பான் சர்வதேசக் கூட்டுத்தாபனத்தின் பிரதிநிதிகள் யாழ்ப்பாணத்தில் ஆராய்ந்துள்ளனர்.

வவுனியாவரை விநியோகிக்கப்படும் நீர் மின்சாரத்தை ஏ-9 வீதியூடாகக் கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணத்துக்கும் வழங்க மின்சார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் 132 கே.பி. மின் இணைப்புக்கள் மற்றும் சுன்னாகம், கிளிநொச்சியில் மின்நிலையங்கள் அமைக்கப்படவிருக்கின்றன.

இத்திட்டத்துக்கான செலவில் அரைவாசியை ஜப்பானும் எஞ்சிய தொகையை ஜேர்மனியும் வழங்க முன்வந்துள்ளன.

இந்தப் பணிகளை முன்னெடுப்பது தொடர்பான கலந்துரையாடல்களை நடத்த ஜப்பான் சாவதேச கூட்டுத்தாபனத்தின் ஆறு பிரதிநிதிகள் யாழ். வந்திருந்தனர்.

கடந்த திங்கட்கிழமை கிளிநொச்சி அரச அதிபர் தி.இராசநாயகத்தையும், நேற்று முன்தினம் யாழ் அரச அதிபர் செ.பத்மநாதனையும் இக்குழு சந்தித்துக் கலந்துரையாடியது.

மின்சார சபையின் வடபிராந்திய உதவிப் பொதுமுகாமையாளர் எஸ்.கமலநாதனும் மின்சாரசபையின் பிரதம பொறியியலாளரும் இந்தச் சந்திப்புக்களில் கலந்துகொண்டனர்.

நீர் மின்சாரம் வழங்குவதற்கான சாத்தியம் குறித்து இக்குழு விரிவாக ஆராய்ந்த பின் நேற்றுக் கொழும்பு திரும்பியது. (எ-3-6)

# இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்ட மாத்திரையைப் பயன்படுத்தத் தடை

## சுகாதார நலனோம்பு அமைச்சு விதித்தது

வலி.தென்மேற்கு,ஓக.5

அரச வைத்தியசாலைகளில் தற்போது பயன்படுத்தப்பட்டுவரும் பென்சிலின் - 125. மில்லிக்கிராம் (Phenoxy methy Pencillin - 125 mg) என்ற மாத்திரையை (குளிகை) பயன்படுத்த வேண்டாம்(பாவிக்க வேண்டாம்) என்றும் -

இதனை உடனடியாக செயற்படுத்துமாறு கோரியும் சுகாதார அமைச்சு அவசர சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

சுகாதார பராமரிப்பு, போஷணை அமைச்சின் மருத்துவத் தொழில்நுட்ப, விநியோகப் பிரிவின் பணிப்பாளர் டாக்டர் பி.எவ்எஸ்சமரநாயக்கா இந்த அவசர சுற்றறிக்கையை நாட்டிலுள்ள சகல பிரதி மாகாண சுகாதாரசேவைப் பணிப்பாளர் பணிமனைகளுக்கும் அரசினர் வைத்தியசாலைகளின் பொறுப்பதிகாரிகளுக்கும் 'பக்ஸ்' மூலம் அனுப்பிவைத்துள்ளார்.

இந்தியாவின் பெங்களூரில் உள்ள "Strides Arcolaf Ltd" என்ற நிறுவனம் உற்பத்தி செய்த இந்தப் பென்சிலின் - 125 மில்லிகிராம் குளிகையானது பாவனைக்கு உதவற்றது என்று கண்டறிப்பட்டுள்ளது என்றும் -

ஆகவே, இதன் பாவனையை உடன் நிறுத்துமாறும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனியார் பாமஸிகளிலும் இதன் பாவனை உடன்நிறுத்தப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைகளின் பொறுப்பதிகாரிகளுக்கு நேற்றுமுன்தினம் இந்தச் சுற்றறிக்கை கிடைத்தது. (எ-135)

# பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம்,ஓக.5

வல்வை சிதம்பராக் கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு விழா நாளை மறுதினம் சனிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் ந.அரியரத்தினம் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக் கழக பொருளியல்துறைப் பேராசிரியர் வி.வித்தியானந்தனும், சிறப்பு விருந்தினராக கடற்புலிகளின் வடமராட்சிக் கோட்டப் பொறுப்பாளர் சி.அன்பழகனும் கலந்துகொள்வர். (எ-5)

# கடற்றொழில் சங்கங்களுக்கு மீன்பிடிச் சாதனங்கள்

யாழ்ப்பாணம்,ஓக5

'நிக்கொட்' திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட குடாநாட்டைச் சேர்ந்த பதினெட்டு கடற்றொழில் 'சங்கங்களுக்கு மீன்பிடிச் சாதனங்கள் வழங்கப்படவுள்ளன.

யாழ்.மாவட்ட கடற்றொழில் நீரியல் திணைக்கள வட்டாரங்கள் இதனைத் தெரிவித்தன.

இந்த உதவித் திட்டத்தின் கீழ் 82 படகிற்கான வெளி இணைப்பு இயந்திரங்களும் 58 தும்புக் கண்ணாடிப் படகுகளும், 117 கட்டுமரங்களும் இம்மாத இறுதியில் உரியவர்களுக்கு வழங்கப்படும்.

இதற்கிடையில், 'நிக்கொட்' திட்டத்தின்கீழ் முதற்கட்டமாக 65 படகின் வெளி இணைப்பு இயந்திரங்களும், 20 தும்புக் கண்ணாடிப் படகுகளும், 23 கட்டுமரங்களும 45 லட்சம் ரூபா பெறுமதியான மீன்பிடி வலைகளும் வழங்கப்படவுள்ளன என்றும் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் க.தர்மலிங்கம் தெரிவித்தார். (எ-7)

# நூல் வெளியீட்டு விழா

காரைநகர்,ஓக.5

காரைநகர் மணிவாசகர் சபை மற்றும் நியநதிரியின் அனுசரணையுடன் கலாநிதி சிவஸ்ரீ க.வைத்தீஸ்வரக் குருக்கள் எழுதிய "அபரக்கிரியைகள் சிலவிளக்கங்கள்" என்னும் நூல் வெளியீட்டுவிழா எதிர்வரும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல 2மணிக்கு நல்லூர் சிவன் கோயிலில் நடைபெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழகக் கலைப்பீடாதிபதி பேராசிரியர் கோபாலகிருஷ்ண ஐயர் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெறும்.

வரவேற்புரையை காரைநகர் ம.ம வித்தியாலய அதிபர் பண்டிதர் மு.சு. வேலாயுதபிள்ளையும் ஆசியுரையைச் சர்வதேச இந்துமத குரு பீடாதிபதி சிவஸ்ரீ ஐ.மகேஸவரக்குருக்களும் நூல் அறிமுகவுரையை இணுவில் காயத்திரி பீடத்தைச் சேர்ந்த சிவஸ்ரீ தா. மகாதேவக் குருக்களும் நிகழ்த்துவர். இந்நூல் அமரர் பிரம்மஸ்ரீ க.மங்களேஸவரக் குருக்கள் ஞாபகார்த்தமாக வெளியிடப்படுகிறது. (எ-73)

# புற்றுநோயாளர் காப்பகம் மருதனார்மடத்தில் அமையும்

யாழ்ப்பாணம்,ஓக.5

லண்டன் 'கேன்' அமைப்பின் ஏற்பாட்டிலான புற்றுநோயாளர் காப்பகம் மருதனார்மடத்தில் அமைக்கப்படவிருக்கின்றது.

லண்டனில் வாழும் புலம்பெயர்ந்த டாக்டர்கள் ஒன்று சேர்ந்து அமைத்துள்ள 'கேன்' அமைப்பு யாழ்ப்பாணத்தில் புற்றுநோயாளர் காப்பகம் ஒன்றை அமைக்க 50 லட்சம் ரூபாவை ஒதுக்கியிருந்தது.

இந்தக் காப்பகத்தை நாவாந்துறையில் அமைக்க ஒரு குடும்பம் நன்கொடையாகக் காணி வழங்கியிருந்தது. அக்காணியில் அரசசார்பற்ற நிறுவனம் ஒன்று தனது பணிகளை மேற்கொள்வதால், அதில் காப்பகம் அமைக்க முடியாத நிலை ஏற்பட்டது.

இதையடுத்து இந்தக் காப்பகத்தை மருதனார்மடத்தில் அமைக்கத் தற்சமயம் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு இம்மாத இறுதியில் இடம்பெறவிருக்கின்றது. (எ-3)

# பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து வலுவூட்டல் கருத்தரங்குகள்

கொழும்புத்துறை,ஓக.5

சர்வோதய நீதிச்சேவை இயக்கத்தினால் கிராமமட்டத்தில் பெண்கள் வலுவூட்டல் கருத்தரங்குகள் நடத்தப்பட்டு வருகின்றன.

கிராம மக்களுக்கும், பாடசாலைகள் தோறும் மாணவர்களுக்கும், பெண்கள் பிரச்சினைகள், அவற்றை எதிர்கொள்ளல முதலிய பல்வேறு விடயங்கள் தொடர்பாக வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

வாதரவத்தை, ஊரெழு, துணவி, செல்வபுரம், மயிலங்காடு ஆகிய பகுதிகளில் தற்போது இக்கருத்தரங்குகள நடைபெற்று வருவதாகச் சர்வோதய அமைபபின் மாவட்ட நீதிச்சேவை இணைப்பாளர் சஞ்சய்காந்த் தெரிவித்தார்.

அதேவேளை, இம்மாத இறுதியில் திருமணப்பதிவு, பிறப்பு, இறப்புப் பதிவு அடையாள அட்டை, சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கல் என்பவற்றிற்கான நடமாடும் இலவச சேவைகளை கிராம மட்டத்தில் நடத்தவுள்ளதாகவும் -

மேலதிக உதவிகள் தேவைப்படுவோர் திங்கள், சனிக்கிழமைகளில் சர்வோதய நிலைய நீதிச்சேவை அமைப்புடன் தொடர்புகொள்ளலாம் என்றும் - அவர் மேலும் தெரிவித்தார். (எ-30)

**நாளை**

ஆடி 22
வெள்ளிக்கிழமை
(06.08.2004)
திதி : ஷஷ்டி
மாலை 6.17 வரை.
நட்சத்திரம் : ரேவதி
பிற்பகல் 2.22 வரை.
சுபநேரம்: 6.04 - 7.34
ராகுகாலம்: 10.34 - 12.04
(பழைய நேரப்படி)

**உதவாக்கு**

முன் சிந்தித்துப் பின் செயற்பட்டால் உனக்கே வெற்றி.

## கருணையம்பதி மூத்த விநாயகர் கோயில் வழிபடுவோர் சபை நடத்திய அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பு முடிவுகள் (02.08.2004)

1ஆவது பரிசு அதிர்ஷ்ட ரிக்கற் இல: 1698
2ஆவது பரிசு அதிர்ஷ்ட ரிக்கற் இல: 4784
3ஆவது பரிசு அதிர்ஷ்ட ரிக்கற் இல: 0481
4ஆவது பரிசு அதிர்ஷ்ட ரிக்கற் இல: 2863 A
5ஆவது பரிசு அதிர்ஷ்ட ரிக்கற் இல: 0999
6ஆவது பரிசு அதிர்ஷ்ட ரிக்கற் இல: 0532
7ஆவது பரிசு அதிர்ஷ்ட ரிக்கற் இல: 0629
8ஆவது பரிசு அதிர்ஷ்ட ரிக்கற் இல: 1188

அதிர்ஷ்ட ரிக்கற்களை கொண்டுவந்து பரிசுகளைப் பெற்றுக்கொள்ளவும்.

சி.தியாகேஸ்வரன்,
தலைவர்.

(34901)

மாவட்ட வைத்திய கலாநிதி திரு. கதிரவேற்பிள்ளை தலைமையில் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்டது.


# நல்லைக் கந்தன் உற்சவம் குறித்து மாநகர சபையில் ஆலோசனைக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஓக.5

நல்லூர்க் கந்தன் ஆலய வருடாந்த உற்சவம் தொடர்பான ஆலோசனைக் கூட்டமொன்று எதிர்வரும் 10ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு யாழ்.மாநகரசபையின் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

மாநகரசபை ஆணையாளர் கலாநிதி க.குணராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்த ஆலோசனைக் கூட்டத்தில் ஆலயத்தின் உற சவகாலத்தில் பணியாற்றவுள்ள முதலுதவிப்பிரிவினர், பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், குடிதண்ணீர் விநியோகப் பகுதியினர், யாழ்.போக்குவரத்துப் பொலீஸ் அதிகாரிகள், வடபிராந்திய போக்குவரத்துச் சபையினர் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் ஆலய உற்சவ தினங்களில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள செயற்பாடுகள் குறித்தும் நடைமுறைப் படுத்தப்படவுள்ள திட்டங்கள் குறித்தும் ஆராயப்படவுள்ளதால் சம்பந்தப்பட்ட அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு ஆணையாளர் க.குணராசா கேட்டுள்ளார். (எ-13)

## விரல்கள் துண்டிப்பு

இயங்கிக்கொண்டிருந்த இரண்டு சில்லு உழவு இயந்திரத்தில் (லான்ட்மாஸ்டர்) திருத்தவேலை மேற்கொண்டவரின் இரண்டு விரல்கள் வெட்டப்பட்டு காயமடைந்த சம்பவம் கடந்த செவ்வாய்க் கிழமை காலை மீசாலை தெற்கில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த இராசரத்தினம் தபாலசிங்கம் (வயது 55) என்பவரே இதில் காய மடைந்த நிலை யில் சாவகச்சேரி ஆஸ்பத்திரி யில் அனுமதிக் கப்பட்டு மேலதிக சிகிச்சைக் காக யாழ் போதனாவைத தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (ஒ-117)

## பாதீனியம் அதிகரிப்பு

உரும்பிராய் மேற் குப்பகுதியில் மீண்டும் பாதீனியம் களை அதி கரித்துக் காணப்படு கிறது.

குறிப்பாக மூன்று கோயிலடிப் பகுதியில் கருணாகரப்பிள்ளையார் ஆலய வெளிவீதியைச் சுற்றி பெருமளவில் பாதீ னியம் காணப்படுகிறது.

அப்பகுதியில் ஏரா ளமான விவசாய நிலங் கள் உள்ளதால் அந்த இடங்களிலும் பாதீனி யம் பரவும் அபாய நிலை தோன்றியுள்ளது. அத்துடன் கோண்டா வில், இணுவில் காரைக கால் சிவன் கோயில் பகுதியிலும் பாதீனியம் அதிகளவில் காணப்ப டுகிறது. (ஒ-49)

## கணனி அறை நிர்மாணிக்க நிதி

தென்மராட்சி,ஓக.5

தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த இரு பாடசாலைகளுக்கு கணனி செயற்பாட்டு அறை நிர்மாணிக்க ஆசிய அபிவிருத்தி வங்கியினர் நிதி வழங்கியுள்ளனர்.

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, வரணி மகா வித்தியாலயம் ஆகிய வற்றுக்கே நிதி வழங் கப்படவுள்ளதாக மாகா ணக் கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித் துள்ளார். (ஒ-117)

## சுயதொழில் கடனுதவி

சில்லாலை கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களுக்கு சுழற்சி முறையிலான சுயதொழில் முயற்சிக் கடன் வழங்குவதற்கென கியூடெக் நிறுவனம் ஒரு லட்சம் ரூபாவை வழங்கியுள்ளது.

கால்நடை வளர்ப்பு, விவசாயம், கோழி வளர்ப்பு, சிறு வியாபா ரம் ஆகிய சுய தொழில முயற்சிகளுக்கு சங்க உறுப்பினர்களுக்கு இக்கடனுதவி சுழற்சி முறையில் வழங்கப்படு மென்று சங்கத் தலைவா இதுபற்றித் தகவல் தரு கையில் தெரிவித்தார். (எ-135)


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

| | | | |
|---|---|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 600 | டிக்கட்டின் நிறம் - நீலம | |
| திகதி | 03-08-2004 | செல்லுபடியாகும் தொடர் இல. | 4843583-4858808 |

லக்கினம் மீனம்

வெற்றி இலக்கங்கள் 06 09 35 47

ஜக்பொட் பரிசு ரூபா.58,14,875/- வெல்லப்படவில்லை.
இந்த செவ்வாய்க்கிழமை ஜக்பொட் ரூபா. 61,95,525/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1.இல | 3,40,931 | 10/- | 34,09,310/- |
| 2.இலக்கங்கள் | 31,293 | 20/- | 6,25,860/- |
| 1.இல + லக்கினம் | 30,997 | 30/- | 9,29,910/- |
| 2.இல + லக்கினம் | 2,847 | 100/- | 2,84,700/- |
| 3.இலக்கங்கள் | 841 | 500/- | 4,20,500/- |
| 3.இல + லக்கினம் | 73 | 5,000/- | 3,65,000/- |
| 4.இலக்கங்கள் | 05 | 1,00,000/- | 5,00,000/- |
| 4.இல + லக்கினம் | - | 58,14,875/- | - |
| மொத்தம் | 4,06,987 | - | 61,95,525/- |

மொத்த பரிசுத் தொகை ரூபா. 61,95,525/-

தொடர் இல. 5820351 க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுக்கள் 2004 ஆகஸ்ட் 06ம் திகதி வெள்ளிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

வளமான வாழ்வுக்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33 சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

4854312-1-82
4853403-8-27
4852849-4-52
4857918-9-95
4852120-0-28


# மரண அறிவித்தல்கள்

## சின்னச்சாமி சுப்பையா (இரத்தினம்)

(துர்க்கா பல்பொருள் விற்பனை நிலையம்)



நுவரெலியாவைப் பிறப்பிடமாகவும் 22ஏ,வெள்ளாந் தெரு,யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னச்சாமி சுப்பையா (இரத்தினம், உரிமையாளர்- துர்க்கா பல்பொருள் விற்பனை நிலையம்) அவர்கள் நேற்று (04.08.2004) புதன்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னச்சாமி - இலட்சுமி தம்பதிகளின் அன்பு மகனும், பெருமாள்- நாச்சியம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், சரஸ்வதியின் அன்புக் கணவரும், இராஜேந்திரன், கேதீஸ்வரன், சிவபாலன், இளையராஜா, ஸ்ரீதர் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஞானரஞ்சிதம், கவிதா ஆகியோரின் அன்பு மாமனாரும் கவிஷனா, அபிராஜ், அபிநயன், கீரதனா ஆகியோரின் அன்புப் பேரனும் அழகா சாமி, இராமசாமி, நாராயணசாமி, அமரர் பெருமாள், கந்தசாமி, தனம், கிருஸ்ணம்மாள், பாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.08.2004) வியாழக் கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் கோம்பையன் மணல் இந்து மயானத திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*22ஏ, வெள்ளாந்தெரு,*
*யாழ்ப்பாணம்.* (34902)(40-11-12)

தகவல்
மனைவி, பிள்ளைகள்.

## சண்முகம் விஜயரட்ணம்



நல்லூர் குறுக்கு வீதியைச் சேர்ந்த சண்முகம் விஜயரட்ணம் அவர்கள் நேற்று (04.08.2004) புதன் கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் யாழ்.சத்தியசாயி சேவா நிலைய முன்னாள் தலைவரும் , வடபிராந்திய சத்தியசாயி சேவா நிலைய இணைப்புக்குழுவின் முன்னாள் தலைவரும் இவற்றிற்கான தற்போதைய ஆலோசகரும் கச்சேரி -நல்லூர் வீதி, நாச்சிமார் கோயில் பரிபாலனசபைத் தலைவரும் ஓய்வுபெற்ற கமத்தொழில் சேவைநிலைய பெரும்பாக உத்தியோகத்தரும் காந்திமதியின் அன்புக் கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக் கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*82, நல்லூர் குறுக்கு வீதி,*
*நல்லூர், யாழ்ப்பாணம்.*
*T.P: 021-222 6529* (சி.36432)(40-11-12)

தகவல்:
வி.காந்திமதி (மனைவி).

# 31ஆம் நாள் நினைவு அஞ்சலி

மலர்வு 20 - 02 - 1924



உதிர்வு 06 - 07 - 2004

அமரர் **தெய்வானைப்பிள்ளை சின்னப்பா**

அன்பான அம்மாவே!
நீங்கள் எமைப்பிரிந்து நாள்கள் முப்பத்து ஒன்று
நாங்கள் இன்று வணங்குகின்றோம் - வாழ்வீர் என்றும்.

இன்று எமது இல்லத்தில் நடைபெறுகின்ற எமது தாயாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து மதியபோசனத் திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்பாக அழைக்கின்றோம்.

*கந்தரோடை,*
*சுன்னாகம்.* (34896)(24-11-12-40)

- குடும்பத்தினர்.

# சேவைநலம் பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை
பகுதித்தலைவர்

## திருமதி ஜெயராணி தவராசா



ஆசிரியை அவர்கள் தமது அறுபதாவது வயதில் 36 வருட ஆசிரிய சேவையிலிருந்து இன்று ஓய்வு பெறுகின்றார்.

இன்று மணிவிழாக்காணும் ஆசிரியரது சேவையைப் பாராட்டி நீடூழிகாலம் சிறப்புற வாழ்க என கொண்டலடி விநாயகரை இறைஞ்சி வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.
பா,அ.ச.,ப.ம.ச. (34904)(40-11-12)

# கேள்வி அறிவித்தல்

## மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்

01. யாழ்ப்பாண மாவட்டச் செயலாளரினால் யாழ்ப்பாண வீதி அபிவிருத்தித் திணைக் கள பிரதம பொறியியலாளரினால் மேற்கொள்ளப்படும் பின்வரும் வீதித் திருத்த வேலைகளுக்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

| வேலை விவரம் | ஆகக்குறைந்த (ICTAD) தரம் | மீளளிப்புச் செய்யக் கூடிய வைப்புத் தொகை | மீளளிக்க முடியாத தொகை |
|---|---|---|---|
| நாவற்குழி தெற்கு கடற்கரை வீதி | M-7 | Rs.20,000/= | 500/= |

02. நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்திசெய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் பதிவு தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரத்தில் ஒப்பந்தகாரர் பதிவுசெய்யப்பட்டிருத்தல் வேண்டும். அத்துடன், வீதி அபிவிருத்தித் திணைக்களத்தில் வீதிப் பராமரிப்பு ஒப்பந் தகாரராகவும் பதிவுசெய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

03. இக்ராட் வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதிய கேள்வி ஆற்றலளவைக் கொண்டிருத்தல் வேண்டும்.

04. கேள்வி ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தகாரரின் புதுப்பிக்கப்பட்ட இக்ராட் (ICTAD) பதிவுப் புத்தகத்தைச் சமர்ப்பிக்கக் கூடியவராக இருத்தல் வேண்டும்.

05. கேள்வி ஆவணத் தொகுதிகளை யாழ்ப்பாணம் வீதி, அபிவிருத்தித் திணைக்கள பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் மீளளிப்புச் செய்யக்கூடிய வைப்புத் தொகையாக ரூபா 20,000/-, மீளளிக்க முடியாத தொகையாக ரூபா 500/-வும் செலுத்தி 19.08.2004 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.


06. கேள்வி ஆவணத் தொகுதிகளை யாழ்ப்பாணம் கடற்கரை வீதியில் அமைந்துள்ள வீதி அபிவிருத்தித் திணைக்கள பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் எல்லா அலுவலக நாள்களிலும் அலுவலக நேரங்களிலும் இலவசமாகப் பார்வையிடலாம். பொறிவைத்த கேள்விகளைக் கொண்ட தபாலுறையில் இடதுபக்க மேல்மூலையில் நாவற்குழி தெற்கு கடற்கரை வீதிப் புனரமைப்பு என எழுதப்படல் வேண்டும்.

07. பொறியிடப்பட்ட கேள்விகள் *தலைவர், மாவட்டக் கேள்விச் சபை, மாவட்டச் செயலகம்,யாழ்ப்பாணம்* என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் 20.08.2004 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு முன்பாக அனுப்பப்படல்வேண்டும். அல்லது இதே முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடப்படவேண்டும். இதன்பின்னர் கேள்விகள் 20.08.2004 ஆம் திகதி பி.ப. 3 மணிக்கு திறக்கப்படும். கேள்வி திறக்கப்படும் நேரத்தில் கேள்விகள் இடுவோர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கமுடியும்.

செ.பத்மநாதன்,
தலைவர், மாவட்டக் கேள்விச் சபை,
யாழ்ப்பாணம்.

மாவட்டக் கேள்விச் சபை,
மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.

(சி-36429)(34-11-12-40)



சூரியனிலிருந்து முதலாவது கிரகமாக உள்ள புதன் கிரகத்தை (Mercury) ஆராய்ச்சி செய்வதற்காக மெஸென்ஞர் விண்கலம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை புளோரிடாவில் உள்ள கேப் கனவரல் ஆய்வுத் தளத்தில் இருந்து ஏவப்பட்டது. அமெரிக்காவின் 'போயிங் டெல்டா - 2' றொக்கட் மூலம் செலுத்தப்பட்ட இக்கலம் ஏழு ஆண்டுகளில் 17.9 மில்லியன் கிலோ மீற்றர்கள் தூரம் பயணம்செய்து 2011 ஆம் ஆண்டில் புதன் கிரகத்தின் சூழற்சிப் பாதையைச் சென்றடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கடந்த 30 ஆண்டுகளில் அமெரிக்கா, புதன் கிரகத்துக்கு அனுப்பியுள்ள முதலாவது விண்கலம் இதுவாகும். இக்கலம் புதனின் சுற்றுவட்டத்தில் ஓராண்டு காலம் பயணம் செய்து அங்குள்ள தட்பவெப்ப நிலைமைகளையும், புதன் கிரகத்தின் ஆக்கப் பதார்த்தங்கள் மற்றும் அதன் அமைப்பு போன்றவற்றையும் ஆராய்வு செய்யும். புதன் கிரகத்தின் தன்மை, கோளவரலாறு, துருவப் பகுதிகள் மற்றும் காந்தத்தன்மை பற்றியும் பூமிக்கு விவரங்களை அது அனுப்பும்.

# சூரியனை மறைக்கும் பூச்சி

## சுடரும் விஞ்ஞானம்

ராஜபுத்திரன்

லோகஸ்ட் (Locust) எனப்படும் பூச்சிகள் வெட்டுக்கிளிகள் இனத்தைச் சேர்ந்தவை. பார்ப்பதற்கு வெட்டுக்கிளிகளைப் போலவே இருந்தாலும், இரண்டுக்கும் ஓர் அடிப்படை வேற்றுமை உண்டு. அதாவது, வெட்டுக்கிளிகள் எப்போதும் தனித்தே இருக்கும். அல்லது இயங்கும். ஆனால், லோகஸ்ட் பொதுவாக கூட்டமாகத்தான் இருக்கும் அல்லது இயங்கும். சில சமயங்களில் மட்டுமே தனித்து இருக்கும். தனித்து இருக்கும் சமயங்களில் ஒன்றுமே தெரியாததைப் போல வெகு சாந்தமாய் நடந்துகொள்ளும். கூட்டமாக இருந்தால், இதனைப் போன்ற வில்லன் பூச்சிகள் கிடையாது.

லோகஸ்ட்களில் உலகம் முழுவதும் சுமார் 11இனங்கள் உள்ளன. இந்தியாவில் பாம்பே லோகஸ்ட் (Bombay Locust), இடம்பெயரும் லோகஸ்ட் (Migratory Locust) மற்றும் பாலைவன லோகஸ்ட் (Desert Locust) என மூன்று வகை உள்ளன. ஆனால், இவற்றுள் உலகம் முழுவதுமே வில்லனாகச் சித்தரிக்கப் படுவது பாலைவன லோகஸ்ட்தான்.

பாலைவன லோகஸ்ட்களின் இராஜ்யம் கிட்டத்தட்ட 3கோடி சதுர கிலோமீற்றரில் 60 நாடுகளில் பரவிக்கிடக்கிறது. கிழக்கே இந்தியாவிலிருந்து மேற்கே ஆபிரிக்காவரை கிட்டத்தட்ட பூமியின் மொத்தப் பரப்பளவில் ஐந்தில் ஒரு பகுதி பாலைவன லோகஸ்ட்களின் ஆதிக்கப்பிடியில்தான் இருக்கிறது. உலக மக்கள் தொகையில் பத்தில் ஒரு பகுதி மக்களின் வாழ்க்கையில் இதுவே வில்லன்!!

பாலைவன லோகஸ்ட்களின் வாழ்க்கையில் இரண்டு வகைகள் உண்டு. முதல்வகை யாருடனும் ஒட்டாமல், தனித்து வாழ்ந்து மடிவது. இரண்டாவது வகை, கூட்டமாக வாழ்வது. ஒரு கூட்டம் எனப்படுவது ஒரு சதுர கிலோமீற்றர் முதல் பல சதுர கிலோமீற்றர் வரை இருக்கும். ஒரு சதுர கிலோமீற்றர் கூட்டத்தில் சுமார் 40 மில்லியன் முதல் 80 மில்லியன் லோகஸ்ட்கள் வரை இருக்கும். இந்த லோகஸ்ட்கள் மணிக்கு 16முதல் 19கிலோமீற்றர் வேகத்தில் பறக்கவல்லன. பொதுவாக, இந்த லோகஸ்ட்கள் பகல் பொழுதிலேயே பறக்கும். ஒரு கூட்டத்தின் அளவு பல சதுர கிலோமீற்றருக்கு இருப்பதால், ஏதேனும் நகரின் மேலே பறக்கும்போது கதிரவனையே மறைத்து அந்த நகரையே இருளில் தள்ளிவிடும்.

இந்த லோகஸ்ட்களுக்குப் பசி எடுத்துவிட்டால், இன்னும் அபாயம்!! பசுமையாக இருக்கும் எந்த இலைத்தழையையும் தின்று தீர்த்துவிடும். ஒரு சராசரி லோகஸ்ட் கூட்டத்தின் ஒரு சிறு பகுதி (சுமார் ஒரு தொன் எடையுள்ள லோகஸ்ட்கள்) சுமார் 10 யானைகளின் அல்லது 25 ஒட்டகங்களின் அல்லது 2500 மனிதர்களின் உணவிற்குச் சமமான உணவைத் தின்று தீர்த்துவிடும். ஓரிடத்தில் லோகஸ்ட் கூட்டம் தங்கிச் சென்றால், அந்த இடம் வெறுமையாக, ஓர் போர் முடிந்த இடம்போல இருக்கும். ஓய்வுக்காக ஏதேனும் மரங்களில் மொத்தக்கூட்டமும் உட்கார்ந்தால், மரக்கிளைகள் எல்லாம் லோகஸ்களின் எடையைத் தாங்காமல் ஒடிந்துவிடும்.

இந்த லோகஸ்ட் எப்படி இனப்பெருக்கம் செய்யும் தெரியுமா? கலவியை முடித்தபின் பெண் லோகஸ்ட்கள், முட்டைகளை குவியல் குவியலாக பூமி மட்டத்திற்குக் கீழே சுமார் 15 செ.மீ ஆளத்தில் புதைத்துவிடும். பொதுவாக முட்டைகள் சிறு சிறு முட்டைக் கூடுகளிலேயே (Eggpods) இருக்கும் பின்னர் முட்டையிலிருந்து சுமார் 4 வாரங்களுக்குப் பிறகு, சிறு சிறு இளம்குஞ்சுகள் வெளியில் வரும். அதற்குப் பிறகு படிப்படியாக இந்த இளம் குஞ்சுகள் வளர்ந்து சுமார் 35 நாள்களில் முழுமையான லோகஸ்ட்டாக உருமாறும்.

★

## இரண்டு கண்கள்.. இரண்டு காட்சி.. கான முடியுமே!



இரண்டு கண்கள் இருந்தாலும் அதனால் மனிதன் ஒரே காட்சியைத்தான் காணமுடியும். இரண்டு கண்களும் வெவ்வேறு காட்சியை காணமுடியாது.

ஆனால், இந்தப் படத்தில் உள்ள சிறுமியோ ஒரே நேரத்தில் இரண்டு புத்தகங்களை வாசிக்கும் ஆற்றல் உள்ளவராக இருக்கிறார். இரண்டு கண்களும் இரண்டு காட்சிகளைக் காண்பதற்குக் காரணம், அவருடைய மூளை இரு தகவல்களையும் வேறுவேறாகப் பதிவுசெயயும் இரு பிரிவுகளாக அமைந்துள்ளமையே என்று இவருடைய தாயார் கூறுகிறார்.

தன்யா என்ற இச்சிறுமி மிகவேகமாக புத்தகங்களை வாசிக்கும் வல்லமை பெற்றுள்ளாா என்று அவருடைய ஆசிரியர் தெரிவித்துள்ளார்.

## ஆரோக்கியமான உருளைக்கிழங்கு

காபோவைதரேற்றின் அளவு குறைந்த உருளைக்கிழங்கினை கனடாவைச் சேர்ந்த விவசாய விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர். மரபணு மாற்ற முறைகளின் மூலமாக இந்த உருளைக்கிழங்கு உருவாக்கப்பட்டுள்ளது.

உருளைக்கிழங்கில் உள்ள அதிகளவு காபோவைதரேற்றினாலும் அவை சமைக்கப்படும், பதப்படுத்தும் முறைகளினால் அதிகளவு கலோரிக்கான சாத்தியம் இருப்பதாலும் உருளைக் கிழங்கு குறித்த சர்ச்சை மருத்துவ உலகிலும் உணவியல் துறையிலும் தொடர்ந்து இருந்து கொண்டே வந்தது.

இந்தப் புதிய வகை உருளைக்கிழங்கில் தற்போது உள்ள உருளைக்கிழங்கைவிட 30 சதவீதம் காபோவைதரேற்று குறைவாக உள்ளது. புரதங்கள், விற்றமின் சி ஆகியன இதில் உள்ளன. கனிம சத்துக்களான சோடியம் இந்த புதியவகை உருளைக்கிழங்கில் குறைவாக உள்ளது. அதேவேளை பொட்டாசியம் அதிகமாக உள்ளது.

இந்தப் புதிய வகை உருளைக்கிழங்கு, மருத்துவ ரீதியாக - உணவியல் ரீதியாக - மட்டுமன்றி நுகர்வோர்களின் பார்வையைக் கவரும் வகையிலும் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்தப் புதிய வகை உருளைக்கிழங்கு 2005 ஆம் ஆண்டு ஜனவரியில் சந்தைக்கு விடப்படும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

# காலை வாருமா 'ஸ்பிரிட்' ஆய்வு ஊர்தி

செவ்வாய்க் கிரகத்தில் ஆராய்ச்சிக்காக தரையிறக்கப்பட்டுள்ள 'ஸ்பிரிட்' ஆய்வு ஊர்தியின் முன்சக்கரத்தில் பழுது ஏற்பட்டுள்ளது. முன்புற வலச்சக்கரத்தில் ஏற்பட்டுள்ள இந்தப் பிரச்சினை காரணமாகத் தேவைப்படுகின்ற அத்தியாவசியமான இடங்களில் மட்டும் அச்சக்கரத்தைப் பயன்படுத்துவதற்கு விஞ்ஞானிகள் தீர்மானித்துள்ளனர்.

'ஸ்பிரிட்' ஆய்வு ஊர்தி கடந்த 2003ஆம் ஆண்டு ஜூன் மாதம் பூமியில் இருந்து அனுப்பப்பட்டது. அது தனது 7மாத காலப்பயணத்தின் பின்னர் கடந்த ஜனவரி 4ஆம் திகதி பத்திரமாக செவ்வாயில் தரையிறங்கியது.

தற்போது சுமார் 106 மில்லியன் மைல்களுக்கு அப்பாலிருந்து அது தனது படங்களை அனுப்பி வருகிறது.

செவ்வாயில் தண்ணீருக்கான கனியுப்புக்கள் இருக்கின்றனவா என்பது குறித்து ஆராய்வது தான் 'ஸ்பிரிட்'டின் முக்கிய பணி. இதற்கு ஏற்றவகையில் 6சக்கரங்களைக் கொண்ட ஊர்ந்து செல்லும் தன்மை வாய்ந்ததாக அது வடிவமைக்கப்பட்டுள்ளது. சூரிய மின்கலங்களின் உதவியுடன் இயங்குகின்றது.

செவ்வாயின் மேற்பரப்பு மண்ணையும் அங்குள்ள பாதைகளையும் அவற்றின் உட்பகுதிகளையும் ஆராய்வதற்கு ஏற்றவகையில் ஆய்வு ஊர்தியின் முன்பகுதியில் தானியங்கி கைகள் பொருத்தப்பட்டுள்ளன.

மண்ணின் மேற்பரப்பிலிருந்து குறிப்பிட்ட ஆழத்திற்குத் துளையிட்டுக் கீழிருக்கும் மண்ணையும் ஆய்வுசெய்யும் திறன் ஸ்பிரிட்டுக்கு உண்டு. இந்த ஆய்வு மூலம் நிலத்தடியில் தண்ணீர் இருப்பதற்கான சாத்தியக்கூறுகள் எவையாவது இருந்தால் தெரியவரும் என்பது 'நாஸா' ஆய்வாளர்களின் நம்பிக்கை.

பூமி நேரப்படி காலை 9மணிக்கு ஆய்வுக் கலம் தனது பணியை ஆரம்பிக்கும். பிற்பகல் 2 முதல் 3மணிவரை அன்றையதினம் தான் என்ன வேலைகளைச் செய்தேன் என்ற விவரத்தை 'நாஸா' கட்டுப்பாட்டு நிலையத்துக்கு அறிவிக்கும்.

'ஸ்பிரிட்' தனது தகவல்களை அனுப்புவதற்கும் கட்டுப்பாட்டு நிலையத்திலிருந்து தொடர் வழிகாட்டல்களை அனுப்புவதற்கும் இடையில் 19மணிநேர இடைவெளிதேவை என்று 'நாஸா' விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

'ஸ்பிரிட்' ஆய்வு ஊர்தியின் முன் சக்கரத்தில் பழுது ஏற்பட்டுள்ளதாகத் தற்போது விஞ்ஞானிகள் அறிவித்துள்ளனர். இந்தச் சக்கரத்தை இயங்க வைப்பதற்காக மேற்கொண்ட முயற்சிகள் போதுமான வெற்றியைக் கொடுக்கவில்லை. ஆக 25 சதவீதமான முன்னேற்றமே ஏற்பட்டதாக 'நாஸா' விஞ்ஞானிகள் கூறுகின்றனர். இந்த நிலைமையானது ஆய்வு ஊர்தியின் தேய்மானத்தை காட்டுவதாக கருதப்படுகிறது.

இந்த ஆய்வு ஊர்தியின் பொறியியலாளர் ஜோ மில்கோ (Joe meiko) அமெரிக்காவின் கலிபோர்ணியா மாநிலத்தில் பஸடேனா (Pasadena) என்ற இடத்தில் உள்ள ஜெட் புரோபுலிஸன் ஆய்வுகூடத்தில் செய்தியாளர் மாநாட்டை நடத்தினார். அப்போது அவர் "இந்த ஆய்வு ஊர்தியானது முன்நோக்கிச் செல்வதிலும் பார்க்க பின்நோக்கிய செலுத்துகைக்காகவே வடிவமைக்கப்பட்டது" என்றார்.

அதேவேளை - 'ஸ்பிரிட்' ஆய்வு ஊர்தி செவ்வாய்க்கிரகத்தின் மேற்பரப்புப் பாறைகளின் தோற்றத்தைப் படம்பிடித்து அனுப்பியுள்ளது.

ஆனால், அவற்றைக்கொண்டு அங்கு நீரோட்டங்களோ, காற்றோ, எரிமலைகளோ இருக்கின்றனவா என்பதை உறுதிப்படுத்தமுடியவில்லை. 'ஸ்பிரிட்' அனுப்பியவற்றில் பழைமை மிக்க பாறையின் படம் இதுவே எனக் கொள்ளப்படுகின்றது. இப்பாறை மூன்று அல்லது நான்கு மில்லியன் ஆண்டுகளுக்கு முற்பட்டது எனக் கருதப்படுகின்றது. இப்பாறையின் முனைப்பகுதிகள் திரவப் பாய்ச்சலினால் ஏற்பட்டதாக இருக்கலாம்.

'ஸ்பிரிட்' தரையிறங்கியுள்ள பகுதிக்கு எதிர்ப்பகுதியில் இதன் சகோதர ஆய்வு ஊர்தி 'ஒப்போசூனிட்டி' (Opportunity) தரையிறக்கப்பட்டுள்ளது. 'ஸ்பிரிட்' பள்ளமான பகுதியிலும் (குசேவ் எனப் பெயரிடப்பட்டுள்ளது) ஒப்போசூனிட்டி மேட்டுப்பாங்கான இடத்திலும் (மெரிடியானி எனப் பெயரிடப்பட்டுள்ளது) தரையிறங்கியுள்ளன.

செவ்வாயில் காணப்படுகின்ற பெரும் குழிகள் - தூங்கு பள்ளங்களில் ஆழமாகச் செல்கையில் குளோரின் போன்ற பதார்த்தத்தின் செறிவு அதிகரிப்பதாக அறியப்பட்டுள்ளது. தூங்கு பள்ளத்தின் மேற்பரப்பில் காணப்பட்டதனை விடவும் மூன்று மடங்கு அதிகமான குளோரின் அளவு 'ஒப்போசூனிட்டி'ஆய்வு ஊர்தியின் தற்போதைய ஆழத்தில் அறியப்பட்டுள்ளது.


ஆனால், இந்த அறிகுறிகள் எதனைக் காட்டுகின்றன என்று ஆய்வாளர்கள் இதுவரை முடிவு செய்யவில்லை. ஆயினும், செவ்வாய்க் கிரகத்தில் தண்ணீர் காணப்பட்டமைக்கு இதனையும் தொடர்புபடுத்த அவர்கள் முயல்கின்றனர்.

இந்த தூங்கு பள்ளங்களில் பல்வரிசை போன்ற குழப்பகரமான அமைப்புக்கள் காணப்படுவதனையும் ஒப்போசூனிட்டி படம்பிடித்து அனுப்பியுள்ளது. இவற்றை ஆய்வாளர்கள் 'Razor back' என்று பெயரிட்டுள்ளனர்.

இவ்வாறு அங்கு காணப்படுகின்ற பதார்த்தங்களும் 'Razor back' அமைப்புக்களும் செவ்வாயில் தண்ணீர் இருந்தது என்றே விஞ்ஞானிகளை அனுமானிக்கச் செய்கின்றன.

ஐரோப்பிய விண்வெளி ஆராய்ச்சி நிலையமான 'ஈஸா' அனுப்பிய 'பிகிள்-2' ஆய்வு ஊர்தி கடந்த டிசெம்பர் - ஜனவரியில் செவ்வாயில் தரையிறங்கும்போது தொலைந்துபோனதைப் போல 'ஸ்பிரிட்' ஆய்வு ஊர்தியும் காலை வாரி விடுமா என்ற அச்சம் 'நாஸா' ஆய்வாளர்களைத் தற்போது பீடித்துள்ளது.

## தரைக்கு வந்தது சுறா



அமெரிக்காவில் புளோறிடாவில் உள்ள யூனிவேர்ஸல் ஸ்ருடியோ நிறுவனத்தினர் சுறா வடிவில் பெரியராக்டரை வடிவமைத்துள்ளனர்.

வீதியால் ஓடிவரும் இந்த வாகனத்தில் 28 பேர் அமர்ந்து பயணஞ்செய்யலாம். 11 மீற்றர் உயரமும் 10 மீற்றர் நீளமும் கொண்டது இந்தவாகனம். சாதாரண வாகனங்களில் பயணித்து அலுத்துப்போனவர்கள் ஒரு மாறுதலுக்காக இதில் ஏறிப்பயணிக்கிறார்கள்.

## ஆன்மீகச் சொற்பொழிவு

குடத்தனை,ஓக.5

துன்னாலை வடக்கு, ஸ்ரீவல்லிபுரம் ஆழ்வார் ஆலயத்தின் வடக்கு வீதியில் அமைந்துள்ள பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக் கிழமை தோறும் நடைபெற்று வரும் வாராந்த ஆன்மீகச் சொற்பொழிவுத் தொடரில் எதிர்வரும் எட்டாம் திகதி ஞாயிற்றுக்கிழமை 'பிரபக்தி' என்னும் தலைப்பில் யாழ்.பல்கலைக்கழக கலைத்துறை மாணவன் பாலபண்டிதர் சிவ.முகுந்தன் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

(எ-78-173)


## தேவை

எமது இனிப்புத் தொழிலகத்துக்கு வேலை பழகிய, பழக விரும்புகின்ற ஆண், பெண் பிள்ளைகள் தேவை. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும். நாளை (06.08.2004) வெள்ளிக்கிழமை நேரில் வரவும்.

*ஸ்ரீ மாருதி இனிப்புத் தொழிலகம்,*
6/12, விதானையார் வீதி,
ஈச்சமோட்டை, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
(34891) T.P. 0776171431 (21-19-17)


# இலங்கை அரசு
# வடக்கு - கிழக்கு மாகாண சபை
# வடக்கு - கிழக்கு துரித மீளமைப்புத் திட்டம்
# கடன் இல: 2880 சி.இ.
# தேசிய போட்டிக் கூறுவிலை கோரல்
# (நிர்மாண வேலைகள்)
# கேள்வி அறிவித்தல் ஐ.எவ்.பி.

ஐ.எவ்.பி.இல. ஜே.எவ்/நீர்ப் ஜீ.ஏ/09 திகதி: 05-08-2004

01) வடக்கு - கிழக்கு துரித மீளமைப்புத் திட்டத்தின்ஆகுசெலவு சார்பாக சர்வதேச அபிவிருத்தி அமைப்பிலிருந்து கடனொன்றை இலங்கை அரசு பெற்றுள்ளது. கீழுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் ஒரு பகுதியைப் பிரயோகிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கு இலங்கை உட்பட சகல நிதியிடும் நாடுகளைச் சேர்ந்த தகுதிவாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்தும் பின்வரும் வரையறுக்கப்பட்ட வழிகாட்டலின் கீழ் கேள்விகள் கோரப்படுகின்றன.
ஐ.பி.ஆர்.டி (IBRD) கடன் வசதி ஐ.டி.எ (IDA) நம்பிக்கையின் கீழான வசதி

02) மாவட்ட செயலாளர், யாழ்ப்பாணம், இலங்கை அவர்களினால் மூடிய கேள்விகள் தகுதியான ஒப்பந்தகாரர்களிடமிருந்து பின்வரும் கட்டடத் தொகுதிகள் நிர்மாணிப்பதற்கு கோரப்படுகின்றன.

03) மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு வேலைக்கும் ரூபா 1000/- காசாகவோ அல்லது யாழ்ப்பாணத்தில் மாற்றத்தக்கதான யாழ்ப்பாண மாவட்டச் செயலாளரின் பெயரில் அங்கீகரிக்கப்பட்ட வங்கியில் பெறப்பட்ட வங்கி ஆணையாகவோ (Draft) சமர்ப்பிப்பதன் பேரில் *பிரதம எந்திரி, கட்டடங்கள் திணைக்களம், யாழ்ப்பாணம்* அவர்களிடமிருந்து 06-09-2004ஆம் திகதி 15.00 மணிவரை கேள்விப் பொதிக்கான கேள்வி ஆவணங்களின் இரு பிரதிகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

04) ஆர்வமுள்ள தகுதியான கேள்விதாரர்கள் கேள்விப் பத்திரங்களை பிரதம எந்திரி (கட்டடங்கள்) யாழ்ப்பாணத்தில் இலவசமாகப் பார்வையிடுவதோடு மேலதிக விவரங்களையும் பின்வரும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

**பிரதம எந்திரி,**
**கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்)**
**கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்.**
தொலைபேசி/தொலைநகல் இல. 021 - 222 - 2632

05) சமர்ப்பிக்கப்படும் கேள்வி, கேள்விகள் திறக்கப்படும் தினத்தில் இருந்து 90 நாள்களுக்குச் செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும். அத்துடன், யாழ்ப்பாண மாவட்டச் செயலாளரின் பெயரில் எடுக்கப்பட்ட கேள்விப் பிணையும் கேள்விகளுடன் இணைக்கப்பட்டு, *அரச அதிபர், மாவட்டச் செயலகம், கச்சேரி, யாழ்ப்பாணம* என்ற முகவரிக்கு 07-09-2004ஆம் திகதி 15.00 மணிக்கு முன்னர் கையளிக்கப்படல் வேண்டும். அதே தினம் கேள்விகள் திறக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவரின் பிரதிநிதி விரும்பின சமுகமளிக்கலாம். மேற்குறிப்பிட்ட திகதியில் காரியாலயம் மூடப்படவேண்டிய சந்தர்ப்பம் ஏற்படின் அதற்கு அடுத்த வேலை நாளன்று அதேயிடத்தில் அதே நேரத்தில் கோரல்கள் பெறப்பட்டுத் திறக்கப்படும்.

06) வேறு விவரங்கள் தேவைப்படின் கேள்வி ஆவணங்களில் பார்வையிடலாம்.

**விவர அட்டவணை**

| கேள்விக்குறியீடு | வேலை விவரம் | கேள்விப் பிணை ரூபா | கேள்வி ஆவணங்களின் பெறுமதி ரூபா | வேலை முடிக்கப்பட வேண்டிய காலம் |
|---|---|---|---|---|
| 01) ஜே.எவ்./நீர்ப்/ஜ/04ஏ | மாவட்ட ஆணையாளர் அலுவலகம்.யாழ்ப்பாணம் மேலதிக அறைகள் நிர்மாணித்தல் | 23,500/- | 1,000/- | 2 மாதம் |

07) கேள்விதாரர்கள், கேள்விதாரருக்கான செயற்பிரமாண குறிப்புகள் 4ஆம் பந்தியில் சொல்லப்பட்ட நடைமுறைகளை ஆகக் குறைந்த தகைமைகளாகக் கொண்டிருத்தல் வேண்டுமென இத்தால் ஆலோசனை வழங்கப்படுகின்றது.

மாவட்டச் செயலாளர்,
மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.

**செ.பத்மநாதன்,**
அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்.

(சி-36426)(21-19-17)




அப்பா, அம்மா, சிவா மாமா, அத்தை, விதுஷ், மச்சான், தாத்தா, அம்மம்மா, லோகேஸ மாமா, சுதன் மாமா அனைவரும் வைத்தீஸ்வரன் வாலாம்பிகா அருளாசியோடு பல் கலையும் கற்றுப் பல்லாண்டுகாலம் நீடூழி வாழவேண்டும் என வாழ்த்துகின்றோம்.
*மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.* தகவல்: **சிவா** (மாமா), **விதுஷ்** (மச்சான்).
(34880)


**யாழ்ப்பாணம் - மாநகராட்சிமன்றம்**

நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி கோயில் மகோற்சவ கால தற்காலிக கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான

## கேள்வி அறிவித்தல் - 2004

நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி கோயில் மஹோற்சவ காலத்தில் தற்காலிக கச்சான் கடைகள், மணிகாப்புக் கடைகள். ஐஸ்கிறீம் கடைகள்/வாகன நிலையங்கள், இனிப்புக் கடைகள், இதர கடைகள், துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையம், விளம்பர முகவர் நிலையங்கள் ஆகியவற்றை அமைப்பதற்கான நிலங்களைக் குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் எதிர்வரும் 13.08.2004 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப.12.30 மணிவரை என்னால் ஏற்றுக கொள்ளப்படும்.

இதற்கான கேள்விப் படிவங்களை மீளளிக்க முடியாத படிவக் கட்டணம் ரூபா. 300/=வும், மீளளிக்கக்கூடிய கேள்விப் பிணை பணமாக ஐஸ்கிறீம் கடைகளுக்கு ரூபா10000/=வும் ஏனைய கடைகளிற்கு ரூபா 1000/=வும் சபையில் செலுத்துவதன் பேரில் எதிர்வரும் 12.08.2004ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப.3.00 மணிவரையும் மாநகராட்சிமன்ற நானாவித இறைவரிக் கிளையில் பெற்றுக் கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட கேள்வியை அரக்கு முத்திரையிடப்பட்ட கடித உறையிலிட்டு இடது பக்க மேல் மூலையில் வியாபாரத்தின் தன்மை குறிப்பிடப்பட்டு எதிர்வரும் 13.08.2004ஆம் திகதி பி.ப.12.30 மணிக்கு முன் அலுவலகத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். அல்லது ஆணையாளர், மாநகராட்சிமன்றம், யாழ்ப்பாணம் என முகவரியிட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும்.

கிடைக்கப்பெற்ற கேள்விகள் யாவும் எதிர்வரும் 13.08.2004ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப.2.30 மணிக்கு கேள்விச்சபையால் திறந்து பரிசீலிக்கப்படும். அத்தருணம் கேள்விக்காரர் அல்லது அவரது பிரதிநிதி எவரேனும் பிரசன்னமாக இருக்கலாம்.

மேலதிக விவரங்களை மாநகராட்சிமன்ற நானாவித இறைவரிக் கிளையில் அலுவலக நேரத்தில் அறிந்து கொள்வதுடன் கடைகளுக கான வரைபடத்தையும் நேரில் பார்வையிடலாம்.

குறிப்பு: மேற்படி சபையால் வழங்கப்படும் தற்காலிக கடைகளைத் தவிர எதிர்வரும் 13.08.2004 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பித்து சபையின் அனுமதி பெற்றிராத எந்தத் தற்காலிக வியாபாரமும் திருவிழாக் காலத்தில் நடாத்த அனுமதிக்கப்படமாட்டாது என்பதையும் அறியத்தருகின்றோம்.

*மாநகராட்சி மன்றம்,*
*யாழ்ப்பாணம்.*

**கலாநிதி க.குணராசா,**
**மாநகர ஆணையாளர்,**
**யாழ்ப்பாணம்.**

(C/36418)(42-21-19-17)

## 45ஆம் நாள் நினைவஞ்சலியும்
## 20ஆம் ஆண்டு பிறந்தநாள் நினைவுகளும்

*அன்னை மடியில்* 05 - 08 - 1984



*ஆண்டவன் அடியில்* 22 - 06 - 2004

**செல்வன் நவரட்ணராஜா நிமலேஸ்வரன்** (நிமல்)

அன்பின் திருவுருவாய் அறிவின் ஒளிவிளக்காய்
பாசத்தின் சிகரமாய் விளங்கிய நிமலே!
எங்குபார்த்தாலும் உன் முகம் தான் தெரிகிறதே!
காலமெல்லாம் வாழ்வோமென்று
கண்டிருந்த கனவுகளைக் கலைத்து விட்டு
விதி என்ற பெயரில் மதி செய்த சதியால்
கணப்பொழுதில் காற்றோடு கலந்ததேனோ?
கனவுகள் நிறைந்த பூவே நீ வாடமுன் உலர்ந்ததேனோ?

*உன் இருபதாம் பிறந்தநாள் நினைவுகளில் உனது பிரிவால் துயருறுகின்றோம்.*
என்றும் உன் நினைவுகளுடன் உன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!!!

கொழும்புத்துறை.

அப்பா, அம்மா, தங்கை,
பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமா, மாமி.

(34769)(42-21-19-17)

# பத்து வருடங்களில் நாட்டின் பாதுகாப்புத்துறையை ஜனாதிபதி சீரழித்தார் எனச் சீறுகிறார் மகேஸ்வரன்

## முன்னாள் பொலீஸ்மா அதிபருக்குத் தமிழர் என்பதால் பதவி நீடிக்க மறுத்தனர் என்கிறார்

கடந்த பத்து வருடங்களாகப் பாதுகாப்புத் துறையை ஜனாதிபதி எப்படிச் சீரழித்தார் என்பது நாட்டுமக்களுக்குத் தெரியும். பொய்க் காரணங்களைக் கூறி எமது மூன்று அமைச்சுக்களைப் பறித்தெடுத்தார். பொலீஸ்மா அதிபர் ஒரு தமிழர் என்பதற்காக ஒருநாள்கூட அவருககுப் பதவி நீடிப்பு வழங்க மறுக்கப்பட்டது.

- இப்படிக் கூறினார் முன்னாள் அமைச்சர் தி.மகேஸ்வரன் எம்.பி.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் சபை ஒத்திவைப்பு மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் இதுபற்றி மேலும் கூறியதாவது:-

நாட்டின் பாதுகாப்புக்குக் குந்தகம் ஏற்பட்டு விட்டது என்று எமது ஆட்சியின்போது கூக்குரலிடப்பட்டது. ஆனால், இன்று நடப்பதென்ன? பௌத்த குருமார்கள் கொலைசெய்யப்படுகிறார்கள். துப்பாக்கிதாரிகளின் கொலைகள் நாளுக்குநாள் அதிகரித்து வருகின்றன. எங்கு பார்த்தாலும் அமைதியற்ற ஒரு நிலையே காணப்படுகிறது. என்னைக் கொலைசெய்யப்பார்த்தார்கள்; எனது உயிருக்கு அச்சுறுத்தல் உள்ளது எனப் பாதுகாப்பு அமைச்சருக்கு முறையிட்ட போது அவர் அதை ஒரு பொருட்டாகவே எடுக்கவில்லை. ஏற்கனவே எனக்கு வழங்கப்பட்டிருந்த பாதுகாப்பையும் அவர் வாபஸ் பெற்றார். இன்று எனது சொந்தப் பாதுகாப்புடனேயே இருக்கின்றேன்.

தமிழர்களைக் கொல்வதற்காக உருவாக்கப்பட்ட ஆயுதக் குழுவொன்று ஹிங்குராங்கொடையில் ஆயுதங்களுடன் கைதுசெய்யப்பட்டது. பின்னர் அரசியல் அழுத்தங்கள் காரணமாக அவர்கள் விடுதலை செய்யப்பட்டனர். இதுபோன்று ஆயுதக் குழுக்களுக்கு அரசு ஆதரவு வழங்கி வருகின்றது.

முன்னாள் பொலீஸ்மா அதிபர் ஆனந்த ராஜாவுக்கு ஒருநாள்கூட பதவி நீடிப்பு வழங்க ஜனாதிபதி விரும்பவில்லை, ஆனால் பல பாதுகாப்பு உயரதிகாரிகளுக்குப் பல வருடங்கள் பதவி நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி இந்த விடயத்தில் இன ரீதியாகச் செயற்படுகிறார் என்பது அப்பட்டமான உண்மையாகும்.

ஜனாதிபதி யாரைத் தமது கட்சிக்கு இழுக்கலாம், யாரைப் பணம் கொடுத்து விலைக்கு வாங்கலாம் என்ற சிந்தனையிலேயே இருக்கிறார். நாட்டைப் பற்றி அவர் கவலைப்படுவதில்லை. பொலீஸ் ஆணைக்குழு சுயமாக இயங்கவிடாமல் குழப்பப்படுகிறது. அதை சுயமாக இயங்கவைக்கவேண்டும்.

ஹிங்குராங்கொடை கைது விவகாரத்தில் சட்டத்திற்கு முரணாகச் செயற்பட்ட பொலீஸாருக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் - என அவர் மேலும் கூறினார்.



நாடாளுமன்றிலிருந்து...

# தமிழர்களின் பாதுகாப்பு மலையகத்தில் கேள்விக்குறி

## கன்னி உரையில் வடிவேல் சுரேஷ்

மலையகத்தில் தமிழர்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாகியுள்ளது. அங்கு இடம்பெற்ற இன வன்முறைச் சம்பவங்களுக்கும், தீ வைப்புக் கொள்ளைகளுக்கும் பொலீஸாரே துணையாக நின்று செயற்பட்டுள்ளனர் எனப் பொலீஸார்மீது குற்றஞ்சாட்டினார் இ.தொ.காவின் பதுளை மாவட்ட எம்.பியான வடிவேல் சுரேஷ்.

மலையக மக்கள் நிம்மதியாகவும், சுதந்திரமாகவும் இயல்பு வாழ்க்கை வாழவேண்டுமானால் விகிதாசார அடிப்படையில் மலையகத்தில் ஆண், பெண் பொலீஸார் நியமிக்கப்படவேண்டும் என்றும் சுரேஷ் வலியுறுத்தினார்.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் தனது கன்னி உரையை நிகழ்த்திய சுரேஷ் சில ஆக்கபூர்வமான விடயங்களை முன்வைத்தார்.

மலையகத்தின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் இல்லை. பொலீஸ் நிலையங்களுக்குச் செல்லும் தமிழர்கள் தமது முறைப்பாடுகளைத் தமிழில் பதியமுடியவில்லை.

தமிழ்பேசும் பொலீஸார் இல்லை. பொலீஸ் நிலையங்களுக்குச் செல்லும் மலையகப் பெண்கள் பல்வேறு இம்சைகளுக்கு உள்ளாக்கப்படுகின்றனர்.

எனவே, மலையகத்தில் உள்ள எல்லாப் பொலீஸ் நிலையங்களுக்கும் தமிழ்பேசும் பொலீஸார் நியமிக்கப்படவேண்டும் - என வடிவேல் சுரேஷ் கோரிக்கை விடுத்தார்.

(ஒ-க)

# பொலீஸ் பதவி உயர்வுக் குளறுபடியின் பின்னணியில் நடந்த குடிப்பங்கள்!

## அம்பலப்படுத்துகிறார் ஜோன் அமரதுங்க

"பொலீஸ் திணைக்களத்தில் அண்மையில் வழங்கப்பட்ட பதவி உயர்வுகளில் இடம்பெற்ற ஊழல் மோசடிகளுக்குப் பாதுகாப்பு அமைச்சர் என்றவகையில் ஜனாதிபதியே முழுப் பொறுப்பையும் ஏற்கவேண்டும்.

"பன்னிரண்டு வருடங்களுக்கு மேல் இடைநிறுத்திவைக்கப்பட்டிருந்த பொலீஸ் அதிகாரிகளின் பதவி உயர்வுகளை தாம் ஆட்சிக்கு வந்தவுடன் தாங்களே வழங்குகின்றார்கள் என மார்தட்டினார் ஜனாதிபதி.

"இப்பொழுது ஊழல், மோசடி, தவறு தொடர்பாக முறைப்பாடுகள் வந்தவுடன் முன்னைய அரசின் பக்கம் பந்தை வீசுகின்றனர். இவ்விடயம் தொடர்பாக நாடாளுமன்றத் தெரிவுக் குழு ஒன்று அமைக்கப்பட்டு குற்றவாளிகள் தண்டிக்கப்படவேண்டும்."

- முன்னாள் உள்துறை அமைச்சரும் கம்பஹா மாவட்ட எம்.பியுமான ஜோன் அமரதுங்க நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் இவ்வாறு கோரிக்கை விடுத்தார்.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் பொலீஸ் திணைக்களப் பதவி உயர்வுகள் தொடர்பாக நடைபெற்ற விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

முன்னாள் பொலீஸ்மா அதிபர் ஆனந்த ராஜா வெற்றிடங்கள் நிரப்பப்படவேண்டும். இதன அடிப்படையில் 4ஆயிரத்து 500 பேருக்குப் பதவி உயர்வு வழங்கப்படவேண்டும் என்று தெரிவிதது அதற்கான அனுமதியை வழங்க வேண்டும் எனக்கோரி கடிதத்தின் மூலமாக அனுமதி பெற்றிருந்தார்.

அதற்கமைய, சகல பொலீஸ்மா அதிபர்களுக்கும், சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர்களுக்கும் மற்றும் பொறுப்பதிகாரிகளுக்கும் இவ்விடயம் தொடர்பாகத் தெளிவுபடுத்தி, தகுதி உடையவர்கள் விண்ணப்பிக்கலாம் என்றும் - நேர்முகப் பரீட்சைகளின் மூலம் பதவி உயர்வுக்குச் சிபார்சு செய்யப்படும் என்றும் - குறிப்பிட்டு, சுற்றறிக்கை மூலம் அவர் அறிவித்திருந்தார்.

நாட்டின் துரதிஷ்டம், நேர்மையான பொலீஸ அதிபரான ஆனந்தராஜா ஓய்வுபெற வேண்டிய நிலை ஏற்பட்டது. அன்று ஆனந்தராஜாவின் சுற்றறிக்கை நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தால் இன்று இந்த ஊழல்களும், தவறுகளும் ஏற்பட்டிருக்கா.

ஆனால், நடந்தது என்ன? புதிய பொலீஸ்மா அதிபராக இந்திரா டி சில்வாவை ஜனாதிபதி நியமித்தார். பொலீஸ்மா அதிபரின் சிபார்சின் பேரில் விக்டர் என்பவர் ஆளணி கட்டுப்பாட்டாளராக நியமிக்கப்பட்டார்.

எந்தவிதமான நேர்முகப் பரீட்சைகளோ, விசாரணைகளோ இன்றி இந்த விக்டர் பதவி உயர்வுக்கான பெயர்பட்டியலைத் தயாரித்து விட்டார்.

பொலீஸ்மா அதிபர், ஜனாதிபதியுடன் கலந்துரையாடிய பின் அப்பட்டியலைத் தேசிய பொலீஸ ஆணைக்குழுவுக்கு அனுப்பிவிட்டார்.

பொலீஸ் திணைக்களத்தில் பணிபுரியும் அறுபதாயிரத்துக்கும் அதிகமானோரின் தனிப்பட்ட கோவைகளைப் பொலீஸ் ஆணைக்குழு தனிப்பட்ட முறையில் தட்டிப்பார்க்க முடியாது. பொலீஸ் மா அதிபரின் சிபார்சுகளை அது அங்கீகரித்துவிட்டது.

பதவி உயர்வுகள் ஜனாதிபதியால் அங்கீகரிக்கப்பட்டு பகிரங்கப்படுத்தப்பட்டு விட்டன.

இதே விக்டரால் பொலீஸ் கான்ஸ்டபிள்களாக இருந்த பலர் தவறுதலாக சார்ஜன்டுகளாகப் பதவி உயர்த்தப்பட்டுவிட்டனர். அவர்களை மீண்டும் பதவி இறக்கம் செய்ய பொலீஸ் ஆணைக்குழுவின் அனுமதி கோரப்பட்டிருக்கின்றது.

இவருடைய பொறுப்பற்ற செயலைக் கண்டித்தும், பொலீஸ் ஆணைக்குழுவைத் தவறாக வழி நடத்த முயன்றதைக் கண்டித்தும் பொலீஸ் ஆணைக்குழு விக்டரைக் கடிதம் மூலம் எச்சரிக்கை செய்துள்ளது.

எனவே, தவறான நபர்களுக்குப் பதவி உயர்வுகள் வழங்கக் காரணமாக இருந்தவர்கள் யார் எனக் கண்டறிந்து தண்டனை வழங்கவேண்டும். இந்த உண்மைகளை வெளிப்படுத்த நாடாளுமன்றத் தெரிவுக் குழு ஒன்று அமைக்கப்படவேண்டும் - என ஜோன் அமரதுங்க மேலும் வலியுறுத்தினார்.

### தமிழர்கள் போன்று ஓரணியில் முஸ்லிம்கள் திரள ரிசாத் எம்.பி. அழைப்பு

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைத்துவத்தின்கீழ் தமிழர்கள் அணிதிரண்டு இருப்பதுபோல், பேதங்களைக் களைந்துவிட்டு முஸ்லிம்களும் ஓரணியில் திரளவேண்டும்.

- இப்படிக் கூறுகிறார் வன்னி மாவட்ட எம்.பி. ரிசாத் பதியுதீன்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் காலை இடம்பெற்ற சபை ஒத்திவைப்புப் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது:-

ஒரு காலத்தில் பல்வேறு ஆயுதக்குழுக்களாக இயங்கிய பல தமிழ்க்குழுக்கள் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் தலைமையின்கீழ் அணிதிரண்டு தம்மினத்தின் உரிமைக்காகக் குரல் கொடுக்கின்றன. தமிழ் இளைஞர்களின் போராட்டத்தைத் தமிழ்த் தலைவர்கள் போற்றினர். இன்று அவர்களும் விடுதலைப் புலிகளின் கோரிக்கையை ஏற்று ஒரேகுரலாக நின்று தமது நோக்கத்தை நிறைவேற்ற ஒன்றுபட்டுள்ளனர். தமிழர்களைப்போல் முஸ்லிம்களும் கட்சி பேதங்களை மறந்து ஒரு தலைமையின் கீழ் அணிதிரளவேண்டும்.

வனனியிலும், புத்தளத்திலும் ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் அகதிமுகாம்களிலே அல்லலுறுகின்றனர். முஸ்லிம்கள் தமது சொந்த நிலத்திலிருந்து விரட்டப்பட்டுள்ளனர். யுத்தத்தை நாம் விரும்பாவிட்டாலும் வலிந்து அதற்குள் இழுக்கப்பட்டுள்ளோம்.

எனவே, முஸ்லிம் கள் ஓரணியில் திரண்டு எமது உரிமைகளைப் பெற்றுக்கொள்ள முன்வரவேண்டும் - என்று அவர் தமதுரையில் கூறினார்.

(ஒ-க)

# புலிகளின் காவல்துறையை முன்மாதிரியாக இலங்கைப் பொலீஸார் கொள்ளவேண்டும்

## கன்னி உரையில் வழிகாட்டுகிறார் கிஷோர்

விடுதலைப் புலிகளின் காவல்துறையினர் பேணும் சட்ட ஒழுங்குமுறையை இலங்கைப் பொலீஸார் ஓர் உதாரணமாகக் கொள்ளவேணடும். குற்றவாளிகள், பொலீஸாருக்கு லஞ்சம் கொடுத்துவிட்டுத் தப்பித்துக்கொள்ளும் ஒரு நிலையே இங்கு நிலவுகிறது.

- இப்படிக் கூறினார் வன்னி மாவட்ட எம்.பி. சிவநாதன் கிஷோர்.

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் ஒத்திவைப்புப் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு தனது கன்னி உரையை நிகழ்த்திய அவர் அங்கு தொடர்ந்து கூறியதாவது:-

தேர்தலொன்று இந்தநாட்டில் நடந்துகொண்டிருக்கும்போது பொலீஸாருக்குப் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டது. பொதுவாகவே தேர்தல் காலங்களில் பதவி உயர்வுகள் வழங்கப்படுவதில்லை. இது ஒரு தவறான அணுகுமுறையாகும்.

வவுனியாவில் மக்கள் செறிந்து வாழும் பகுதியில் பொலீஸ் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. இதனால் அங்கு வாழும் மக்களுக்குப் பெரும் நெருக்கடிகள் தோன்றியுள்ளன. சில வருடங்களுக்கு முன்னர் வவுனியா பொலீஸ் நிலையம் முன்பாகக் குண்டொன்று வெடித்தபோது, பொலீஸ் நிலையத்துக்கு அண்மித்த பகுதியில் இருந்த மக்கள் மிக மோசமாகத் தாக்கப்பட்டார்கள். இதுபோன்ற ஒரு நிலை எதிர்காலத்தில் தோன்றாது இருக்க வேண்டுமானால் அந்தப் பொலீஸ் நிலையம் அங்கிருந்து அகற்றப்படல் வேண்டும்.

மன்னாரிலிருந்து ஹெரோயின் கடத்தப்படுகிறது. கடத்தல்காரர்கள் பலமுறை பணத்தைப் பொலீஸாருக்குக் கொடுத்துவிட்டுத் தப்பித்துச்சென்ற பல சம்பவங்களை உதாரணமாகக் கூறமுடியும்.

வவுனியாவில் ஆங்காங்கே திடீர்ச் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டு தமிழ் மக்கள் சோதனைக்குட்படுத்தப்பட்டு வருகின்றனர். இது புரிந்தணர்வு ஒப்பந்தத்துக்கு முரணான ஒரு செயலாகும் - என அவர் மேலும் தெரிவித்தார்.

(ஒ-க)

## பூப்புனித நீராட்டுவிழா அழைப்பு

அன்புடையீர்,

எதிர்வரும் ஆடி 22ஆம் திகதி நாளை (06.08.2004) வெள்ளிக்கிழமை காலை 8 மணிமுதல் 10 மணிவரையுள்ள சுபவேளையில்,





எமது புத்திரி

திருநிறைசெல்வி

### ஷாலினி இந்திரதாஸ்

அவர்களுக்கு

பூப்புப்புனித நீராட்டுவிழா நடத்தத் திருவருள் கூடியுள்ளதால் அத்தருணம் எமது உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து செல்வியை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பலாத்தோட்டம்,
கப்பர்மலை, வல்வெட்டித்துறை.
அபிராமி ஸ்ரோஸ்
வல்வெட்டித்துறை.

வரவேற்பாளர்கள்:
சு.சாந்தகுணவடிவேல் குடும்பத்தினர்,
இ.கிருபாகரன் குடும்பத்தினர் (லண்டன்),
இ.பாஸ்கரன் குடும்பத்தினர் (லண்டன்),
இ.தயாகரன் குடும்பத்தினர்.

(34881) (24-14-19)

---

உ

ஓம் சக்தி



சாவகச்சேரி அருள்மிகு

ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம்

### வருடாந்த மஹோற்சவம்

கொடியேற்றம் : நாளை (06-08-2004) வெள்ளி காலை 10.00மணி
தேர்த்திருவிழா : 14-08-2004 சனி காலை 10.00மணி
தீர்த்தத்திருவிழா
(ஆடி அமாவாசைத் தினம்) : 15-08-2004 ஞாயிறு காலை 9.30 மணி
பூங்காவன உற்சவம் : 16-08-2004 திங்கள் மாலை 4.00மணி

அனைவரும் வருக!

அன்னை அருள் பெறுக!!

குறிப்பு: வரலஷ்மி விரதபூஜை 27-08-2004 வெள்ளி பிற்பகல் 2.30மணிக்கு இடம்பெறும்.

- தர்மகர்த்தா.

(34657)(42-14-18-24)

---

### ஹாட்லி மாணவருக்கு ஜனாதிபதி விருது

வடமராட்சி, ஓக.5

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி சாரணர் குழுவைச் சேர்ந்தவர்களான உயர்தர வகுப்பு மாணவர்கள் இருவருக்குச் சாரணிய ஜனாதிபதி விருது கிடைத்துள்ளது.

இ.தேவகுமார், த.கிருபாகரன் ஆகிய இரு மாணவர்களுக்கே இவ்விருது கிடைத்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.(எ-173)

### மருந்துகள் கிடைத்தன

வடமராட்சி, ஓக.5

பருத்தித்துறைப் பிரதேச சபையின் புலோலி சித்த ஆயுள் வேத வைத்தியசாலைக்கு ஒரு தொகுதி மருந்துகள் வந்து சேர்ந்துள்ளன.

இதனால் இங்கு மருந்து வகைகளுக்கு இருந்த தட்டுப்பாடு நீங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.(எ-173)

### முன்பள்ளி ஆசிரிய செயலமர்வு

குடத்தனை, ஓக.5

முன்பள்ளி ஆசிரியர்களுக்கான செயலமர்வு ஒன்று எதிர்வரும் 11ஆம் திகதி புதன்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ். சர்வோதயத்தின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (எ-78)

---

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

சர்வோதய வீதி,
ஆவரங்காலைச்
சேர்ந்தவரும்
தற்போது ஜேர்மனியில்
வாழ்பவருமாகிய
கோ. தர்மசிங்கம்
அவர்களின்
அன்புத் துணைவியார்



பிறப்பு 15 - 12 - 1958

இறப்பு 17 - 08 - 2003

திருமதி

### கமலசறோஜினி தர்மசிங்கம் (வட்டம்)

பன்னிரண்டு மாதங்கள்
ஓடிமறைந்து போனாலும்
கண் இரண்டில் கனவாய்
வந்து போகுதம்மா உந்தன் நினைவலைகள்
அலையாய் மோதும் உறவம்மா
ஆறாய்ப் பெருகும் அன்பின் உணர்வம்மா!
எம்மைவிட்டுப் போகவில்லை என்று
எம் மனம் சொல்லுதம்மா!
எம் இதய நாடிகள் துடிக்கும்வரை

உந்தன் நினைவுகளைச் சுமந்தே வாழுவோம்.
உந்தன் முகம் மறக்கவில்லை
முழுமதியில் காணுகின்றோம்
புன்னகைக்கும் சொல் எல்லாம்
பூத்திருக்கும் காற்றோடு கலந்திருக்கும்
நீங்கள் சொன்ன கதையெல்லாம்
என் நெஞ்சோடு பதிந்திருக்கும்!

பெற்றதாய் நீ இல்லை என்று
சொல்ல மனம் இல்லை.
உந்தன் அன்பின் அரவணைப்பில்
எந்தன் தாயாகி நின்றவளே!
எந்தன் ஆசை அன்ரியே!
உந்தன் மறைவு பேரிடியின் அதிர்வு
மனதை வருத்தி சோகம் சுமந்தோம்
பட்டமரம் தழைப்பதில்லை - ஆனாலும்
பாவி மனம் பொறுக்கவில்லை!
அம்மா உந்தன் நினைவுகளைச் சுமந்தபடி
எந்நாளும் வாழ்ந்திருப்போம்.





- தங்கராசா காந்தீபன்

(பெறாமகன் - லண்டன்).

(34750) (24-14-18)

---

## பின்னுறுதித் தீர்வை

### யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்

சக்திவேல் பெண் சுமதி
எம்.எம்.பாடசாலை லேன், ஆனைக்கோட்டை.
வழக்காளி

வழ. இல. மணநீக்கம் / 455

எதிராக
தணிகாசலம் சக்திவேல்
சிவன் கோயில் அருகில், ஆவரங்கால்.
எதிராளி

இவ்வழக்கு 2004ஆம் ஆண்டு ஆனி மாதம் 29ஆம் திகதி யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்ற நீதிபதி திரு.இ.த.விக்னராஜா அவர்கள் முன்னிலையில் வந்தபோது வழக்காளியும் வழக்காளி சார்பில் சட்டத்தரணி திரு.க.கேசவன் அவர்களும் பிரசன்னமாயிருக்க எதிராளிக்கு அழைப்புக் கட்டளை உதயன் பத்திரிகையில் 27.03.2004ஆம் திகதி பிரசுரிக்கப்பட்டு. திரும்பல் திகதியாகிய 22.04.2004இல் எதிராளி மன்றில் சமுகமளிக்காமையால் இன்று ஒருமுக விளக்கத்திற்கு நியமிக்கப்பட்டதற்கு அமைய வழக்காளியின் சட்டத்தரணி மன்றில் அனுமதியுடன் வழக்காளியின் சாட்சியத்தை நெறிப்படுத்திய பின்னர் வழக்காளியின் பிராது. வ1 என்று அணைக்கப்பட்ட ஆவணம் ஆகியவற்றையும் வழக்காளி மன்றில் அளித்த சாட்சியத்தையும் வழக்கேட்டுடன் மன்று பரிசீலித்து வழக்காளி பிராதில் கோரிய நிவாரணங்களைப்பெறத் தகுதியுடையவரெனக் கண்டு பின்வருமாறு கட்டளையிட்டுத் தீர்ப்பளிக்கப்படுகின்றது.

வழக்காளிக்கும் எதிராளிக்கும் இடையே 2001ஆம் ஆண்டு மாசி மாதம் முதலாம் திகதி நிறைவேறிய திருமணப் பதிவை எதிராளி வழக்காளியை வேண்டுமென்று வன்மமாகத் துறந்தார் என்ற காரணத்திற்காக இத்தால் இரத்துச் செய்து வெற்றும் வெறிதுமானதாக்கிக் கட்டளையிட்டுத் தீர்ப்பளிக்கப்படுகிறது.

இப்பின்னுறுதித் தீர்வையின் பிரதி உதயன் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் எதிராளி எதுவித நடவடிக்கையும் எடுக்கத் தவறுமிடத்து விதிக்கப்பட்ட காலம் முடிவடைந்ததும் இப்பின்னுறுதித் தீர்வையானது முற்றான தீர்வையாக்கப்படுமென இத்தால் கட்டளையிடப்படுகின்றது.

2004ஆம் ஆண்டு ஆனி மாதம் 29ஆம் திகதி.

நீதிமன்றின் கட்டளைப்படி
து.சிறீமோகன்,
பதிவாளர், மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம்.
வரைந்தது - வழக்காளியின் சட்டத்தரணி.

மாவட்ட நீதிபதி
இ.த.விக்னராஜா,
மாவட்ட நீதிமன்று, யாழ்ப்பாணம்.

(34873) (24-14-18)

---

## கேள்வி அறிவித்தல்

### வீடமைப்பு, நிர்மாணத்துறை, கிழக்கு மாகாணக் கல்வி, நீர்ப்பாசன அபிவிருத்தி அமைச்சு கட்டடங்கள் திணைக்களம்

சிறு அளவிலான உட்கட்டமைப்பு புனரமைப்பு மற்றும் தரமுயர்த்தும் திட்டத்தின் (SIRUP II) கீழ் சர்வதேச ஒத்துழைப்பிற்கான ஜப்பான் வங்கியால் நிதியிடப்பட்டது.

1. வவுனியா தொழில்நுட்பக் கல்லூரி, கட்டம் II வகுப்பறைக் கட்டடம் நிர்மாணத்திற்கான சீலிடப்பட்ட கேள்விகள், கட்டடத் திணைக்களக் கேள்விச் சபைத் தலைவரால் 2004.08.26ஆம் திகதி முற்பகல் 10.00 மணிவரை கோரப்படுகின்றன. மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமான ரூபா ஆயிரம் (1000/=) மட்டும் செலுத்தி, யாழ்ப்பாணம், கடற்கரை வீதி, கட்டடங்கள் திணைக்கள பிரதம பொறியியலாளர் (யாழ்ப்பாணம்) அவர்களிடமிருந்து 2004.08.20 ஆம் திகதி பிற்பகல் 3.30 மணிவரையில் பெறக்கூடிய படிவங்களில் கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
2. தகுதிவாய்ந்த கேள்விதாரர் பின்வரும் தகைமை நியமங்களைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.
   நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தினால் (இக்ராட்) தரம் எம் 6இ அதற்கு மேலும், நிர்மாண ஒப்பந்தக்காரர்களின் தேசிய பதிவு மற்றும் தரப்படுத்தல் திட்டத்தின்கீழ் கட்டட நிர்மாண ஒப்பந்தகாரர்களாகப் பதிவுசெய்த மற்றும் இலங்கைத் தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர்கள் சங்க (NCASL) அங்கத்துவமுள்ள கேள்விதாரர்களாயிருத்தல் வேண்டும். ஒப்பந்தகாரர் பதிவுப் புத்தகம் (NCASL) அங்கத்துவ அட்டை என்பவற்றைக் கேள்வி ஆவணங்கள் பெறுமுன் கேள்விதாரர் கட்டாயம் சமர்ப்பிக்கவேண்டும்.
3. யாழ்ப்பாணம், கடற்கரை வீதி, கட்டடங்கள் திணைக்களம், பிரதம பொறியியலாளர் (யாழ்ப்பாணம்) அவர்களிடம் கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிக்கலாம்.
4. கேள்வி மூடப்படும் திகதியிலிருந்து 90 நாள்களுக்குக் கேள்விகள் செல்லுபடியாகும்.
5. கேள்விகள் ஒரு லட்சத்து ஐம்பதினாயிரம் (ரூ.150,000/-) ரூபா பிணையைக் கொண்டிருத்தல் வேண்டும்.
6. தாமதக் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாதாகையால், கேள்வி மூடப்படும் நேரத்திற்கு ஒரு மணி நேரத்திற்கு முன் பாதுகாப்புச் சோதனை நிமித்தம் செத்சிரிபாய வளவுக்குள் கேள்விதாரர் உட்புகுமாறு கேட்கப்படுகிறார்கள்.
7. சீலிடப்பட்ட கேள்விகள் பதிவுத் தபாலிமூலம் அனுப்பப்படலாம் அல்லது நேரடியாக மூடப்படும் நேரத்திற்கு முன் பத்தரமுல்ல, கோட்டே, ஸ்ரீஜயவர்த்தனபுர, "செத்சிரிபாய", கட்டடங்கள் திணைக்களம், கேள்விச் சபைத் தலைவரிடம் ஒப்படைக்கலாம்.
8. மூடப்பட்டவுடன் கேள்விகள் உடனடியாகப் பத்தரமுல்ல, செத்சிரிபாய, 2ஆவது மாடி, கட்டடங்கள் திணைக்களம், ஒப்பந்தங்கள் பிரிவில் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும்போது கேள்விதாரர் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்குமாறு கேட்கப்படுகிறார்கள்.
9. மேலதிக விவரங்களுக்குத் தயவுசெய்து யாழ்ப்பாணம், கடற்கரை வீதி, கட்டடங்கள் திணைக்களம், பிரதம பொறியியலாளரைத் (யாழ்ப்பாணம்) தொடர்புகொள்ளவும்.

டபிள்யூ.எஸ்.மொல்லிகொட
கட்டடங்கள் பணிப்பாளர்,
கட்டடங்கள் திணைக்களம்,
செத்சிரிபாய, பத்தரமுல்ல.

WWW. buildings.gov.lk

(சி-36416) (24-14-18)

# சின்னமடுவில் அருள்பொழியும் விண்ணக அன்னைக்குத் திருவிழா

**ஊர்காவற்றுறை, புளியங்கூடல், சின்னமடு மாதா யாத்திரைத்தல வருடாந்தத் திருவிழா இன்று வியாழகவிழமை நடைபெறுகின்றது. அதனை முன்னிட்டு இந்த ஆக்கம் பிரசுரமாகிறது.**

**யாழ்.** மறைமாவட்டத்திலுள்ள சின்னமடு செபமாலை மாதா ஆலயம், இந்த ஆண்டுடன் 110ஆண்டுகளை நிறைவு செய்கிறது.

குடாநாட்டில் இருந்து மட்டுமன்றி நாட்டின் பலபாகங்களில் இருந்தும் இன, மத, மொழி வேறுபாடின்றி பல்லின மக்களும் வருடாவருடம் ஆலயத்தில் நடைபெறும் உற்சவத்தில் கலந்து கொள்ளுகின்றனர். அதேபோன்று இம்முறையும் பெருந்திரளான பக்தர்கள் அன்னையின் அருளாசி வேண்டியும் தத்தமது நேர்த்திக்கடன்களை நிறைவேற்றுவித்துக் கொள்ளும் பொருட்டும் ஆலயத்திற்கு வருகைதந்த வண்ணமுள்ளனர்.

நீண்ட காலமாக நடைபெற்று வந்த யுத்தத்தினால் தமது சொந்த இருப்பிடங்களை விட்டு அகதிகளாக வெளியேறிய தீவுப்பகுதி உள்ளிட்ட குடாநாட்டு மக்கள் கடந்த சில வருடங்களாக நிலவிவரும் அமைதிச் சூழலையடுத்து தமது சொந்த இடங்களுக்குப் படிப்படியாகத் திரும்பி வருகின்றனர்.

இவர்கள் சிதைந்துபோன தமது வாழ்விடங்களை மீளக்கட்டியெழுப்பிவருவது போன்று தாங்கள் காலங்காலமாகப் பேணிவந்த ஆலயங்களைப் புனரமைப்புச் செய்துவருவதுடன் தத்தமது பண்பாடு, கலை, கலாசாரம் ஆகியவற்றிற்கு மீண்டும் புத்துயிர் அளித்து வருகின்றனர்.

தமிழர் வரலாற்றில் ஆலயங்கள் வெறும் மதச்சடங்குகளை நிறைவேற்றுவித்துக் கொள்ளும் இடங்களாக மட்டுமன்றி, மனிதர்களில் தேங்கியுள்ள தீய எண்ணங்களை அகற்றி, அவர்கள் தம் மனங்களில் அன்பு, மனிதாபிமானம், சகோதரத்துவம் போன்ற சீரிய எண்ணங்களை வளர்க்கும் சந்நிதானங்களாகவும் விளங்குகின்றன.

இந்த வருடாந்த பெருந்திருவிழாவில் ஒன்றுகூடியுள்ள அனைவரினதும் உள்ளங்களில் சின்னமடு அன்னை தீய எண்ணங்களை அகற்றி, உள்ளொளியினைப் பிரகாசிக்க வேண்டிப் பிரார்த்திப்பதோடு மட்டுமன்றி, இந்தநாட்டினைப் பீடித்துள்ள கொடிய யுத்தம் முற்றாக ஒழிந்துவிடவும் சம்பந்தப்பட்ட தரப்பினர் மத்தியில் நம்பிக்கையையும் புரிந்துணர்வையும் கட்டியெழுப்பி, நீடித்த, நிலையான சமாதானம் நின்று நிலைபெறவும் அந்த நன்னாளில் பிரார்த்தித்தல் சாலச்சிறந்ததாகும்.

தீவுப்பகுதி மக்கள் ஊர்ப்பற்றும் சமயப்பற்றும் மிகுந்தவர்கள். ஏனெனில், நீண்ட காலயுத்தத்தினால் அவர்கள் தமது சொந்த இடங்களை விட்டு நாட்டின் பல பாகங்களிலும் நிரந்தரமாகக் குடியமர்ந்துவிட்ட போதிலும் தத்தமது பிரதேசங்களில் நடைபெறும் ஆலய உற்சவங்களில் தவறாது ஒன்று கூடுவார்கள்.

ஊர்காவற்றுறை சின்னமடுமாதா ஆலயம் நீடிய வரலாற்றினைக் கொண்டமைந்தது மட்டுமன்றி, பல அற்புத செயல்கள் இடம்பெற்ற திருத்தலமுமாகும்.

எனவே, இந்த ஆலயத்தின் சிறப்பினை ஆராய்வதாயின் அதன் வரலாற்றினை முன்னோக்கிப் பார்ப்பது சாலச்சிறந்தது. இன்றைக்கு ஒன்றரை நூற்றாண்டுகளுக்கு முன்னர் யாழ்ப்பாண இராச்சியத்தின் காவல்நகரமாகவும், துறைமுக நகராகவும் விளங்கிய ஊர்காவற்றுறை நகரில இருந்து தென்கிழக்கே சுமார் 5மைல் தொலைவில் அமைந்துள்ள சின்னமடுக் கிராமத்தில் அன்னையின் அற்புதம் நிகழ்ந்தேறியது.

இக்கிராமத்தில் வாழ்ந்த வள்ளுவர் குலத்தைச் சேர்ந்த சிறுவர்கள் சின்னமடு துலாக்



கொண்டான் எனும் காணியில் உள்ள வர்கை மரத்தின்கீழ் வழமைபோன்று ஆடிப்பாடி மகிழ்ச்சியோடு விளையாடிக்கொண்டிருந்தனர். அன்றைய தினம் சிறுவர்கள் வழமைக்குமாறாக மண்ணில் சிறிய மாதாச்சுருவத்தினைச் செய்து விளையாடிக்கொண்டிருந்தபோது அந்த அற்புதம் நிகழ்ந்தது.

சிறுவர்கள் உருவாக்கிய மாதா சுருவத்தில் இருந்து பேரொளி பிரகாசித்தது. விளையாடிக்கொண்டிருந்த சிறுவர்களுக்கு ஒரே ஆச்சரியம். திகைப்போடு அதனை உற்று நோக்கிக் கொண்டிருந்தனர். அக்கணமே சின்னமடு அன்னை சிறுவர்கள் முன்னிலையில் தோன்றி அவர்களுக்கு அருள்பாலித்தார்.

நடந்த சம்பவங்களைக் கண்டு திகைப்பும் ஆச்சரியமும் ஒருங்கே அடைந்த சிறுவர்கள், தமது விளையாட்டினை நிறுத்திவிட்டு தத்தமது பெற்றோருக்கு ஓடிச் சென்றுதகவலைத் தெரிவித்தனர். இச்சம்பவம் தீவுப்பகுதியெங்கும் காட்டுத்தீ போல் பரவியது. அச்சமயம் தீவுப்பகுதியில் பங்குத் தந்தையாக இருந்த ஆங்கிலேயரான போல் என்பவரும் இச்செய்தி பற்றிக் கேள்விப்பட்டதும் சின்னமடுவிற்கு விரைந்து வந்து மாதாச் சுருவத்தினைப் பொறுப்பேற்று உரோமாபுரிக்கு அனுப்பிவைத்தார்.

பின்னர் அப்பகுதி மக்கள் ஒன்றிணைந்து காட்சி கொடுத்தருளிய துலாக் கொண்டான் காணியில் சிறிய ஆலயம் ஒன்றைக் கட்டி வழிபட்டு வரலாயினர்.

கால ஓட்டத்தில் 1896ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு வருடமும் ஓகஸ்ட்மாதம் 5ஆம் திகதி சின்னமடுமாதா ஆலயத்திருவிழா கொண்டாடப்பட்டு வருகிறது. இவ்வாறு மெல்ல மெல்ல வளர்ச்சியுற்ற இவ்வாலயத்திற்குத் தீவகத்தில் மட்டுமன்றி, யாழ். குடாநாட்டின் இதர பகுதிகளில் இருந்தும் பெரும் எண்ணிக்கையானோர் சென்று வழிபட்டு வரலாயினர்.

1909ஆம் ஆண்டு ஆயர் யூலன் அவர்களால் இவ்வாலயம் யாழ். மறைமாவட்டத்தின் யாத்திரிகர் தலமாக பிரகடனப்படுத்தப்பட்டமை இவ்வாலயத்தின் மகிமையை மேலும் சான்றுபகர்கின்றது.

எனினும், 1990ஆம் ஆண்டு தீவகத்தில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையினால் இவ்வாலயம் பலத்த சேதமடைந்தது. 1996ஆம் ஆண்டு தீவுப்பகுதியில் மக்கள் மீளக்குடியமர்ந்ததைத் தொடர்ந்து இவ்வாலயத்தை மீளவும் புத்துயிர் அழிக்கும் பொருட்டு வடமாகாண மீள்குடியேற்ற புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகாரசபை 1999ஆம் ஆண்டு 20லட்சம் ரூபாவை ஒதுக்கியிருந்தது. இப்புனரமைப்புப்பணி காரணமாக ஆலயம் தற்பொழுது மீண்டும் புதுப்பொலிவு பெற்று விளங்குகிறது.

கடந்த 27ஆம் திகதி கொடியேற்றத்துடன் இவவாலயத்தின் வருடாந்தத் திருவிழா ஆரம்பமானது. கடந்த வருடத்தைவிட இவ்வருடம் ஆலயத்திற்குப் பெரும் எண்ணிக்கையான யாத்திரிகர்கள் வருகைதரக்கூடும் என எதிர்பார்க்கப்படுவதால் ஆலயச்சுற்றாடலில் விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. குடிநீர், தொண்டர் சேவை, விசேட போக்குவரத்து ஒழுங்குகள் என ஆலயச் சுற்றாடல் விழாக்கோலம் பூண்டுள்ளது.

யாத்திரிகர்களின் நலன்கருதி ஆலயச் சுற்றாடலில் அமைக்கப்படும் குளிர்பான நிலையங்கள், ஐஸ்கிறீம் விற்பனை நிலையங்கள், உணவுச்சாலைகளில் மிகுந்த சுகாதார நடைமுறைகள் பேணுவது, சுகாதாரப் பகுதியினரால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இறுதித்தினமான இன்று காலை நடைபெறும் மாதாவின் திருச்சொரூப பவனியைக் கண்டுகளிப்பதற்கென குடாநாட்டின் பல இடங்களில் இருந்தும் வருகைதரும் யாத்திரிகர்களின் நலன்கருதி வடபிராந்தியப் போக்குவரத்துச் சபையினால் யாழ். பஸ் நிலையத்தில் இருந்து விசேட பஸ் சேவைகள் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன. ★

**க.ஸ்ரீஸ்கந்தராசா**
பிரதேச செய்தியாள்ர்,
ஊர்காவற்றுறை

## புலோலி பொது நூலகத்தில் தண்ணீர்த் தாங்கி நிறுவ நிதி ஒதுக்கீடு

வடமராட்சி,ஓக.5

புலோலி பொதுநூலகத்தில் குடிதண்ணீர் வசதியை ஏற்படுத்துமுகமாக தண்ணீர்த் தாங்கி ஒன்றை அமைக்க பருத்தித்துறை பிரதேச சபை நிதியிலிருந்து 90ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன், சபையின் செம்பியன்பற்று உப அலுவலக எல்லைக்குள் உள்ள போக்கறுப்பு - நித்தியவெட்டை வீதி 7 லட்சம் ரூபா செலவிலும் -

புலோலி உப அலுவலக எல்லைப் பகுதிக்குள் உள்ள சக்கோட்டை - நாச்சிமார் வீதி 10 லடசம் ரூபா செலவிலும் - புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

இந்த வீதிகள் புனரமைப்புக்கான நிதியினை யாழ்.அரச அதிபர் ஒதுக்கீடு செய்துள்ளார். (எ-173)

## ஆசிரிய வெற்றிடங்களை நிரப்ப உடன் நடவடிக்கை

கொழும்பு,ஓக.5

பாடசாலைகளில் நிலவும் ஆசிரிய வெற்றிடங்களை நிரப்புவதற்குக் கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

தேசியப் பாடசாலைகள் உட்பட ஏனைய அனைத்துப் பாடசாலைகளிலும் உள்ள ஆசிரிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு இவ்வருடம் டிசெம்பர் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி பணித்துள்ளார் என்று கல்வி அமைச்சு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் சில வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட கல்விச் சீர்திருத்த வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகக் கல்வி அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

ஆசிரியப் பற்றாக்குறையே இந்த நிலைமைக்குக் காரணம் என்று அமைச்சு மேலும் கூறியுள்ளது.

(ஓ-9)

## நோர்வேயிலிருந்து வந்தவர்களிடம் பணம, நகைகள் திருட்டு

வடமராட்சி,ஓக.5

நோர்வேயிலிருந்து விடுமுறைக்காக வந்த குடும்பத்திடமிருந்து நகைகள், பணம் ஆகியன திருடப்பட்டுள்ளன.

இச்சம்பவம் வடமராட்சி கிழக்கிலுள்ள உடுத்துறையில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது:

உடுதுறையைச் சேர்ந்த மூசிவஞானசுந்தரம் பல ஆண்டுகள் நோர்வேயில் வசித்துவிட்டு தனது குடும்பத்தாருடன் சொந்த ஊருக்கு விடுமுறையைக் கழிக்க வந்திருந்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு நித்திரையில் இருந்தவேளை அவர்களிடமிருந்த 20 பவுண் தங்க நகைகள், 50ஆயிரம் ரூபா ரொக்கப்பணம் மற்றும் வெளிநாட்டுப் பண நோட்டுக்கள் ஆகியன கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(எ-182)

# பொலீஸ் நிலையங்களில் தமிழில் முறைப்பாடு செய்யமுடியாத நிலை!

## குறைப்படுகின்றார் இராதாகிருஸ்ணன்

கொழும்பு, ஓக.6

பொலீஸ் ஆணைக்குழு பற்றி இந்தச் சபையில் பேசப்படுகின்றது. ஆனால், தமிழர்கள் தமது தாய்மொழியில் முறைப்பாடு செய்யமுடியாத நிலையே இன்றும் உள்ளது.

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஒத்திவைப்புப் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய மலையக மக்கள் முன்னணி எம்.பி. பெ.இராதாகிருஸ்ணன் 'எம்.பி. இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

சிறுபான்மைத் தமிழர்கள் பெரும்பான்மை இனமக்கள் வாழும் பகுதிகளில் மிகவும் அச்சத்துடனேயே வாழ்ந்துவருகின்றனர். புளத்சிங்கள, மில்லங்கந்தையில் அண்மையில் தாக்கப்பட்ட தமிழர்கள் பொலீஸில் சென்று முறைப்பாடு செய்யமுடியாத நிலையிலுள்ளனர். இன்றும்கூட, பெரும்பான்மை இனத்தவருக்குப் பயந்து ஒளிந்துவாழும் நிலையே உள்ளது.

எனவே, பொலீஸ் நிலையங்களில் தமிழர்கள் நியமிக்கப்படவேண்டும். அண்மையில் வழங்கப்பட்ட பொலீஸ் பதவி உயர்வுகளின் போது மூன்று தமிழர்களுக்கு மட்டுமே ஏ.எஸ்.பி. தரத்தில் பதவியுயர்வு வழங்கப்பட்டுள்ளது.

பொலீஸ்துறையில் இருபதுவீதமான சிறுபான்மையினரே உள்ளனர். முன்னாள் பொலீஸ்மா அதிபர், பொலீஸ் திணைக்களத்தில் சிறுபானமையினருக்கு விகிதாசார அடிப்படையில் தொழில் வாய்ப்புகள் வழங்குவதற்கான வெற்றிடங்கள் இருப்பதாகக் கூறினார். இருப்பினும், அது நிரப்பப்படவில்லை.

\- என அவர் கூறினார். (ஓ-க)

# பதில் பதிவாளர்கள் அனைவரும் அப்பதவியில் நிரந்தரமாக்கப்படுவர்

யாழ்ப்பாணம்,ஓக.5

யாழ்.மாவட்டத்தில் பதில் கடமைபுரியும் சகல விவாகப், பிறப்பு, இறப்புப் பதிவாளர்களும் அவர்களது பதவியில் நிரந்தரமாக்கப்படவிருக்கின்றனர்.

பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் அமரசிறி தொடங்கொட இதற்கான பணிப்புரையை விடுத்துள்ளார்.

குடாநாட்டில் 40இற்கும் மேற்பட்ட பதிவாளர் பிரிவுகளில் பதில் பதிவாளர்களே பணியாற்றுகின்றனர். நீண்டகாலமாகப் பணியாற்றும் இவர்கள், நிரந்தரமாக்கப்படவேண்டியது அவசியம் என்று யாழ்.அரச அதிபர் அமைச்சரிடம் கேட்டிருந்தார்.

இதை ஏற்றுக்கொண்டுள்ள அமைச்சர் பதில்கடமையில் உள்ள பதிவாளர்களில் தகுதியானவர்களை நிரந்தரமாக்க நடவடிக்கை எடுக்கும்படி பணிப்புரை விடுத்துள்ளார்.(ஐ-3)

# இளைஞர்சேவை மன்றத்தின் ஏற்பாட்டில் குடும்பத்திறன் அபிவிருத்திப் பயிற்சிநெறி

## நான்கு பிரதேச செயலாளர் பிரிவுகளில் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஓக.5

யாழ். மாவட்டத்திலுள்ள யுவதிகளுக்கான குடும்பத்திறன் அபிவிருத்திப் பயிற்சிநெறி ஒன்றை தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ்மாவட்ட அலுவலகம் ஆரம்பித்துள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி, விளையாட்டுத்துறை, இளைஞர் விவகாரப் பிரிவின் நிதி ஒதுக்கீட்டில் இருந்து இப்பயிற்சி நெறி ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

கோப்பாய், உடுவில், சாவகச்சேரி ஆகிய மூன்று பிரதேச செயலகப் பிரிவுகளில் முதற்கட்டமாகப் பயிற்சிநெறி ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும், பாடசாலையை விட்டுவிலகிய 17 வயதிற்கும் 29 வயதிற்கும் இடைப்பட்ட பெண்கள் இப்பயிற்சி நெறியில் இணைந்துகொள்ளலாம் என்றும் -

நடமாடும் மகளிர் சேவைப் பயிற்சி நெறி எனப்படும் இத்திட்டத்தின் கீழ் பெண்களுக்கான ஆடைதயாரிப்பு, பிளாஸ்ரிக் பூச்செய்தல், வீட்டுத் தோட்டம், கேக் ஐசிங், பொம்மை, சிகையலங்காரம், சிற்றுண்டி, குடும்ப சுகாதாரம், மணப்பெண் அலங்காரம், திட்டமிடல் தலைமைத்துவம், மிருகவளர்ப்பு போன்ற பயிற்சிகள் வழங்கப்படும் என்றும் - அறிவிக்கப்பட்டுள்ளது.

பயிற்சி நெறியில் இணைந்துகொள்ள விரும்புபவர்கள் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ்.மாவட்ட அலுவலகத்துடன் தொடர்புகொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(எ-7)

# சிரேஷ்ட பொலீஸ் இன்ஸ்பெக்டர்களின் பதவி உயர்வுகளுக்கு இடைக்காலத் தடை

தேசிய பொலீஸ் ஆணைக்குழு வழங்கியிருக்கும் சிரேஷ்ட பொலீஸ் இன்ஸ்பெக்டர்களுக்கான பதவி உயர்வுகளை இடைநிறுத்தும் வகையில் இடைக்காலத் தடை உத்தரவை நேற்றுமுன்தினம் உயர்நீதிமன்றம் பிறப்பித்தது.

இந்த உத்தரவைப் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா தலைமையிலான மன்று வழங்கியுள்ளது.

பொலீஸ் இன்ஸ்பெக்டர்கள் பதினெட்டுப்பேர் இந்தப் பதவி உயர்வுகளில் தமது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளன எனச் சமர்ப்பித்த மனுவை ஒக்ரோபர் 15ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்வதற்கு அனுமதி அளித்தே உயர் நீதிமன்றம் அதுவரை இந்த இடைக்கால உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

தேசிய பொலீஸ் ஆணைக்குழு அதன் தலைவர் உட்படப் பலர் இந்த மனுவில் பிரதிவாதிகளாகக் குறிப்பிட்டுள்ளனர்.

பொலீஸ் பதவி உயர்வுகள் தொடர்பாகத் தேசிய பொலீஸ் ஆணைக்குழு கடைப்பிடித்திருக்கின்ற வழிமுறைகள் எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ளமுடியாதவை என்று நீதிமன்றம் கருதுவதாகத் தெரிகின்றது.

சுயாதீன பொலீஸ் ஆணைக்குழு பொறுப்பற்ற முறையில் செயற்படுமாயின் மக்கள் அதன்மீது கொண்டுள்ள நம்பிக்கையை இழப்பர் எனவும் பிரதம நீதியரசர் சுட்டிக்காட்டியுமுள்ளார். (க)

# குரு பெயர்ச்சியால் எத்தகைய பலன் கிட்டும்?

4 குருபகவான் தற்போது சிம்மராசியில் இருந்து கன்னி ராசிக்குச் செல்கிறார். குரு பெயர்சசி வாக்கியப் பஞ்சாங்கப்படி இந்த ஆண்டு (2004) ஓகஸ்ட் மாதம் 19ஆம் திகதியன்று நடக்கிறது. (திருக் கணித பஞ்சாங்கப்படி ஓகஸ்ட் மாதம் 27ஆம் திகதி குரு பெயர்சசி நிகழ்கிறது) இவர் 2005ஆம் ஆண்டு செப்ரெம பர் மாதம் 4ஆம திகதி வரை கன்னி ராசியில் இருப்பார்.

குரு பெயர்ச்சியினால் 12 இராசிகளின் பலன் மாற்றங கள் தொடர்பான தகவல்கள் இங்கு தொடர்ந்து பரசுர மாகின்றன. நேற்றைய பத்திரிகையில் சிங்கம், கன்னி ஆகிய ராசிகளின் பலன்கள் வெளியாகி இருந்தன தெரிந்ததே.

## துலாம்

துலாம் ராசி அன்பர்கள் நீதி நேர்மையுடன் வாழ விரும்புவர். நீங்கள் சிறந்த நண்பர்களையும், நல்ல உற வினர்களையும் பெற்றவர்களாக இருப்பீர்கள். மனதில் பட்டதை ஒளிவுமறைவு இன்றி சொல்லிவிடுவீர்கள். உங்கள் ராசிக்கு இதுவரை குரு பகவான் 11ஆம் இடத்தில் இருந்து வந்தார்.

அவர் உங்களுக்குப் பல்வேறு நன்மைகளைச் செய்தி ருப்பார். குறிப்பாக புதிய பதவியும், சம்பள உயர்வும் கிடைத் திருக்கும். வேலையில் திருப்தி கண்டிருப்பீர்கள். வியாபாரம் சிறப்பாக இருந்திருக்கும். பணப்புழக்கம் மேம்பட்டிருக்கும்.

எடுத்த காரியத்தை எல்லாம் வெற்றிகரமாகச் செய்து முடித்திருப்பீர்கள். மற்றைய முக்கிய கிரகங்கள் திருப்தி கரமாக இல்லை என்பதால் சிற்சில இடையூறுகளை சந்தித்திருக்கவும் வாய்ப்பு உண்டு.

ராசியில் இருக்கும் கேது உங்கள் முயற்சியில் தடை களையும், 7ஆம் இடத்தில் உள்ள ராகு குடும்பத்தில் பிரச்சி னையையும் 9ஆம் இடத்தில் இருக்கும் சனி பகை உணர் வையும் உருவாக்கி இருப்பார்கள். ஆனாலும் இந்த இடை யூறுகளையெல்லாம் முறியடித்து ஓரளவு வெற்றி கண் டிருந்தால் அது குருவின் பலத்தால்தான்.

இதுவரைப் பல்வேறு நன்மைகளைத் தந்த குரு பகவான் இப்போது உங்கள் ராசிக்கு 12ஆம் இடத்திற்கு அடியெ டுத்து வைத்துள்ளார். இது சுமாரான நிலையே. குரு 12ஆம் இடத்தில் இருக்கும்போது பொருள் நாசம் ஏற்படும். பல்வேறு தொல்லைகள் உருவாகும். மனதில் நீங்காத வருத்தம் உருவாகும்.

வீண் அலைச்சல் ஏற்படும் என்பது பொதுவான பலன். இதனால் நீங்கள் மனம் ஒடிந்து போய்விட வேண்டாம். குரு பகவான் கெடு பலனைச் செய்யும்போது அது உங்களுக்கு இறுதியில் நன்மையிலேயே முடியும்.

ஆசிரியர் மாணவனைக் கண்டிப்பது போன்றே குரு பகவான் தண்டனை அமையும். மாணவனை ஆசிரியர் அடிப்பது நன்மைக்கே. அதேபோல் குரு பகவானின் கெடுபலன்கள் உங்களுக்கு இறுதியில் நன்மையே தரும்.

குரு பகவான் கன்னி ராசியில் இருக்கும் காலம் முழுவதும் சனி பகவான் 9ஆம் இடமான மிதுன ராசியில் தான் இருப்பார். அவரால் பல்வேறு தடைகளையும் காரிய அனுகூலமின்மையையும் சந்திக்க வேண்டிவரலாம். சனி திருப்திகரமாக காணப்படாவிட்டாலும் அவரது பார்வைகள் சிறப்பாக உள்ளன.

சனி தான் இருக்கும் ராசியில் இருந்து 3ஆம், 7ஆம், 10ஆம் ஆகிய வீட்டை பார்ப்பார். இந்த மூன்று பார்வை களும் உங்களுக்கு மிகச் சிறப்பாக உள்ளன. எனவே, அதன் மூலம் அவர் உங்களுக்கு பல்வேறு நன்மைகளைத் தருவார்.

மேலும் 2005 பெப்ரவரி 28ஆம் திகதிக்குப் பிறகு சனிக்கு வேதையாக ராகு வருவார். அப்போது சனியால் கெடு பலன்கள் கொடுக்க முடியாது.

2005 பெப்ரவரி 28ஆம் திகதி ராகு–கேது பெயர்ச்சி நடக்கிறது. அப்போது 7ஆம் இடத்தில் உள்ள ராகு 6ஆம் இடமான மீனத்திற்கு வருகிறார். இது உங்களுக்கு சிறப்பான நிலை. அவரால் தற்போது நிகழ்ந்து வரும் பிற்போக்கான பலன்கள் முடிவுக்கு வந்து நல்ல பொரு ளாதார வளத்தைக் கொடுப்பார்.

உங்களை முன்னேற்றப் பாதைக்கு அழைத்துச் செல் வார். அதே நாளில் கேது உங்கள் ராசியில் இருந்து 12ஆம் இடமான கன்னிக்கு செல்கிறார்.

இது சிறப்பான இடம் என்று சொல்ல முடியாது. இந்தக் கேதுவின் இடப்பெயர்ச்சியால் நீங்கள் சந்தித்து வந்த தடைகள் அகலும். ஆனால் அதன்பின் கேது செலவை அதிகப்படுத்துவார்.

மேற்கண்ட நிலையில் ஆராய்ந்து பார்க்கும்போது குரு சாதகமற்ற இடத்திற்கு சென்றாலும் சனியின் பார்வை யாலும் 2005 பெப்ரவரிக்கு பிறகு ராகுவாலும் நற்பலனை கொடுப்பார்கள். அந்த வகையில் விரிவான பலனைக் காணலாம்.

பொருளாதார வளம் சிறப்பாக இருக்கும். உங்கள் முயற்சியில் ஆரம்ப காலத்தில் பல்வேறு தடைகளைச் சந்திக்க வேண்டியிருக்கும். 28.2.2005 இற்கு பிறகு தடைகள் அகலும். நினைத்த காரியத்தை வெற்றிகரமாக முடிக்கலாம். தேவைகள் பூர்த்தி ஆகும்.

வீட்டுக்குத் தேவையான வசதிகள் கிடைக்கும். உங்கள் செல்வாக்கு முன்போல் இல்லாவிட்டாலும் மதிப்பு மரியாதை குறையாது. கௌரவம் எந்தவிதத்திலும் பாதிக்காது. 2005 மார்ச் மாதத்திற்குப் பிறகு பண இழப்புகள் வந்தாலும் அதை எளிதில் சமாளிப்பீர்கள்.

குடும்பம்– வசதிக்கு எந்தக் குறையும் ஏற்படாது. குரு இடம் மாறுவதால் ஆரம்பத்தில் சிற்சில பின்னடைவுகள் நடப்பது போல் தோன்றும். ஆனால் அது ஒரு மாயை என்பதை புரிந்து கொள்வீர்கள். கணவன்–மனைவி இடையே அன்பும் பாசமும் நீடிக்கும்.

தற்போது சிலரது வீட்டில் முக்கிய முடிவு எடுப்பதில் தம்பதியினரிடையே கருத்து வேறுபாடு நிலவி வரலாம். இது சில சமயங்களில் ஊடலாகவும் மாறும். இந்தப் பிரச்சினைக்கு காரணம் ராகுதான். அவர் பெப்ரவரி 28 ஆம் திகதி இடமாறியபின் குடும்பத்தில் முழு அமைதி நிலவும்.

தற்காலிகமாக பிரிந்திருந்த குடும்பம் ஒன்று சேரும். உறவினர்கள் மத்தியில் சீரான நிலை இருக்கும். தூரத்து சொந்தத்தில் இருந்து விரும்பத்தகாத செய்தி வரலாம்.

சிலர் அதிக முயற்சி எடுத்து புதிய வீடு, மனை வாங்கலாம். அதனால் கையிருப்பு கரையலாம். கடன் வாங்கும் நிலை உருவாகலாம். திருமணம் போன்ற சுப நிகழ்ச்சிகள் தரமதப்படலாம்.

உத்தியோகம்– கடந்த காலத்தை போல் அசட்டையாக இருந்து விட வேண்டாம். எதிலும் அதிக அக்கறை காட்ட வேண்டியிருக்கும். வேலைப்பளு அதிகரிக்கும். அலைச்சல் இருக்கும். மேல் அதிகாரிகளிடம் அனுசரித்துப் போகவும்.

அதிக சிரத்தை எடுத்தால்தான் கோரிக்கைகள் நிறைவேறும். உங்கள் பொறுப்புகளை வேறு யாரிடமும் ஒப்படைக்க வேண்டாம். நீங்கள் எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைப்பதில் தாமதம் ஏற்படலாம்.

உங்கள் திறமைக்கு ஏற்ப மதிப்பு, பாராட்டு இல்லாமல் போகலாம். ஆனால் உங்களுக்கு பண வரவு இருந்து கொண்டே இருக்கும். சிலருக்கு இடமாற்றம் ஏற்படும்.

வியாபாரம்– படிப்படியாக முன்னேற்றம் காணலாம். புதிய தொழிலில் இருந்து வந்த தடைகள் நீங்கும். சிலர் வியாபார விடயமாக வெளிநாடு சென்று வருவர். கூட்டாளிகளிடையே ஒற்றுமை ஏற்படும்.

உங்களிடம் வேலைபார்ப்பவர்கள் நம்பிக்கையுடன் இருப்பர். அரசிடம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். இரும்பு தொடர்பான வியாபாரிகள் நல்ல முன்னேற்றத்தை காணலாம்.

எள், கரும்பு போன்ற தானிய வியாபாரிகளும் சிறப்புப் பெறுவர். வேலையின்றி இருப்பவர்கள் குறைந்த முதலீட்டில் புதிய தொழில் தொடங்கலாம். அது நல்ல வளர்ச்சியை அடையும்.

உடல்நலம்– சிறப்பாக இருக்கும். பெப்ரவரிக்குப் பிறகு பித்தம், மயக்கம் மற்றும் கண் தொடர்பான உபாதைகள் வரலாம். வழக்கு விவகாரங்கள் சீராக இருக்கும். பெப்ரவரிக்கு பிறகு வரும் தீர்ப்பு சாதகமாக வரலாம். புதிய வழக்கு எதிலும் சிக்க வேண்டாம்.

## விருச்சிகம்

விருச்சிக ராசி அன்பர்கள் சுறுசுறுப்புக்கு எடுத்துக் காட்டாக விளங்குவீர்கள். நீங்கள் பிறர் உங்களுக்கு செய்த துரோகத்தை ஒரு நாளும் மறக்காத குணம் கொண்டவர்கள். உங்களுக்கு இது ஒரு பொற்காலம். செவ்வாய் உங்கள் ஆட்சி நாயகன் என்பதால் வீர தீரத்திற்கு அஞ்சமாட்டீர்கள்.

எதையும் துணிச்சலோடு செய்து அதில் வெற்றியும் காண்பீர்கள். உங்களுக்கு கடந்த காலம் ஒரு கசப்பான அனுபவத்தையே தந்திருக்கும். உங்கள் ராசிக்கு 10ஆம் இடத்தில் குரு பகவான் இருந்ததால் தரித்திரம் அதிகமாகி இருந்திருக்கும்.

சிலர் பிறரிடம் கையேந்தும் நிலைக்கு கூட த்தள் ளப்பட்டிருக்கலாம். மேலும் பொருள் நஷ்டம் பதவி இழப்பு போன்றவையும் நடந்திருக்கலாம். மேலும் அஷ்டமத்தில் சனி இருப்பதால் உங்கள் முயற்சியில் தடையும், உறவினர்கள் மத்தியில் செல்வாக்கு இன்மையும் இருந்திருக்கும்.

கேது 12ஆம் இடத்தில் இருப்பதால் பணவிரயமும், உடல் உபாதைகளும் வந்திருக்கும். ஆனால் ராகு 6ஆம் இடத்தில் இருந்து பொருளாதார வளத்தை தக்க வைத் திருப்பார்.

பணத்தின் மூலம் எதையும் சாதித்திருப்பீர்கள். எது எப்படியானாலும் நன்மையை விட கஷ்டங்களே மிஞ்சி இருந்திருக்கும்.

அந்த நிலை இனி மாறும். அதற்குக் காரணம் குரு 11ஆம் இடத்திற்கு வந்திருப்பது தான். இது உங்களை பொறுத்தவரை மி கவும் உன்னதமான நிலை.

குரு சாதகமான இடத் திற்கு வந்துவிட்டதால் எண் ணற்ற பல நன்மைகளை காணவாய்ப்பிருக்கிறது. பொருளாதார வளம் மேம்ப டும். உத்தியோகம் சிறப்படை யும். புதிய பதவி கிடைக்கும்.

குரு கன்னி ராசியில் இருக்கும் காலத்தில் சனி பகவான் தொடர்ந்து 8ஆம் இடத்தில் இருப்பார். இது சுமாரான நிலை என்று ஏற்கனவே கூறியுள்ளோம். 2005ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28ஆம் திகதி ராகு– கேது பெயர்ச்சி நடக்கிறது. இதில் 6ஆம் இடத்தில் இருக் கும் ராகு 5ஆம் இடத் திற்கு மாறுகிறார்.

இது சுமாரான நிலை தான். அதேநேரம் 12இல் இருந்த கேது 11ஆம் வீட்டிற்கு மாறுவது சிறப்பானது. அதன்மூலம் பொருளாதார வளம் சிறப்படையும். ராகுவால் குடும்பத்தில் சிறுசிறு பிரச்சினை வந்தாலும் அதை குரு பகவான் முறியடித்து மேம்படுத்துவார்.

மேலும் ராகு 5ஆம் இடத்தில் இருக்கும் போது அவருக்கு வேதையாக கேது வருவார். அதனால் ராகுவால் கெடுபலன்கள் வரவாய்ப்பு இல்லை.

மேற்கண்ட நிலையைக் கொண்டு பொதுவான–விரிவான பலன்களை இனிக் காணலாம்.

எடுத்த எந்தக் காரியமும் வெற்றிகரமாக நிறைவேறும். பணப்புழக்கம் அதிகரிக்கும். தேவைகள் பூர்த்தியாகும். நினைத்ததை வாங்கும் அளவுக்கு பொருளாதார வளம் சிறப்படையும்.

சோதிட வித்தகர்
காழியூர் நாராயணன்

மதிப்பு மரியாதை சிறப்பாக இருக்கும். செல்வாக்கு உயரும். வழக்கு விவகாரங்கள் திருப்திகரமாக இருக்கும். இழந்த பொருள்கள் மீண்டும் கிடைக்க வாய்ப்பு உண்டு.

குடும்பம்– மகிழ்ச்சி அதிகரிக்கும். ஆடம்பர பொருள்களை வாங்கலாம். நீண்ட காலமாக தடைபட்டு வந்த திருமணம் போன்ற சுப நிகழ்ச்சிகள் நடக்கும். புதிய வீடு வாகனம் வாங்க யோகம் கூடிவரும்.

விருந்து, விழாவென சென்று வருவீர்கள். கணவன்–மனைவி இடையே அன்பு மேம்படும். சிலர் குழந்தைப் பாக்கியம் பெறுவர். 2005 பெப்ரவரிக்கு பிறகு ராகுவால் மனைவி வகையில் சிறுசிறு பிரச்சினை வரலாம். ஆனால் அந்த ஊடலும் நொடிப் பொழுதில் மறையும்.

சின்ன விஷயங்களில் விட்டுக்கொடுத்துப் போகவும். பெரியோர்களின் ஆதரவும், ஆலோசனையும் கிடைக்கும். உறவினர்கள் வகையில் அவ்வளவு அனுகூலமான போக்குக் காணப்படவில்லை. அவர்களிடம் அநாவசிய பேச்சைத் தவிர்க்கவும்.

உத்தியோகம்– கடந்த கால இடர்பாட்டில் இருந்து விடுபடுவர். இனி வளர்முகமான காலம். வெகு நாள்களாக எதிர்பார்த்த பதவி பொறுப்பு கிடைக்கப் பெறலாம். சக ஊழியர்கள் உதவிகரமாக இருப்பர்.

மேல் அதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். கோரிக்கை கள் நிறைவேறும். சம்பள உயர்வுவரும். விரும்பிய இடத்திற்கு மாற்றம் கிடைக்கப் பெறலாம். வேலையின்றி இருப்பவர்கள் வேலை கிடைக்கப் பெறுவர்.

வியாபாரம்– மேலும் வளம் காணும் நேரம். பணப்புழக் கம் அதிகரிக்கும். எந்த வியாபாரமும் நல்ல இலாபத்தை கொடுக்கும். வீண் விரயம் படிப்படியாகக் குறையும்.

வேலையின்றி இருப்பவர்கள் புதிய தொழிலைத் தொடங்கலாம். அதில் நல்ல வருமானம் கிடைக்கும். சிலர் வேலை விஷயமாக வெளிநாடு சென்று வருவீர்கள். கூட்டாளிகளிடையே ஒற்றுமை ஏற்படும். வாடிக்கையாளர் கள் உங்களிடம் நன்மதிப்பை வைத்திருப்பர்.

விவசாயிகள்- முன்னேற்றமான பலனைக் காணலாம். சிலர் சற்று முயற்சி எடுத்துப் புதிய சொத்துக்களை வாங்கலாம்.

கால்நடை வளர்ப்பவர்களும் நல்ல பலனைக் காணலாம். கைத்தொழிலில் ஈடுபடுபவர்கள் மனமகிழ்ச்சியுடனும், உற்சாகத்துடனும் காணப்படுவீர்கள். அவர்கள் குறைந்த முதலீட்டில் புதிய தொழில் செய்யலாம். எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள் நல்ல முன்னேற்றம் காணலாம்.

வக்கீல் தொழில் சிறப்பாக நடக்கும். பெண்கள் முன்னேற்றம் அடைவர். குழந்தைப் பாக்கியம் சிலருக்கு கிடைக்கும். கணவரின் அன்பு இருக்கும்.

குடும்பத்தில் உன்னத நிலையைப் பெறுவர். அக்கம் பக்கத்தாரிடம் விட்டுக்கொடுத்து போகவேண்டும். அல்லது அதிக நெருக்கம் இல்லாமல் இருப்பது நல்லது.

உடல்நலம் – சிறப்பாக இருக்கும். கேதுவால் இருந்து வரும் பித்தம், மயக்கம் மற்றும் கண் தொடர்பான உபாதைகள் அனைத்தும் பெப்ரவரிக்கு பிறகு பூரண குணம் அடையும்.

(வளரும்)

முதலாவது பிறந்த தின வாழ்த்து

லண்டனை வசிப்பிடமாகக் கொண்ட
திரு. திருமதி யோகதாசன்[சிறி] – சியாமளா[ஜெயா]
தம்பதிகளின்
செல்வப் புதல்வி திரிஷா



தனது முதலாவது பிறந்ததினத்தை இன்று
(05.08.2004) வியாழக்கிழமை லண்டனில் உள்ள
தனது இல்லத்தில் வெகு சிறப்பாகக்
கொண்டாடுகிறார்.
இவரை
அன்பு அப்பா, அம்மா, அம்மப்பா, அம்மம்மா,
அப்பப்பா, அப்பம்மா, பெரியப்பா, பெரியம்மா,
சின்ன அன்ரி மற்றும் உற்றார், உறவினர்கள் யாவரும்
மருதடி விநாயகர் அருள்பெற்று சிறப்புடன்
வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.
மெம்மோறியல் லேன்,
மானிப்பாய்.
(34879)
தகவல்
கா. நவரத்தினம் [அம்மப்பா]

# கூட்டணி சிதறாமல் பாதுகாக்க கொள்கையை ஒதுக்கும் பா.ஜ.க.

தேசிய ஜனநாயகக் கூட்டணி சிதறாமல் பாதுகாக்க அக்கூட்டணிக்குத் தலைமைவகிக்கும் பாரதிய ஜனதாக்கட்சி தனது தீவிர இந்துத்துவக் கொள்கையை ஒதுக்கிவைக்க முடிவு செய்துள்ளது.

கடந்த சில மாதங்களுக்கு முன் பா.ஜ.கவின் தேசிய செயற்குழு மும்பையில் கூடியதது. அதில் கட்சியின் புதிய செயல்திட்டங்கள் வகுக்கப்பட்டன. சங்க பரிவார் அமைப்புகளின் கருத்தை ஏற்று, இந்துத்துவ கொள்கைக்குத் திரும்பி அதன் அடிப்படையில் செயற பட அப்போது தீர்மானிக்கப்பட்டது. அதனை ஆய்வுசெய்யவும், தற்போதைய அரசியல் சூழ்நிலை பற்றி விவாதிக்கவும் கட்சித் தலைவர்களின் கூட்டம் கோவா மாநிலத்தில் இடம்பெற்றது.

இந்துத்துவ கொள்கையை வலியுறுத்தினால் தே.ஜ. கூட்டணியிலிருந்து விலகப் போவதாக கூட்டணிக் கட்சிகள் மிரட்டிவரும் சூழ்நிலையில் இந்தக்கூட்டம் முக்கியத்துவம் பெறறது. பாரதிய ஜனதா தலைவர் வெங்கையா நாயுடு, முன்னாள் பிரதமர் வாஜ்பாய், எதிர்க்



கட்சித் தலைவர் அத்வானி மற்றும் முன்னாள் அமைச்சர்கள், கட்சியின் முக்கிய தலைவர்கள் இக்கூட்டத்தில் பங்கேற்றனர்.

தேசிய ஜனநாயகக் கட்சியில் அங்கம் வகிக்கும் மாநிலக்கட்சிகள் பாரதிய ஜனதாவின் தீவிர இந்துத்துவக் கொள்கையினால், தத்தமது மாநிலங்களில் அரசியல் நடத்த முடியாதுள்ளதாக ஏற்கனவே கூறிவந்தன. தீவிர இந்துத்துவக் கொள்கை கொண்ட பா.ஜ.கவுடன் கூட்டணி வைத்தால் சிறுபான்மை மதத்தினரின் வாக்குகளைப் பெற முடியாதுள்ளதாக அக் கட்சிகள் தெரிவித்தன.

இந்த விடயம் இக் கூட்டத்தில் பிரதானமாக அலசப்பட்டது.

இக் கூட்டத்தின் முடிவில் பா.ஜ.க. தலைவர் வெங்கையா நாயுடு கூறியதாவது:-

தேசியம், வளர்ச்சி ஆகிய இரு குறிக்கோள்களை அடிப்படையாக வைத்துக் கட்சி செயற்படும். இவை இரண்டும் பிரிக்க முடியாதவை. இதிலிருந்து விலகும் பேச்சுக்கு இடமில்லை. பொருளாதார வளர்ச்சி, எல்லாப் பிரிவு மக்களின் எண்ணங்களை ஈடேற்றுதல் ஆகியவற்றைக் கைவிட்டு தேசியம் பேச முடியாது. தேசியம் என்ற சொல்லின் பரந்த பொருளைப் புரிந்துகொண்டு ஒருமைப்பாட்டைக் கட்டிகாக்க வேண்டும்.

தே.ஜ.கூட்டணி தொடரும். பல கொள்கைகள் இருப்பதால்தான் பல கட்சிகள் இருக்கின்றன. கூட்டணிக் கட்சியினா அவற்றின் கொள்கைகளை விட்டுக்கொடுக்காமல் தேசிய நலனுக்காகச் செயற்படுவார்கள். சிறுபான்மையினரைக் கட்சியில் சேர்க்கும நடவடிக்கை தொடரும்.

இவ்வாறு வெங்கையா நாயுடு கூறினார். அவர் இந்துத்துவ என்ற வழக்கமான சொல்லை எந்த இடத்திலும் பயன்படுத்தவில்லை. அது பற்றிக் கேட்டபோது தேசியத்தில் அது உள்ளது எனப் பதிலளித்தார். மொத்தத்தில் தே.ஜ. கூட்டணியைக் காப்பாற்றும் நோக்கில், கட்சியில் மிதவாதிகளின் கை இக்கூட்டத்தில் ஓங்கியதாக அரசியல் பார்வையாளர்கள் தெரிவித்தனர். (ஓ)




# பாரதிய ஜனதாக் கட்சியினர் கூறுவதை நம்ப முடியாது என்கிறார் கருணாநிதி

சென்னை,ஓக.5

'இந்துத்துவப் பிரசாரத்தைக் கைவிட்டு விட்டோம்' என்று பா.ஜ.க. தற்போது கூறுவதை நம்ப முடியாது என்று கூறியுள்ளார் தி.மு.க. தலைவர் கருணாநிதி.

இது பற்றி அவர் தெரிவித்ததாவது:-

ஆர்.எஸ்.எஸ்.,பஜ்ரங்தள், விஸ்வ இந்து பரிஷத் எனும் பல பிரிவுகளாகத் தோன்றி, ஒவ்வொரு பிரிவும் பா.ஜ.க. எனும் அரசியல் இயக்கத்தில் உப நதிகளாய் இணைந்தும், கிளை நதிகளாய் வெளிப்பட்டும் இந்துத்துவத்தைப் பரப்பி வருகின்றன.

அவ்வாறு அரசியல் ரீதியாக வலுப்பெற்றால் அதைக் கொண்டு, அரசு ரீதியாகவே இந்துத்துவத்தை வளர்க்கத் தக்க தருணம் வாய்க்கும் என்று திட்டமிட்டு, செயற்திட்டப் பிரகடனம் வாயிலாக முடிந்த வரையில் எல்லோரையும் ஏமாற்ற எண்ணினர்.

ஆனால், ஏமாறாத மக்கள் மதச்சார்பற்ற ஆட்சியை அமைத்துக்கொண்டவுடன், அதிர்ச்சி அடைந்து, ஆட்சியோ நிர்வாகமோ அமைதியாக நடைபெறவிடாமல் தமது ஆத்திரத்தைத் தணித்துக்கொள்ளும் வகையில் அருவருப்பான எதிர்ப்புக்களில் இறங்கத் தலைப்பட்டனர்.

ஜோர்ஜ் பெர்னாண்டஸும், சந்திரபாபுநாயுடுவும் இந்துத்துவத்தை ஏற்க இயலாது எனக் கண்டனம் தெரிவித்தனர். அதனால், பா.ஜ.க. அச்சம் அடைந்துள்ளது.

தேசிய ஜனநாயகக் கூட்டணி கரைந்து போகாமல் தடுக்க இந்துத்துவத்தை பா.ஜ.க. கைகழுவுகிறது என்று ஏடுகள் எழுதும்படியான நிலையை பா.ஜ.க. தற்போது ஏற்படுத்தி இருக்கிறது.

1999 இல் இந்துத்துவம் இல்லை என்றனர். நேற்று உண்டு என்றனர். இன்று தலை நீட்டிப்பார்க்கின்றது. தலையில் நிலைப்படி இடித்ததும் தலையைக் குனிந்து கொள்வது போல குனிந்து கொள்கின்றனர். நம்ப முடியாது. மீணடும் தலை நீட்டுவார்கள்.

- என்றார் கருணாநிதி. (ஓ)



கிரேக்க தலைநகர் எதென்ஸில் எதிர்வரும் 13ஆம் திகதி ஒலிம்பிக்போட்டிகள் ஆரம்பமாக உள்ளன. இதில் பங்கேற்கும் இந்திய வீரர், வீராங்கனைகளுக்குப் பாராட்டு விழா டில்லியில் நேற்றுமுன்தினம் நடந்தது. இதில் அனைவருக்கும் நினைவுப் பரிசுகள் வழங்கப்பட்டன.

# குஜராத்தில் கனமழைக்கு ஒரே நாளில் 25 பேர் பலி

அகமதாபாத்,ஓக.5

இந்தியாவின் குஜராத் மாநிலத்தின் தென் பகுதியல் நேற்றுமுன்தினம் பெய்த கனமழைக்கு 25 பேர் பலியானார்கள். இதனால் மாநிலத்தில் கன மழை காரணமாக இதுவரை உயிர் இழந்தவர்கள எண்ணிக்கை 127 ஆக உயர்ந்தது.

மாநிலத்தில் ஆனந்த் மற்றும் வதோதரா மாவட்டங்களில் வீடுகள் இடிந்து விழுந்த 3 வெவ்வேறு சம்பவங்களில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5 பேர் உட்பட 7 பேர் இறந்தனர். வதோதரா மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் கன மழையால் வீடு இடிந்து வீழ்ந்ததில் இருவர் உயிருடன் புதையுண்டனர்.

சூரத் நகருக்கு வெளியே மழை வெள்ளத்தில் இருவர் அடித்துச் செல்லப்பட்டனர். ஆனந்த் மாவட்டத்தில் ஹலசா கிராமத்தில் வீடு இடிநது வீழ்ந்ததில் 3 குழந்தைகள் உள்ளிட்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5 பேர் இறந்தனர்.

பரூச மாவட்டத்தில் கர்ஜன் நதியில் ஏற்பட்ட வெள்ளத்தில் வாகனம் ஒன்று அடித்துச் செல்லப்பட்டது. அதில் பயணம் செய்த 4 போ வெள்ளத்தில் மூழ்கினர்.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களை பாதுகாப்பான இடங்களுக்குக் கொண்டுசெல்லவும், மீட்புப் பணிகளில் ஈடுபடவும் விமானப் படையின் உதவியை மாநில அரசு நாடியுள்ளது.

ஜாம்நகர் விமானப் படைத் தளத்தில் இருந்து 3 ஹெலிஹொப்டர்கள் குஜராத் மாநிலத்துக்கு வந்துள்ளன.

இதனிடையே வெள்ள நிலைமை குறித்து மாநில முதல்வர் நரேந்திர மோடி அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

## வைகோ நடை பயணம்; வீரமணி வாழ்த்து

சென்னை,ஓக.5

தமிழகத்தின் திருநெல்வேலியில் இருந்து சென்னைக்கு இன்று முதல் நடைப்பயணம் மேற்கொள்ள உள்ள ம.தி.மு.க. பொதுச்செயலர் வைகோவுக்கு தி.க.தலைவர் கி.வீரமணி வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

வைகோவின் நீண்ட இலட்சியப் பயணத்தில் இந்த நடைப் பயணம் ஒரு முக்கிய மைல் கல். நடைப் பயணம் மேற்கொள்ளும் ம.தி.மு.கவினருக்கு தமிழகம் முழுவதும் தி.க. சார்பில் வரவேற்பளிக்கப்படும் என்று வீரமணி கூறியுள்ளார். (ஓ)

# அரசு விளம்பரத்தில் சோனியா: எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பு

கவுகாத்தி,ஓக.5

இந்தியாவின் அசாம் மாநிலத்தில் காங்கிரஸ் ஆட்சி நடக்கிறது. அங்கு தகவல் மற்றும் மக்கள் தொடர்பு இயக்குநரகம் சார்பில் விளம்பரம் ஒன்று வெளியிடப்பட்டது. அதில் முதலமைச்சர் தருண்கோகாய் படத்துடன காங்கிரஸ் தலைவர் சோனியாகாந்தி படமும் இடம்பெற்று இருந்தது.

இதற்கு எதிர்க்கட்சிகள் தரப்பில் இருந்து கடும் எதிர்ப்புக் கிளம்பியது. சோனியாகாந்தி அரசுப் பதவி எதுவும் வகிக்கவில்லை. அப்படி இருக்கும் ஒருவரது படத்தை முதலமைச்சர் தருண்கோகாய் படத்துடன் இணைத்து எப்படி வெளியிடலாம்? எந்த முறையில் இந்த விளமபரம் வெளியிடப்பட்டது? என்று கேட்டு எதிர்க் கட்சிகள் கண்டனம் தெரிவித்தன.

இந்த பிரச்சினையை அசாம் கணபரிசத் உறுப்பினர்கள் சட்டசபையில் எழுப்பினார்கள். இதற்கு மாநில தகவல் மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் ராக்கிபுல் உசேன பதில் அளித்துபேசினார்.

அப்போது சோனியா எங்களுக்கு வழி காட்டி என்பதாலேயே அவரது படம் விளம்பரத்தில் இடம்பெற்றது என்று தெரிவித்தார். அதற்கு அவர் எந்த அரசுப் பதவியும் வகிக்கவில்லை என்று எதிர்க்கட்சிகள் சுட்டிக்காட்டின.

சபாநாயகர் பிரிதிஜி மாஜ்கி உடனடியாகக் குறுக்கிட்டு இந்தப் பிரச்சினையை இதோடு கைவிடும்படியும், இனிமேல் தவறு எதுவும் நடக்காத வண்ணம் பார்த்துக்கொள்ளும் படியும் கூறினார்.

சபாநாயகரின் விளக்கத்தை எதிர்க்கட்சிகள் ஏற்றன. (ஓ)

# போதைப்பாக்கு விற்பனைக்கு உயர் நீதிமன்றம் அனுமதி

புதுடில்லி,ஓக.5

பான்பராக் எனப்படும் போதைப்பாக்கு விற்பனைக்குத் தடை விதித்து தமிழக அரசு வெளியிட்ட அரசாணையை இந்திய உயர் நீதிமன்றம் ரத்துச்செய்துவிட்டது.

இதன்மூலம் தமிழகத்தில் போதைப்பாக்கு விற்பனைக்கு இருந்து வந்த தடை நீங்கியது.

தமிழக உணவு (சுகாதார) ஆணையம், உணவுப் பொருள் கலப்படத் தடுப்புச்சட்டப் பிரிவின்கீழ் 2001 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஓர் அரசாணையை வெளியிட்டது. அதன்படி போதைப்பாக்கு, புகையிலை கலந்த 'குட்கா' ஆகியவற்றை உற்பத்தி செய்வது சேமித்துவைப்பது, விற்பனைசெய்வது மற்றும் விநியோகிப்பதற்குத் தடைவிதிக்கப்பட்டது. இவை உடல் நலத்துக்குக் கேடு விளைவிப்பவை என்று அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த அரசாணையை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு மனுத்தாக்கல் செய்யப்பட்டது. இதையடுத்து அந்த ஆணையை நீதிமன்றம் ரத்துச்செய்துள்ளது.

சிகரெட் மற்றும் புகையிலைப் பொருள்கள் சட்டத்தை நாடாளுமன்றம் இயற்றியுள்ளது. சிகரெட் மற்றும் புகையிலைப் பொருளகள் விளம்பரத்தைத் தடைசெயவது தொடர்பாக இச்சடடத்தில் கடுமையான பிரிவுகள் இருந்தாலும், புகையிலை அல்லது புகையிலைப் பொருள்கள் உற்பத்தியை அது தடைசெய்யவில்லை. பான் மசாலா உள்ளிட்ட பொருள்களும் இச்சட்டத்துக்கு உட்பட்டவைதான். அதைத் தடைசெய்ய வேண்டும் எனக் கருதியிருந்தால் நாடாளுமன்றமே அதற்குத் தடை விதித்திருக்கும் என்று நீதிபதிகள் குறிப்பிட்டனர். (ஓ)

## சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### விற்பனைக்கு

கறுப்பு நிற ஊர் ஆடு விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: புதிய இலக்கம் 33, பலாலி வீதி, இலுப்பையடிச் சந்தி (தெற்கு), யாழ்ப்பாணம். (34854)

57 - xxxx தொடர் இலக்கமுடைய டொல்பின் ரக HIACE VAN விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P. 077-6280153. (சி-36417)

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கொண்வென்ற் வீதியில் 16 பரப்புப் 4.125 குழியையும் (V.C) உடைய காணி முழுமையாக விற்பனைக்குண்டு. 150 வருட பழைமையான உறுதியையும் கொண்டது. பகுதியாக விற்பனை செய்யப்படமாட்டாது. தொடர்பு: T.P.: 0112-586350, 0777 301043 (34878)

### தவறிவிட்டது

அராலி வடக்கைச் சேர்ந்த கந்தசாமி லோகேஸ்வரி என்பவருடைய தே.அ.அட்டை (இல.461491871V) 30-07-2004 அன்று யாழ்ப்பாணத்திற்கும் வட்டுக்கோட்டைக்கும் இடையில் தவறிவிட்டது. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் 060 - 2212502, 0712 346406 என்ற T.P. இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். (34886)

மாதகலுக்கும் கொடிகாமத்திற்கும் இடையில் 29-07-2004 இல் சுப்பிரமணியம் பாலகிருஷ்ணன் என்பவரின் 761783769V இலக்கமுடைய தேசிய அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கனால் வீதி, மாதகல் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும்.(34882)


## விசாரணை உத்தியோகத்தர் பதவிக்கு விண்ணப்பங்கள்

யாழ்.பல்கலைக்கழகத்தினால் விசாரணை உத்தியோகத்தர்கள் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அரசசேவை அலுவலர்கள், ஓய்வுபெற்ற அரச சேவை அலுவலர்கள் மற்றும் நிர்வாகத் துறையில் அனுபவம் வாய்ந்த பல்கலைக்கழக சேவையிலிருந்து ஓய்வுபெற்றவர்கள் இதற்கு விண்ணப்பிக்கமுடியும்.

விண்ணப்பதாரிகள் தமது முழுப்பெயர், விலாசம், தொடர்புகொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கம், ஓய்வுபெற்ற காலம் ஆகியவற்றை உள்ளடக்கிய விண்ணப்பங்களை எதிர்வரும் 9ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ கிடைக்கக் கூடியதாக துணைவேந்தர், யாழ் பல்கலைக்கழகம் என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்கவேண்டும் எனக் கேட்கப்பட்டுள்ளது. (10-201)

## வட்டு. கிராம வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் வாகனம் கிடைத்தது

வலி.தென்மேற்கு,ஓக.5

வட்டுக்கோட்டை அரசினர் கிராமிய வைத்தியசாலைக்கு சுகாதாரத்திணைக்களம் வழங்கிய புதிய அம்புலன்ஸ் கடந்த திங்கட்கிழமையன்று வைத்தியசாலை பொறுப்பதிகாரியிடம் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டது

வைத்தியசாலையின் அருகில் உள்ள ஆலயத்தில் நடத்தப்பட்ட விசேட பூஜை வழிபாடுகளை அடுத்து வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி இந்த அம்புலன்ஸ் வாகனத்தைச் சம்பிரதாய முறைப்படி பொறுப்பேற்றார்.

இதேவேளை, இந்த அம்புலன்ஸ் வாகனத்தைப் பாதுகாப்பாக நிறுத்தி வைப்பதற்கான கட்டடம் ஒன்று பொதுமக்களின் நிதி உதவியுடன் வைத்தியசாலை வளவில் நிறுவப்பட்டுள்ளது. (எ-135)

## தென்மராட்சி மாணவரிடையில் குறுவினாப் போட்டிகள்

தென்மராட்சி,ஓக.5

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 10,11,12,13 ஆகிய வகுப்புகளில் கற்கும் மாணவர்களுக்கிடையிலான வணிகக் கல்வி மற்றும் விவசாய பாடங்களுக்கான குறுவினாப் போட்டிகள் மூன்றாம் தவணையில் நடத்தப்படவுள்ளன.

பாடசாலை மட்ட, வலய மட்டப்போட்டிகளாக நடத்தப்படவுள்ள இந்தப் போட்டிகளில் பாடசாலை மட்டப் போட்டிகளில் தெரிவு செய்யப்படும் மாணவர்களின் விவரங்களை வலய மட்டப் போட்டிகளில் பங்குபற்றுவதற்கு வசதியாக செப்ரெம்பர் ஐந்தாம் திகதிக்கு முன்னர் தமக்கு அனுப்பிவைக்குமாறு அதிபர்களை வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா கேட்டுள்ளார்.

வணிகக் கல்விப் போட்டிக்கு ஒவ்வொரு வகுப்பிலிருந்தும் இரண்டு மாணவர்களும், விவசாயப்பாட போட்டிக்கு மூன்று மாணவர்களும், ஆயிரம் மாணவர்களுக்கு மேற்பட்ட பாடசாலைகளிலிருந்து ஒவ்வொரு பாடத்திற்கும் தலா ஐந்து மாணவர்களும் பங்குபற்றலாம் என்றும் - அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-117)


### விற்பனையாளர் தேவை

புடவைக் கடை ஒன்றிற்கு விற்பனையாளர் தேவை. ஆண், பெண் இருபாலரும் அருகில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு: **தனிஸ் ரெக்ஸ்**
நவாலி வீதி, மூத்தநயினார் கோயிலடி,
ஆனைக்கோட்டை.
(34898) (24-21-14)


# வீதிவிளக்குகள் பலவும் ஒளிர்வதில்லை இரவுநேரத் திருட்டுக்கு இதுவும் காரணம்

## நிவர்த்திசெய்யக் கோருகிறது வடமராட்சி எழுச்சிப்பேரவை

வடமராட்சி,ஓக.5

வடமராட்சிப் பிரதேசத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள வீதி மின்விளக்குகள் பல இடங்களில் ஒளிரவில்லை. இது இரவுநேரத் திருட்டுகளுக்குச் சாதகமாக அமைந்துவிடுகிறது. எனவே, இலங்கை மின்சாரசபை இதனை நனகு உணர்ந்து உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்.

- இவ்வாறு வடமராட்சிக் கோட்ட தேசிய எழுச்சிப்பேரவை யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப்பேரவைக்கு அனுப்பிவைத்துள்ள அத்தியாவசிய தேவைக்கான தீர்மானம் தொடர்பான கடிதத்தில் இவ்வாறு தெரிவித்துள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

★ அம்பன், மணற்காடு, குடத்தனை, நாகர்கோவில் வாழ்மக்களுக்கு நிரந்தர குடும்ப நல உத்தியோகத்தர் இல்லை. இதனால், வீட்டுப் பிரசவம், குழந்தைகளுக்கான தடுப்பூசி ஏற்றல் என்பனவற்றை உரியநேரத்தில் பெற முடியாது இப்பகுதிப்பெண்கள் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

★ மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலை வீதி இரவு பகலாக கனரக வாகனங்களின் பாவனைக்கு உட்படுத்தப்படுகிறது. அதனால், வீதி அடிக்கடி குண்டும் குழியுமாகிச் சேதமடைகிறது. இதனால், வைத்தியசாலை முன்னால் விபத்துகள் நிகழக்கூடிய சாத்தியக் கூறுகள் உள்ளன.

எனவே, இப்பாதை ஊடாக கனரக வாகனங்கள் செல்லத்தடை விதிக்கப்படவேண்டும்.

★ வடமராட்சியில் உள்ள நகரசபைகள், பிரதேச சபைகளுக்குட்பட்ட வீதிகள் பல முதற்கட்ட வேலைகளாக திருத்தம் செய்யப்பட்டபோதும் இரண்டாம்கட்ட வேலையாகத் தார ஊற்றல் போன்ற வேலைகள் செய்யப்படாமை காரணமாக அவை மீண்டும் பழைய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. குறைந்த செலவில் செய்யப்படவேண்டிய இரண்டாம் கட்ட வேலைகள் மேற்கொள்ளப்படாமை கவலைக்குரியது.

★ கரவெட்டி அத்துளு நன்னீர் விநியோகத் திட்டம் கரவெட்டி கிழக்கின் ஒருபகுதியினருக்கு இதுவரை நன்மையளிக்கவில்லை. இப்பகுதி மக்களில் பலர் வறிய குடும்பங்களைச் சேர்ந்தவர்கள். நாலாயிரத்து 500 குடும்பங்கள் மட்டும் பயன்படுத்தக்கூடியதாகவே இத்திட்டம் அமைக்கப்பட்டது. ஆனால், இன்று இப்பகுதியில் 15 ஆயிரம் குடும்பங்கள் குடிதண்ணீருக்காக காத்திருக்கின்றன. எனவே, வசதிகுறைந்த மக்களின் அவலநிலையைக் கருத்திற்கொண்டு இந்நன்னீர்த் திட்டம் விரிவுபடுத்தப்படவேண்டும்.

★ யாழ். மாவட்ட சுகாதாரத் தொண்டர்களுக்கான வைத்திய சிற்றூழியர் நேர்முகப் பரீட்சை நடைபெற்றும் இதுவரை அதற்கான நியமனங்கள் வழங்கப்படவில்லை. எனவே, இந்நியமனங்களை விரைவாக வழங்க வேண்டும் - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-173)

## தட்டச்சுப் பயிற்சிநெறி

குடத்தனை,ஓக.5

குடத்தனை தென்னிந்தியத் திருச்சபையினால் நடத்தப்படும் தொழிற்கற்கை நெறித் திட்டத்தின் கீழ் எதிர்வரும் 17ஆம் திகதி தட்டச்சு, சுருக்கெழுத்து வகுப்புகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

மேற்படி வகுப்புக்களில் கற்க விரும்புவோர் திருச்சபையின் தொழிற் கற்கைநெறிப் பிரிவுடன் தொடர்புகொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-78)

## சில்லாலையில் 59 பேருக்கு மூக்குக் கண்ணாடி விநியோகம்

வலி.தென்மேற்கு,ஓக.4

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகம் சில்லாலை கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் கடந்த ஏப்ரல் மாதத்தில் நடத்திய இலவச மருத்துவ முகாமில் கண் பரிசோதனை செய்யப்பட்டு மூக்குக் கண்ணாடி பெறுவதற்குத் தெரிவு செய்யப்பட்ட 59 பேருக்கு கடந்த ஞாயிற்றுக் கிழமையன்று மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன.

சில்லாலை கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் வைத்து கழக நிர்வாகிகளால் இந்த மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-135)

## துணைவேந்தர் நியமனம் விண்ணப்ப திகதி நீடிப்பு

கொழும்பு,ஓக.5

கிழக்குப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பதவிக்கு விண்ணப்பிப்பதற்கான விண்ணப்ப முடிவு திகதி நீடிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜூலை மாதத்துடன் விண்ணப்பத் திகதி முடிவடைய இருந்த போதிலும் எதிர்வரும் 24ஆம் திகதி வரை அது நீடிக்கப்பட்டுள்ளது என்றும் ஏற்கனவே கோரப்பட்ட விண்ணப்பத்திற்கு அமைவாக மேற்படி பதவிக்கு விண்ணப்பிக்க முடியும் என்றும் - பதிவாளர் ஏ.டி.ஹரீஸ் தெரிவித்தார். (எ-201)


## முக்கிய அறிவித்தல்

**வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்**

எமது பிரதேசசபை எல்லைக்குட்பட்ட கே.கே.எஸ்.வீதி, டாக்டர் சுப்பிரமணியம் வீதி, குமாரசுவாமிப் புலவர் வீதி, சந்தை தெற்கு வீதி ஆகிய வீதிகளில் வர்த்தக வியாபாரத்தில் ஈடுபடுவோர் வியாபாரத்துக்குரிய பொருள்களைப் பொதுமக்களுக்குப் போக்குவரத்துக்கு இடையூறு விளைவிக்கும் விதத்தில் பரப்பி வைத்திருப்பதும், வாகனங்களை நிறுத்துவதும் தடைசெய்யப்பட்டுள்ளது. மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

அத்துடன், வடிகால்கள்மேல் கொங்கிறீற்று மூடிகள் (Concrete slab) போட்டு வடிகாலைத் தடைசெய்திருக்கும் வர்த்தகர்கள் யாபேரும் 3' அகலம் இருக்கத் தக்கதாக ஏனையவைகள் யாவும் உடைத்து அப்புறப்படுத்தப்படல் வேண்டும். தவறுவோர் மீது 1987ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் கட்டளைச் சட்டம் 15ஆம் இலக்கப் பிரிவு 69(அ) 11இன் கீழ் உடைத்து அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் அறியத்தருகிறேன்.

**திருமதி ச.சொக்கலிங்கம்,**
செயலாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்.

வலி.தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்,
2004.08.04 (C/36427)(35-21-14)



யாழ்ப்பாணத்தில் **SAAMSTECH** இன்

## ஆங்கில மற்றும் சிங்கள நேரடி வகுப்பு

**இன்று இலங்கையில் புதிய முறையிலான இலகுவான ஆங்கில வகுப்பினை 35000 பேருக்கு மேல் வழங்கிய சாம்ஸ்டெக் நிறுவனத்தினால் முதல் முறையாக யாழ்ப்பாணத்தில் நேரடி ஆங்கில மற்றும் சிங்கள வகுப்புகள் ஆரம்பிக்கப்படுகிறது.**

**நீங்கள் விரும்பிய நாள்களில் காலை 8.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை உங்களுக்கு வசதியான நேரங்களில் வாரங்களில் மூன்று நாள் வீதம் தினமும் 2 மணிநேரம்.**

(சனி, ஞாயிறு வகுப்புகளும் உண்டு)
முழுமையாகக் கதைக்கலாம்
பாடநெறியின் முடிவில் டிப்ளோமாச் சான்றிதழ்

காலம்: 2 மாதங்கள்
கட்டணம்: ஆங்கிலம் 6000/-, சிங்களம் 4000/-

**SAAMSTECH**
**Psalm Institute of Engineering and Technology**
**22-¼, Galle Road, Dehiwala,**
**5540200, 0714104100**

குறிப்பு:
தேசிய ஆங்கில டிப்ளோமாவிற்கான அடுத்த தொகுதி பாடப் புத்தகங்கள் 6,7,8ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் விநியோகிக்கப்படவுள்ளன.
(சி-36699) (26-34-14)


## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் 31ஆம் நாள் நினைவஞ்சலியும்



### அமரர் ஆறுமுகம் சிவராஜா

(உரிமையாளர், மல்லிகா மிக்ஷர் மாளிகை, யாழ்ப்பாணம்)

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 20-02-1948 | 07-07-2004 |

திதி:ஷஷ்டி

கடந்த 07-07-2004 புதன்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர் அமரர் ஆறுமுகம் சிவராஜா அவர்களின் ஆத்மசாந்திக் கிரியைகள் நாளை (06-08-2004) வெள்ளிக்கிழமை காலை 10.00மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். நிகழ்வில் கலந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதன் பின்னர் இடம் பெறும் மதியபோசனத்திலும் பங்குகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர் கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக் ஏற்று வருகைதருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம)

"மல்லிகா மிக்ஷர் தொழிலகம்",
கூழாவடி, ஆனைக்கோட்டை.

\- குடும்பத்தினர்.

(34876)(42-14-18-24)

### ஈராக்கில் நிலைகொண்டுள்ள

# டென்மார்க் படையினர் மீது சித்திரவதைக் குற்றச்சாட்டு

ஈராக்கில் அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படையில் அங்கம் வகிக்கும் டென்மார்க் இராணுவத்தினர் ஈராக்கிய சிறைக்கைதிகளை சித்திரவதை செய்தனர் என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இது தொடர்பாக விசாரணை மேற் கொள்ளப்படுவதாக டென்மார்க்கின் பாதுகாப்பு அமைச்சர் சோரன்கேட் தெரிவித்தார்.

ஈராக்கின் அபுகிராய் சிறையில் அமெரிக்கப் படையினரும், நஜாப்நகரில் பிரிட்டிஷ் படையினரும் ஈராக்கிய கைதியை மனிதாபிமான மற்ற வகையில் படுமோசமாகச் சித்திரவதை செய்தனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டது. இதனை நிரூபிக்கப் புகைப்படங்களும் வெளியாகி இருந்தன. இந்த நிலையில் அத்தகைய கீழ்த்தரமான செயல்களில் தமது இராணுவமும் ஈடுபட்டுள்ளதாகக்கூறப்படுவது டென்மார்க் மக்களை பேரதிர்ச்சிக்குள்ளாக்கியிருப்பதாக செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர். அமெரிக்காவுக்கு ஆதரவாக 500 படையினரை ஈராக்கிற்கு அனுப்ப டென்மார்க் அரசு எடுத்த முடிவை அந்நாட்டு மக்களில் பெரும்பாலானவர்கள் ஆதரித்திருந்தனர். ஆனால் அவர்களை தற்போது எழுந்துள்ள குற்றச்சாட்டுக்கள் கவலையில் ஆழ்த்தியுள்ளது.




தாம் கைது செய்த ஈராக்கியர்களை வேதனை தரும் நிலைகளில் நீண்ட நேரம் இருக்கச்செயவது உட்பட பலவித சித்திரவதைகளுக்கு டெனமார்க் படையினர் உட்படுத்தினர் என்பதை நிரூபிக்கும் ஆதாரங்கள் உள்ளதாக டென்மார்க் ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

சித்திரவதைகளில் ஈடுபட்ட இரு இராணுவ அதிகாரிகள் ஏற்கனவே திருப்பி அழைக்கப்பட்டுள்ளனர் என்றும் -

ஈராக்கிய கைதிகள் மீதான சித்திரவதைகள் குறித்து டென்மார்க் படையினில் சிலர் கூட தமது உயரதிகாரிகளிடம் முறையிட்டுள்ளனர் என்றும் -

அந்த ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (ஒ)

## சுதந்திரதேவி சிலை உள்ள தீவுக்குச் செல்ல அனுமதி

நியூயோர்க்,ஓக.5

அமெரிக்காவில் 4 ஆண்டுகளுக்குப் பின் சுதந்திர தேவி சிலை அமைந்துள்ள தீவுக்குச் செல்ல கடந்த செவ்வாய்க்கிழமைமுதல் பொது மக்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

செப்ரெம்பர் 11, 2001இல் நியூயோர்க் மற்றும் வாஷிங்டனில் அல்-கெய்டா தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் உலக வர்த்தக மையக் கட்டடம் தரைமட்டமாகியது.

இந்தச் சம்பவத்தை அடுத்து அமெரிக்காவில் வானுயர, கலையம்சத்துடன் கம்பீரமாக காட்சியளிக்கும் 117 ஆண்டுகள் பழைமையான சுதந்திர தேவி சிலை அமைந்துள்ள தீவுக்குச் செல்ல எவருக்கும் அனுமதி தரப்படவில்லை.

இப்போதும் பயங்கரவாதிகளின் அச்சுறுத்தல் ஓய்ந்தபாடில்லை . மாறாக கடந்த சில தினங்களாக அல்-கெய்டா தீவிரவாதிகளால் அமெரிக்காவின் புகழ்மிக்க கட்டடங்களுக்கும் சிலைகளுக்கும் ஆபத்து ஏற்படக்கூடும் என்ற தகவல் பரவலாக வெளியாகியுள்ளது.

இந்நிலையிலும், சுதந்திரதேவி தீவுக்குச் செல்லவிரும்பும் பொதுமக்களை அனுமதிக்க அரசு முடிவுசெய்துள்ளது.

சுதந்திரத் தீவுக்குச் செல்ல படகில் ஏற முன் பயணிகள் முழுமையான சோதனைக்கு உட்படுத்தப்படுவர்.

# ஜோர்டானியர் மற்றும் துருக்கியரை ஈராக் தீவிரவாதிகள் விடுவித்தனர்

பக்தாத்,ஓக.5

தாம் பணயக் கைதிகளாகப் பிடித்தவர்களில் நான்கு ஜோர்டானியர்களையும், இரு துருக்கியர்களையம் ஈராக்கியத் தீவிரவாதிகள் நேற்று விடுதலை செய்தனர்.

ஈராக்கில் பணியாற்றும் ஜோர்டானியர்கள் ஏழுபேரை தீவிரவாதிகள் பணயக்கைதிகளாக நேற்றுமுன்தினம் பிடித்துச்சென்றனர் என்று ஜோர்டான் அரசு அறிவித்திருந்தது. ஆனால், தற்போது விடுதலையானவர்கள் அவர்களில் அடங்கியிருந்தார்களா? அல்லது இந்த நால்வரும் வேறொரு சந்தர்ப்பத்தில் கடத்தப்பட்டவர்களா என்பது சரிவரத் தெரியவில்லை.

தம்வசமிருந்த இரு துருக்கியர்களையும் தீவிரவாதிகள் விடுவித்துள்ளனர். இவர்கள் பணியாற்றிய துருக்கிய நிறுவனம் தீவிரவாதிகளின் நிபந்தனையை ஏற்று ஈராக்கிலிருந்து வெளியேறுவதாக அறிவித்திருந்தது. இதனையடுததே இந்த இரு துருக்கியர்களும் விடுவிக்கப்பட்டனர். இவர்களுடன் கடத்தப்பட்ட மற்றொரு துருக்கியரை முன்னதாக தீவிரவாதிகள் சுட்டுக்கொன்றதையடுத்தே ஈராக்கிலிருந்து வெளியேறும் தனது முடிவை அந்த நிறுவனம் அறிவித்திருந்தது.

இதற்கிடையில், ஈராக்கில் பணயக்கைதிகளாகப் பிடிக்கப்பட்ட 3 இந்தியர்களையும் விடுவிக்கும் முயற்சிகள் நேற்றும் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டன.

ஈராக்கில் உள்ள குவைத் நிறுவனத்தில் பணியாற்றிய மூன்று இந்தியர்கள், இரு கென்யர்கள், இரு எகிப்தியர்கள் ஆகியோரைப் பதினைந்து நாள்களுக்கு முன்னர் தீவிரவாதிகள் கடத்திச் சென்றனர்.

இவர்களை விடுவிக்க குவைத் நிறுவனம், ஈராக்கிலிருந்து வெளியேறவேண்டும், பலூஜா நகரில் அமெரிக்கப் படையினரால் பாதிப்புற்றவர்களுக்கு நஷ்டஈடு வழங்கவேண்டும் என்பன உட்படச் சில கோரிக்கைகளை தீவிரவாதிகள் முன்வைத்தனர்.

தீவிரவாதிகள் விதித்த நிபந்தனைகளை நிறைவேற்ற குவைத் நிறுவனம் ஒப்புக் கொண்டுள்ளது. இதனைத் தொடர்ந்து இந்தியர்கள் உட்படப் பணயக் கைதிகள் ஏழுபேரும் எப்போது வேண்டுமானாலும் விடுவிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையில், இந்திய அரசும், குவைத் நிறுவனமும் தீவிரவாதிகளுக்கு பலகோடி ரூபாவை வழங்கியுள்ளன என்று தகவல்கள் வெளிவரத் தொடங்கியுள்ளன. (ஒ)

## உலக அரங்கில்

# இந்திய -இலங்கை கப்பல்சேவை ஆரம்பிக்க ஜெயலலிதா எதிர்ப்பு

சென்னை,ஓக.5

இந்தியாவின் தூத்துக்குடிக்கும் இலங்கையின் கொழும்புக்கும் இடையே கப்பல் போக்குவரத்து அறிமுகம் செய்யும் எந்த நடவடிக்கையையும் தாம் எதிர்ப்பதாக தமிழக முதல்வர் ஜெயலலிதா கூறியுள்ளார்.

இச்செயலால் நாட்டின் உள்நாட்டுப் பாதுகாப்புக்கு ஆபத்து ஏற்படும் என்று அவர் கூறியுள்ளார்.

பிரதமர் டாக்டர் மன்மோகன்சிங்குக்கு முதல்வர் ஜெயலலிதா எழுதியுள்ள கடிதத்தில் "இந்தியா மற்றும் இலங்கைக்கு இடையே கப்பல் போக்குவரத்து ஆரம்பிக்கும் விடயத்தில் மத்திய அரசு குறுகிய கண்ணோட்டத்தில் செயற்படுவதாக அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இலங்கையின் தீவிரவாத அமைப்பான விடுதலைப் புலிகள் அமைப்பு மற்றும் இலங்கை அரசியல் நிலைவரம் முதலியவற்றை கருத்தில் கொண்டு இந்திய அரசு செயற்படவேண்டும் என அவர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.(ஒ)

## 50 தலிபான்களைக் கொன்றதாக அமெ. படையினர் தெரிவிப்பு

பாகிஸ்தான் எல்லையையொட்டிய ஆப்கானிஸ்தான் பகுதியில் நேற்று முன்தினம் நடந்த சண்டையில் 50 தலிபான் தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா நடத்திய தாககுதலில் தப்பியோடிய அல்-கெய்டா மற்றும் தலிபான் தீவிரவாதிகள் பாகிஸ்தான் எல்லையை அண்டிய பகுதிகளில் பதுங்கியுள்ளனர். அவர்களை தேடும் பணியில் அமெரிக்கப் படைகளும், ஆப்கான் வீரர்களும் ஈடுபட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் காலை கோஸ்த் என்னுமிடத்தில் ஆப்கானிஸ்தான் வீரர்களுக்கும், தலிபான் தீவிரவாதிகளுக்கும் இடையே திடீர் மோதல் ஏற்பட்டது. ரொக்கெட்டுக்கள், பீரங்கி, இயந்திரத் துப்பாக்கிகள், கையெறிகுண்டுகளுடன் 50 தீவிரவாதிகள் தாக்கினர். இதில், தலிபான்கள் இரண்டுபேரும், ஆப்கான் இராணுவத்தினர் இரண்டு பேரும் பலியாயினர்.

பின் ஐந்து மணிநேரம் கழித்து 50 தீவிர.வாதிகள் மீண்டும் அதே பகுதிக்கு வந்து அதிரடித் தாக்குதல் நடத்தினர். அப்போது ஆப்கான் படைவீரர்களுக்குத் துணையாக அமெரிக்க ஹெலிகொப்டர்கள் மற்றும் போர் விமானங்கள் தாக்குதலில் ஈடுபட்டன.

# வர்த்தக அமைப்பின் உடன்பாட்டால் விவசாயமானியம் உலகளவில் குறைப்பு

வெலிங்டன்,ஓக.5

உலக நாடுகள் குறிப்பாக அமெரிக்கா, ஜபபான், ஐரோப்பிய நாடுகள் உள்ளிட்ட பணக்கார நாடுகள் தம் நாட்டு விவசாயத் துறைக்கு அளித்துவரும் மானிய உதவிகளைப் பெருமளவு குறைக்க வேண்டும் என்று உலக வர்த்தக அமைப்பு நாடுகள் ஒப்புக்கொண்டுள்ளன.

அதனால், உலகம் முழுவதும் ஆண்டுக்கு 6 லட்சத்து 30 ஆயிரம் கோடி ரூபா அளவுக்கு விவசாய மானியத் தொகை குறைக்கப்படும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

ஜெனீவாவில் நடந்த உலக வர்த்தக அமைப்பின் மாநாட்டில் நியூஸிலாந்து நாட்டின் சாபில் கலந்துகொண்ட பிரதிநிதியான டிம் கிராசர் இத்தகவலைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

சுவிஸர்லாந்து நாட்டில் நடந்த உலக வர்த்தக அமைப்பு நாடுகளின் அமைச்சர்கள் கூட்டத்தில் மேற்கண்ட முடிவு இருநாள்களுக்கு முன் எடுக்கப்பட்டது.

இதன்படி, உலக நாடுகள் ஒன்வொன்றும் தம் நாட்டு விவசாயத்துறைக்கு அளித்துவரும் மானிய உதவிகளைக் கடுமையாகக் குறைக்க வேண்டும். வேளாண்பொருள் ஏற்றுமதிக்கு அரசு கொடுத்துவரும் மானிய உதவிகள் ஏற்றுமதிக்கடன் வசதி உள்ளிட்டவற்றையும் கடுமையாகக் குறைக்கவேண்டும்.

பிறநாடுகளின் விவசாய உற்பத்திப் பொருள்களை இறக்குமதி செய்யும்போது விதிக்கப்படும் வரியையும் குறைக்கவேண்டும்.

விவசாய மானியத்தைப் பணக்கார நாடுகள் குறைப்பதால் அவற்றின் விவசாய உற்பத்திப் பொருள்களின் விலை கூடும். எனவே அந்த நாடுகளுக்கு பிற நாடுகள் விவசாயப் பொருள்களை ஏற்றுமதி செய்ய வாய்ப்புக் கிடைக்கும்.

விவசாய மானியக் குறைப்பு என்பது அரசியல் ரீதியில் கடும் விளைவுகளை ஏற்படுத்தக் கூடிய மிகமுக்கியமான முடிவு; மிகக் கடினமான முடிவு.

அது தொடர்பான அனைத்து விதிகளும் திட்டவட்டமாக வகுக்கப்பட ஓராண்டு காலம் ஆகும் என்று கூறினார் டிம் கிராசா.

# குடும்பத்தின் பெயரைக் காப்பாற்றும்படி தனது பேரனுக்கு சதாம் ஹுசைன் கடிதம்

பக்தாத்,ஓக.5

மனிதனாக வாழவேண்டும், குடும்பத்தின் பெயரை எந்த இடத்திலும் எக்காலத்திலும் காப்பாற்றவேண்டும் என்று ஜோர்டானில் உள்ள தனது பேரனுக்கு ஈராக் முன்னாள் அதிபர் சதாம் ஹுசைன் கடிதம் எழுதியுள்ளார்.

இத்தகவலை அல்அரேபியா தொலைக்காட்சி தெரிவித்துள்ளது.

அமெரிக்கக் கூட்டுப் படையினரால் பதவியிலிருந்து அகற்றப்பட்டு சிறையில் அடைக்கபட்டுள்ள சதாம் எழுதிய கடிதம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மூலம் போய்ச்சேர்ந்தது.

தனது தாத்தா சதாம் எழுதிய கடிதம் குறித்து அல்அரேபியத் தொலைக்காட்சியில் அலி ஹுசைன் அல்மஜீத் கூறியதாவது:-

எனது தந்தை ஹுசைன் கமல், மாமா சதாம் கமல் ஆகியோரைப்போன்று நல்ல மனிதனாகவும் நாணயம் உள்ளவனாகவும் விளங்க வேணடும். குடும்பத்தை நன்றாக பார்த்துக் கொள்ளவேண்டும் என்று தாத்தா எழுதியுள்ளார்.

அவர் எழுதிய கடிதம் 3 மாதங்களுக்குப் பின் கடந்த திங்கட்கிழமைதான் எனக்கு வந்து சேர்ந்தது. சிறையில் அடைக்கப்பட்ட பின் சதாமிடம் இருந்து வந்த 2ஆவது கடிதம் இது என்றார்.

1996இல் ஈராக் ஆயுத ரகசியங்களை மேற்கு நாடுகளுக்கு அனுப்பியதாக எழுந்த சந்தேகத்தின்பேரில் அல்மஜீத்தின் தந்தையும் தனது மகனுமான ஹுசைன் கமல், உறவினர் சதாம் கமல் ஆகியோரைக் கொல்ல உத்தரவிட்டவர் சதாம் ஹுசைன் என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையே சதாம் உயர் அழுத்தத்துக்கான சிகிச்சை பெற்றுவருகிறார்.

தினமும் இருவேளை அவரை மருத்துவர்கள் பரிசோதிக்கின்றனர். நன்றாக சாப்பிடுகிறார் தூங்குகிறார் என்று ஈராக் மனித உரிமைகள் அமைச்சர் பக்தியார் அமின் பக்தாத்தில் சொன்னார்.

பக்தாத் சர்வதேச விமான நிலையம் அருகே சிறை வைக்கப்பட்டுள்ளார் சதாம். அவருடன் 96 கைதிகள் சிறைவைக்கப்பட்டுள்ளனர். (ஓ)




ஜேர்மனியைச் சேர்ந்தவர்களான ரோட்சரும் அவரது சகோதரர் ஆன்டிபெல்டுமனும் சேர்ந்து இந்த மோட்டார் சைக்கிளை உருவாக்கியுள்ளனர்: இந்த வாகனத்தில் 24 இயந்திரங்கள் பொருத்தப்பட்டுள்ளன.

# சாதனை குறித்துக் கவலைப்படவில்லை நீண்ட காலத்துக்கு விளையாடுவேன்

கொழும்பு,ஓக.5

டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் அதிக விக்கெட்டுகளை யார் எடுப்பது என்ற போட்டி குறித்துத் தான் கவலைப்படவில்லை என்று இலங்கையின் சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் கூறியுள்ளார்.



527 டெஸ்ட் விக்கெட்டுகளை வீழ்த்திய முரளிதரனின் சாதனையை, ஆஸ்திரேலியாவின் ஷேன்வோர்ன் சமீபத்தில் சமப்படுத்தினார்.

டெஸ்ட் போட்டிகளில் யார் அதிக விக்கெட்டுகளை வீழ்த்துகிறார் என்ற போட்டி குறித்து நான் கவலைப்படவில்லை. நாங்கள் இருவரும் நீண்ட காலத்துக்கு விளையாட உள்ளோம். ஒரு போட்டியில் நான் வோர்னை முந்தியதாகவும், மற்றொரு போட்டியில் வோர்ன் என்னை முந்தியதாகவும் கூறுவார்கள். ஆனால், இதைப்பற்றியெல்லாம் கவலைப்படவில்லை என்று முரளி தெரிவித்தார்.

பந்து வீச்சாளர்களுக்கு காலி மைதானம் சாதகமானது. இம்மைதானத்தில் முரளிதரன் மூன்று முறை பத்துக்கும் மேற்பட்ட விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். 2000 இல் தென்னாபிரிக்காவுக்கு எதிராகவும், 2001 இல் மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிராகவும், 2003 இல் இங்கிலாந்திற்கு எதிராகவும் ஒரு டெஸ்டில் 10 இற்கு மேற்பட்ட விக்கெட்டுகளை அவர் வீழ்த்தியுள்ளார்.

தென்னாபிரிக்காவுக்கு எதிராக நேற்று ஆரம்பமான முதல் டெஸ்ட் போட்டியில் விக்கெட்டுகளை வீழ்த்தி முரளிதரன் முன்னிலை பெறுவாரென்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த மைதானத்தில் தான் விளையாடிய 10 டெஸ்ட் போட்டிகளில் 82 விக்கெட்டுகளை அவர் வீழ்த்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (10)

## அருணோதயக் கல்லூரி வெற்றியீட்டியது

வலி.தெற்கு,ஓக.5

மேஜர் முரளி ஞாபகார்த்தமாக நடத்தப்பட்ட தமிழீழ இளையோர் உதைபந்தாட்டப் போட்டியில் 14 வயதுக்குட்பட்டோர் பிரிவில் அளவெட்டி அருணோதயக் கல்லூரி அணியினர் வெற்றியீட்டியுள்ளனர்.

மேஜர் முரளி ஞாபகார்த்தமாக கிளிநொச்சி விளையாட்டரங்கில் பல விளையாட்டு நிகழ்வுகள் நடைபெற்றன. உதைபந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டத்தில் சுவிஸ் நாட்டுத் தாயக அணியுடன் மோதிய இந்த அணியினர் 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டினர். (10-152)



**கிளிநொச்சி விளையாட்டரங்கில் நடைபெற்ற 'மேஜர் முரளி' ஞாபகார்த்த தமிழீழ இளையோர் உதைபந்தாட்டப் போட்டியில் 14 வயதுக்குட்பட்டோர் பிரிவில் அளவெட்டி அருணோதயக் கல்லூரி அணியினர் வெற்றியீட்டினர்.**

**வெற்றிக் கேடயம் சகிதம் கல்லூரி அதிபர் கே.மகேந்திரராசா மற்றும் ஆசிரியர்களுடன் இணைந்து அணியினர் எடுத்துக் கொண்டபடம்.** *(படம்:வலி.தெற்குச் செய்தியாளர்)*

## இந்தியா ஏ... கிறார் பிரெட்லீ

சிட்னி,ஓக.5

ஆஸ்திரேலி... உள்ளூர் அணியில் இணைந்து முதல்தர போட்டிகளில் பங்கேற்க இந்தியா வரவுள்ளார் ஆஸ்திரேலிய அணியின் வேகப்பந்து வீச்சாளர் பிரெட்லீ.

ஆஸ்திரேலியாவின் உள்ளூர் கிரிக்கெட் அணி அடுத்தவாரம் இந்தியா வருகிறது. இந்த அணியில் பிரட்லீயும் சேர்க்கப்பட்டுள்ளார். கணுக்கால் காயத்தால் கடந்த 6 மாதமாக கிரிக்கெட் விளையாடாத இவர் பந்து வீச்சில் தன்னை மெருகேற்றிக்கொள்வதற்காக இந்தப் பயணத்தில் பங்கேற்கிறார். இவருக்கு இந்திய அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் ஸ்ரீநாத் சில பயிற்சிகளும் வழங்கவுள்ளார். ஆஸ்திரேலிய அணி ஒக்ரோபரில் 4 டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்பதற்காக இந்தியா வரவுள்ளது. இங்குள்ள மைதானங்களில் பந்துவீசும் முறைகளை அறிந்து கொள்வதற்காக ஸ்ரீநாத்திடம் பயிற்சி மேற்கொள்ளவுள்ளதாக அணியின் தலைமைப் பந்து வீச்சுப் பயிற்சியாளர் டேமியன் பிளமிங் தெரிவித்தார்.

பிரட்லீக்கு கடந்த ஆண்டு கணுக்காலில் சத்திரசிகிச்சை செய்யப்பட்டது. இதன்பின்னர் சிறிய ஓய்வில் இருந்த அவர் மீண்டும் பந்து வீசியதால் காயத்துக்கு உள்ளானார். தற்போது இவர் குணமாகிவிட்டார். (10)




## பந்துவீச்சாளர்கள் சிறப்பாகச் செயற்பட்டனர்; துடுப்பாட்டவீரர்கள் நிலைத்துநிற்கவில்லை - கும்ளே

சென்னை,ஓக.5

ஆசியக் கிண்ண இறுதிப்போட்டியில் தமது பந்து வீச்சாளர்கள் சிறப்பாகச் செயற்பட்டதன் மூலம் இலங்கை அணியை 228 ஓட்டங்களுக்குள் சுருட்டியதாக இந்திய அணியின் சுழற்பந்து வீச்சாளர் அனில் கும்ளே தெரிவித்துள்ளார்.

இது மிகக் குறைந்த ஓட்ட எண்ணிக்கையாக இருந்தபோதும் தமது அணியின் வீராகள் நிலைத்து நின்று துடுப்பெடுத்தாடத் தவறியதே அணியின் தோல்விக்குக் காரணமாக அமைந்துவிட்டதெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை அணியின் பந்துவீச்சு மிகவும் அபாரமாக இருந்ததுடன் மைதானத்தின் தன்மைக்கேற்ப திட்டமிட்டுச் செயற்பட்ட இலங்கை அணியின் தலைவர் அத்தப்பத்து பந்துவீச்சாளர்களைச் சிறப்பாகப் பயன்படுத்திக் கொ... டார்.

இந்தத் தொடரின் ஆரம்பத்தில் இருந்தே இலங்கை அணியின் துடுப்பாட்டம் மிகவும் சிறப்பாக இருந்தது. சொந்த மண்ணில் விளையாடியது அணிக்கு மேலும் பலத்தைக் கொடுத்தது. ஆசியக் கிண்ணப் போட்டியில் ஏற்பட்ட தோல்வியினால் இந்திய அணி துவண்டுபோய்விட்டது என்று ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டுள்ளன. ஆனால், அதுதவறு. ஹொலண்டில் எதிர்வரும் 21ஆம் திகதி ஆரம்பமாக உள்ள முத்தரப்புத் தொடரில் இந்திய அணி சாதிக்கும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (10)

# ஆயுதக் களைவுக்கு எதிராக வழக்கு தொடர தமிழ்க்குழுக்கள் முஸ்தீபாம்

கொழும்பு,ஓக.5

யுத்த நிறுத்த உடன்படிக்கை மூலம் தம்மை நிராயுதபாணிகளாக்கித் தமது பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் விளைவிக்கப்பட்டுள்ளதாக ஈ.பி.டி.பி., புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ். (வரதர் அணி), ஈரோஸ் ஆகிய கட்சிகள் வழக்குத் தொடரவுள்ளன.

- இவ்வாறு 'லக்பிம' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த ஐ.தே.மு.அரசுக்கும் விடுதலைப் புலிகள் அமைப்புக்கும் இடையே கைச்சாத்தான போர்நிறுத்த உடன்படிக்கையின் 1:8 விதியின் அடிப்படையில், ஈ.பி.டி.பி., புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ்.(வரதர் அணி), ஈரோஸ் ஆகிய கட்சிகளிடமிருந்து ஆயுதங்கள் களையப்பட்டன.

இந்த ஆயுதங்கள் தமது தலைவர்களின் இந்த ஆயுதங்கள் தமது தலைவர்களின் பாதுகாப்புக்காகவேபயன்படுத்தப்பட்டன என்றும் -

அவை பறிக்கப்பட்டதால் தமது தலைவர்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகவும் - இந்தக்கட்சிகள் குற்றஞ்சாட்டுகின்றன.

இது குறித்து உயர்நீதிமன்றத்தில் மனித உரிமைகள் தொடர்பான மனுவொன்றைத் தாக்கல்செய்வதற்காக சட்டவல்லுநர்களோடு ஆலோசனை நடத்தப்படுவதாக ஈ.பி.டி.பி. தெரிவித்துள்ளது.

மேற்படி மனுவில் ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன், நோர்வே அனுசரணையாளர்கள் ஆகியோரை பிரதிவாதிகளாகக் குறிப்பிடத் திட்டமிடப்பட்டுள்ளது என்று அந்தச்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

யுத்தநிறுத்த உடன்படிக்கை சட்ட விரோதமானது என்று அறிவிக்கக்கோரி ஜே.வி.பி. மற்றும் ஜாதிக ஹெல உறுமய. ஆகியவை நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஓ-ரி)

## கோப்பாய் வைத்தியசாலை அபிவிருத்திச் சபையின் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஓக்.5

கோப்பாய் அரசினர் வைத்தியசாலையின் அபிவிருத்திச் சபைப் பொதுக்கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3மணிக்கு கோப்பாய் அரசினர் வைத்தியசாலையின் கேட்போர் கூடத்தில் தலைவர் து.தனபாலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

புதிய நிர்வாக சபைத் தெரிவு இடம்பெற உள்ளதால் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த நலன்விரும்பிகள் அனைவரும் தவறாது சமுகம்கொடுக்குமாறு அபிவிருத்திச் சபைத் தலைவர் கேட்டுள்ளார். (10-51)

## சாயி சிந்தனை

### மதங்களின் சாரம் ஒன்றே



எல்லா மதங்களின் சாரமும் ஒன்றே. இந்த உண்மையை யாரும் புரிந்து கொள்வதில்லை. மதங்கள் வேறுபாடானவை என்று கருதிக் கொண்டு வாதப்பிரதிவாதம் செய்கிறார்கள். ஒரு கிணற்றில் ஒரு தவளை பல ஆண்டுகாலமாக வசித்துவந்தது. வெள்ளம் காரணமாக கடலில் இருந்த தவளை தற்செயலாகக் கிணற்றுக்குள் விழுந்தது. அத்தவளை, கிணற்றைக் கண்டு இந்த இடம் மிகக் குறுகியதாக இருக்கிறது என்று நினைத்தது. ஆனால், கிணற்றுத் தவளையோ கிணற்றையே கடலெனக் கருதி மிகுந்த மகிழ்ச்சியுடன் அங்குமிங்கும் தாவிக்குதித்தது. கடற்தவளை, கிணற்றைச் சிறியதாகக் கருதியது. கிணற்றுத் தவளையோ கிணற்றையே மிகப் பெரியதாகக் கருதியது. இந்துக்கள், இந்து சமயம் என்ற கிணற்றுக்குள் இருந்துகொண்டு, அதுவே மிகவும் பெரியது என்று கர்வம் கொள்கின்றனர். கிறிஸ்தவர்கள், இஸ்லாமியர்கள், பௌத்தர்கள், ஜைனர்களும் கூட கிணற்றுத் தவளைகள் போன்றவரே. இவையெல்லாம் உண்மையான வரம்புகள் அல்ல. அளவற்ற ஆற்றலும், விரிவுமே உண்மையான எல்லைக்கோடுகள். கிணற்றுக்குள் வாழ்வது போதாது. இதைவிளக்க ஒரு கதையுண்டு. ஒருவன் ஐந்து குருடர்களைக் கூட்டிக்கொண்டு வந்தான். ஐந்து குருடர்களையும், யானையைத் தெரிந்துகொள்ளும்படி கூறினான். ஒருவன் காலைத் தடவிப்பார்த்து யானை ஒரு தூண் என்றான். அடுத்தவன் அதன் வயிற்றைத் தடவிப் பார்த்து யானை ஒரு பெரிய சுவர் என்றான். மற்றவன் அதன் காதைத் தடவிப் பார்த்து யானை 'ஒரு முறம் என்றான். ஒவ்வொருவனும் தான் அறிந்த அளவிற்கு, யானையைப் பற்றிக்கூறியது உண்மையே. அந்த அளவான அறிவு, முழு உண்மையல்ல. அனைத்தையும் ஒன்றிணைத்து முழுமையாகப் புரிந்துகொள்ளுதலே, முழு 'உண்மை. அனைத்துச் சமயங்களையும் ஒன்றிணைத்து அறிவதே உண்மையான மதம். *(ஆதாரம்: சனாதன சாரதி)*

# மனித உரிமைகள் செயலகத்தின் யாப்பு விதிகள் அங்கீகரிக்கப்பட்டன

## கிளிநொச்சியில் ஞாயிறன்று நடந்த செயலமர்வில்

யாழ்ப்பாணம்,ஓக.5

வடக்கு - கிழக்கு மனித உரிமைகள் செயலகம் கடந்த ஞாயிறன்று கிளிநொச்சியில் தனது இரண்டாவது அமர்வை நடத்தி செயலகத்தின் யாப்பு விதிகளை விரிவாக ஆராய்ந்து ஏற்றுக்கொண்டது.

செயலகத்தின் நிர்வாகக் குழுவில் நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஒரு தலைவர், ஒரு உபதலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோர் இருப்பர்.

தலைவராக வண.கருணாரட்ணமும், உபதலைவராக சிவபாலனும், செயலாளராக என்.மாலதியும், பொருளாளராக எஸ்.கஜேந்திரனும் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

செயலகத்தின் யாப்பு விதிகள் பற்றி ஆலோசிப்பதும் திருத்தங்கள் மேற்கொள்வதும் இக்கூட்டத்தின் முக்கிய நோக்கமாக இருந்தன.

வண.கருணாரட்ணம், விடுதலைப் புலிகள் அரசியற்துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வன், புலிகளின் சமாதான செயலக பிரதம செயலாளர் புலித்தேவன், திருகோணமலையைச் சேர்ந்த சட்டத்தரணி சிவபாலன், யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட பீடாதிபதி கலாநிதி எஸ்.சிவபாலன், யாழ். பல்கலைக்கழக நூலகர் செல்வி அருளானந்தம், நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோசப் பரராஜசிங்கம், கஜேந்திரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான ஏ.சந்திரநேரு, வன்னி சட்டக்கல்லூரி தலைவர் அச்சுதன், நியூஸிலாந்து மனித உரிமைகள் செயற்பாட்டாளர் என்.மாலதி, பாரிஸ் மனித உரிமைகள் நிலையத்தைச் சேர்ந்த டீட்றே மெக்கொன்னல் அம்மையார், கிருபாகரன் மற்றும் ஆஸ்திரேலிய சட்டத்தரணிகளான பிரதீ... அன்னா பரராஜசிங்கம் போன்றோர் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

கூட்டத்தை ஆரம்பித்துவைத்து வண.எம்.எக்ஸ் கருணாரட்ணம் பேசுகையில்:-

செயலகம் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் வெளிநாடுகளிலிருந்து பலரும் அக்கறை காட்டி வருகின்றனர். அதன் வேலைத் திட்டங்கள் பற்றி அறிந்து கொள்வதற்காக ஐ.நா. பிரதிநிதி விஜயம்செய்தார். செயலகத்திற்கு இதுவரை 13 முறைப்பாடுகள் வடக்கு கிழக்கின் பல பாகங்களிலிருந்தும் கிடைக்கப்பெற்றுள்ளன. அவைகளில் 15 முறைப்பாடுகள் வெற்றிகரமாகத் தீர்த்துவைக்கப்பட்டன - என்று தெரிவித்தார். (ப)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம்,ஓக.5

வலி. வடக்குப் பிரதேச சபையின் உள்ளூராட்சி வார இறுதிநாள் நிகழ்வும் பரிசளிப்பு விழாவும் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு மல்லாகம் மகா வித்தியாலயத்தில் சபையின் செயலாளர் செ.செல்வரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.இராசையாவும் கௌரவவிருந்தினராக வலி. வடக்கு பிரதேச சபையின் முன்னாள் தலைவர் திருமதி பா.ஸ்ரீபாஸ்கரனும் கலந்துகொள்ளவுள்ளனர். (10)

## பட்டதாரிகள் கூட்டம்

யாழ்.மாவட்ட வேலையற்றோர் பட்டதாரிகள் சங்கத்தின் பிரதேச செயலகரீதியாக நியமிக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கான சந்திப்பு இன்று காலை 9 மணிக்கு சங்கத்தின் அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

இதேவேளை - இதுவரை பிரதேச செயலகங்களில் தமது பதிவினை மேற்கொள்ளாத பட்டதாரிகளையும் இன்று காலை 9.30 மணி முதல் தலைமை அலுவலகத்தில் அதனை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-9)


## கண்ணீர் அஞ்சலி



நேற்று (04.08.2004) புதன்கிழமை அமரத்துவம் அடைந்த துர்க்கா பல்பொருள் விற்பனை நிலைய உரிமையாளர்

**சின்னச்சாமி சுப்பையா**
**(இரத்தினம்)**

அவர்களின் மரணச்செய்தி அறிந்து அதிர்ச்சி அடைவதுடன் அன்னாரின் குடும்பத்தாரின் துயரில் நாமும் பங்குகொள்வதுடன் அவரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

*சிவன் மோட்டார் ஸ்ரோர்ஸ்,*
*இல. 70/1, மானிப்பாய் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(34906)(12-11-38)

உரிமையாளரும்,
ஊழியர்களும்.

## கண்ணீர் அஞ்சலி

எமது கழக உறுப்பினரும் துர்க்கா 'பல்பொருள் விற்பனை நிலையம்' உரிமையாளருமாகிய

**சின்னச்சாமி சுப்பையா**

அவர்களின் மறைவைக் கேள்வியுற்று துயரமடைகின்றோம். அவர்களின் இழப்பால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*இல. 165, மானிப்பாய் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

யாழ்ப்பாணம் வணிகர் கழகம்.

(சி-36433)(12-11-38)

## மரண அறிவித்தல்கள்

### செல்லையா குலசிங்கம் (நைனார்)



அச்செழுவைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட செல்லையா குலசிங்கம் (நைனார்) 04-08-2004 புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா- சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் கந்தையா-செல்லமுத்து தம்பதிகளின் அன்பு மருமகனும் - திருமதி யோகலட்சுமி அவர்களின் அன்புக் கணவரும் யோகலட்சுமி, குணரெத்தினம், குணசிங்கம் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும். குலபவானி (E.N.T. கிளினிக்), குலறமணன் (பிரதேச செயலகம், பூநகரி), குலறஜனி, குலறஜீவன், குலசீலன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.08.2004) வியாழக்கிழமை பி.ப.2.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அச்செழு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அச்செழு வடக்கு,*
*நீர்வேலி.*

(34893)(12-11-38)

தகவல்:
கு.குலறமணன் (மகன்)

### திருமதி கணபதிப்பிள்ளை நாகரெத்தினம் (நயினாதீவு)



நயினாதீவு 3 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி கணபதிப்பிள்ளை நாகரெத்தினம் அவர்கள் 04.08.2004 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி முருகேசு - வள்ளியம்மை அவர்களின் அன்பு மகளும் காலஞ்சென்ற திரு.திருமதி வைத்திலிங்கம் - தில்லைவனம் அவர்களின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற வைத்திலிங்கம் கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரன், பரமேஸ்வரி மற் றும் இராஜேஸ்வரி காலஞ்சென்ற கேதீஸ்வரி மற்றும் மகேஸ்வரன் (பிரான்ஸ்) சிவனேஸ்வரன், சாரதாமணி, நகுலேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் திருமதி உமாமகேஸ்வரி, சரவணமுத்து, காலஞ்சென்ற கதிர்காமலிங்கம் மற்றும் அங்குசபாலன் (அமெரிக்கா), சுசீலாதேவி (பிரான்ஸ்), கனகாம்பிகை, கோடீஸ்வரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும் காமாட்சியம்மா, செல்லம்மா, பாலசுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான நடராசா, செல்லத்துரை இராசம்மா, கதிரேசு, கார்த்திகேசு, கந்தையா, நாராணபிள்ளை, விசுவலிங்கம், செல்லம்மா மற்றும் சிவபாக்கியம், சிவகாமி, இராசரெத்தினம் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆரணி, வவா, தாரணி, பிரியா, நர்த்தனி, நாகரஞ்சினி, அம்பிகைபாலன், சுபாஸ்கரன், சுதர்ஸனா, ஜெயந்தகுருபரன், ஜெயக்குமார், ராஷ்மோகன், அனுஷா, கிருஷா, மிதுனா, ஆர்த்திகா, கீர்த்திகா, அஜ்ஜந்தன், பிரியங்கனி, பிரதீப்குமரன், நிருசாங்கனி, பிரசாந், இதயரூபன், ஜிந்துஷன், சர்மிலா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நயினாதீவு 3 ஆம் வட்டாரத்தில் நடைபெற்று, பூதவுடல் இன்று (05.08.2004) வியாழக்கிழமை மாலை 4.00 மணிக்கு சல்லிபரவை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் கேட்டுக் கொள்ளுமாறு அன்புடன் அறியத்தருகின்றேன்.

*3 ஆம் வட்டாரம்,*
*நயினாதீவு.*

தகவல்:
க.சிவநேஸ்வரன் (மகன்).


# உயர்பாதுகாப்பு வலயங்களில் குடியமர்வது மக்களின் அடிப்படை உரிமை என வலியுறுத்து

உயர்பாதுகாப்பு வலயங்களுக்குள் தமது வாழ்விடங்களைக் கொண்டுள்ள மக்களை அங்கு மீளக்குடியமர்த்த உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

-இவ்வாறு மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ் அலுவலக அதிகாரி ருவான் சந்திரசேகர தெரிவித்துள்ளார்.

அண்மையில் அமெரிக்காவில் நடைபெற்ற சர்வதேச விருந்தினர் திட்ட மாநாட்டில் கலந்துகொண்ட பதின்மூன்று நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகளிடம் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த ஜூன் மாதம் 21 ஆம் திகதி தொடக்கம் ஜூலை மாதம் 16 ஆம் திகதிவரை சர்வதேச விருந்தினர் திட்டம் நடைபெற்றது.

இலங்கையிலிருந்து மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலக அதிகாரி இதில் கலந்துகொள்வதற்காக அழைக்கப்பட்டிருந்தார். வாஷிங்ரன், நியூ மெக்ஸிக்கோ நோத்கரலீனா, லொஸ் அஞ்சல்ஸ் உட்பட ஐந்து நகரங்களில் இம்மாநாடு நடைபெற்றது.

இதில் பதின்மூன்று நாடுகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரிகள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலநதுகொண்டனர். இந்த மாநாடுகளில் கலந்துகொண்ட மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ.அலுவலக அதிகாரி குடாநாட்டு நிலைதொடர்பாக தெளிவுபடுத்தினார்.

உயர்பாதுகாப்பு வலயத்தினுள் தமது வாழ்விடங்களைக் கொண்டுள்ள மக்களை மீளக்குடியமர்த்துவதற்கு இலங்கை அரசு அனுமதிக்கவேண்டும். அது அவர்களுடைய அடிப்படை மனித உரிமையாகும். தற்போது அவர்களுடைய உரிமை மீறப்பட்டுள்ளது என்று சந்திரசேகரா அங்கு தெரிவித்தார்.

குடாநாட்டில் உயர்பாதுகாப்பு வலயங்கள் அமைந்துள்ள இடங்களை வரைபடம் மூலம் அங்கு அவர் எடுத்துக்காட்டினார்.

இதேவேளை - மாநாட்டில் கலந்துகொண்டிருந்தவர்கள் இலங்கை அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு முன்னர் குடாநாட்டு நிலைமை எவ்வாறு இருந்தது என்பது பற்றியும் தற்போது குடாநாட்டின் நிலைமை எவ்வாறு இருக்கின்றது. அங்குள்ள மக்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் தொடர்பாகவும் கேட்டறிந்தனர். (ஐ-7)


**தென்மராட்சியில் அழகுக்கலை சம்பந்தமான இலவசக் கருத்தரங்கு**

*இடம் :- ஏசியன் கல்வி நிறுவனம்,*
*புத்தூர் சந்தி, மீசாலை.*

★ *காலம்* : 12.08.2004
★ *காலை* : 10.30 (புதிய நேரம்)

**கருத்தரங்கு வழங்குபவர்:**
கொழும்பு Moon Beauty Care நடத்துநரும், வெளிநாடுகளில் அழகுக்கலை நடனக் கலை சம்பந்தமான பயிற்சிகளைப் பெற்றவரும் கொழும்பு யாழ்ப்பாணப் பகுதிகளில் வகுப்புகளை நடத்திக்கொண்டு இருப்பவருமான திருமதி B. அகிலா.

★ இக்கருத்தரங்கில் அழகுக்கலையைக் கற்க விரும்புவோர், அழகுக்கலையின் மேலதிக அறிவைப் பெறவிரும்புவோர், அழகுக் கலை சிகிச்சை சம்பந்தமான ஆலோசனை பெறவிரும்புவோர், Facials செய்ய விரும்புவோர் அனைவரையும் ஏசியன் கல்வி நிறுவனத்தில் 10.08.2004 இற்கு முன் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

★ ஏற்கனவே பதிவுகளை மேற்கொண்டவர்களும் அன்றையதினம் சமுகந்தரவும்.

மேலதிக தொடர்புகளுக்கு:
0777-570138 (34903)(43)

**Computer courses**

Diploma in Computerized Accounting
Diploma in AUTOCAD
Diploma in Internet E-mail
Diploma in Microsoft office 2003
Diploma in Computer Hardware Engineering

புதிய பிரிவு
ஆரம்பம் 07.08.2004
மேலதிக விபரங்களுக்கு:-
43, Arasady Road,
Thaddatheru Junction,
Jaffna, Sri Lanka.
T.P: 021 2225170

**மணமகன், மணமகள் தேவை**

1956 ஆம் ஆண்டு பிறந்த என்ஜினியர் பூச நட்சத்திரம் (ஆண்), 1967 ஆம் ஆண்டு பிறந்த (பெண்) எலக் ரோனிக் என்ஜினியர், சித்திரை நட்சத்திரம், 1972 ஆம் ஆண்டு பிறந்த கச்சேரியில் வேலைசெய்யும் (பெண), ரேவதி நட்சத்திரம், 1966ஆம் ஆண்டு (ஆண்), மாஸ்ரர், ரோகிணி நட்சத்திரம் ஆகியோருக்கு பொருத்தமான மணமகன், மணமகள் தேவை.
தொடர்பு: T.P.222 6366 Lucky Anty 226-3694
ந.நல்லையா, துன்னாலை வடக்கு, வெல்லிக்கம் தோட்டம் பிள்ளையார் (தாமரைக்குளம்), கரவெட்டி.
(ஞாயிற்றுக்கிழமை மட்டும் காலை 7.00-12.00 மணிவரை)
(34905)(12-11-38)

**ராஜா** யாழ்ப்பாணம்



அர்ஜுன், மீனா, நெப்போலியன் நடித்த
**அன்பு சகோதரன்**
புதியநேரம்: 10.30,2.30,6.30.
06.08.2004 முதல் **குத்து**
(சி-36364)(12)

**நாகம்ஸ்** சுன்னாகம்

ரஜனிகாந்த், நக்மா, ரகுவரன், ஜனகராஜ் நடித்த
**பாட்ஷா**



காட்சிகள் 11.00,3.00,7.00(பு.நே.)
அடுத்த வெளியீடு:
சரத்குமார் நடித்த **மாயைநேதன்**
(C/36415) (12)

**நிரஞ்சனாஸ்** சங்கானை

நந்தா, ரேகா, வடிவேல் நடித்த
**புன்னகை பூவே**
(ரீல்ல்)
வெள்ளி, சனி, ஞாயிறு
தினசரி: 11.00, 2.45, 6.00 பு.நே.
Saving private Ryal (இரவு 8.45 பு.நே.)
(C-36453)(12)


## ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக கல்வி நடவடிக்கைகள்

ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடம், விஞ்ஞான பீடம் என்பவற்றின் 2002ஆம் மற்றும் 2003ஆம் கல்வி ஆண்டு மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் 9ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன.

2003ஆம்,2004ஆம் ஆண்டுக்கான மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளும் அன்றையதினம் ஆரம்பமாகவுள்ளன.

இம்மாதம் 30 ஆம் திகதிக்குள் அனைத்துப் பீடங்களினதும் கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிக்க இருப்பதாக பல்களைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் விஜய பண்டார தெரிவித்துள்ளார்.

விஞ்ஞானபீட முதலாம், 2ஆம் வருட மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் சொன்னார்.

கலை மற்றும் முகாமைத்துவ பீடங்களின் கல்வி நடவடிக்கைகள் இம்மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.(ஐ-9)


## மரண அறிவித்தல்கள்

### இராசா இராமச்சந்திரன்



தம்பாலை, அச்சுவேலியைச் சேர்ந்த இராசா இராமச்சந்திரன் அவர்கள் நேற்று (04.08.2004) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசா - மாசிலாமணி தம்பதிகளின் அன்பு மகனும் அருள்தேவியின் அன்புக் கணவரும் சிறிதரன் (ஸ்ரீநாக பூசணி ஸ்ரோர்ஸ்-சண்டிலிப்பாய்), சிவதர்சினி (மீன் பிடியியல் விஞ்ஞான டிப்ளோமா மாணவி - யாழ். பல்கலைக் கழகம்), சிறிரூபன் (நல்லூர்.ப.நோ.கூ. சங்க விவசாயபண்ணை முகாமையாளர்) சிந்துஜன் (ஸ்ரீ நாகபூசணி ஸ்ரோர்ஸ் - சண்டிலிப்பாய்) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் சசிகலாவின் அன்பு மாமனாரும் தனுகா, பானுஜா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.08.2004) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்க பிற்பகல் 12.30 மணிக்கு தம்பாலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தம்பாலை,*
*அச்சுவேலி.*

(34907)(12-11-38)

தகவல்:
குடும்பத்தினர்.

### பொன்னையா சுந்தரலிங்கம்

சாவகச்சேரி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா சுந்தரலிங்கம் அவர்கள் நேற்று (04-08-2004) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா-பொன்னம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும், புனிதவதியின் அன்புக் கணவரும் பொன்னையா - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், Dr.பிறேம்றாஜ் (அமெரிக்கா), Dr.பிரேமகிருஸ்ணா (தேசிய வைத்தியசாலை,கொழும்பு), Dr.பிறேமசிறி (Engineer,கனடா), பிறேமசீலன் (சுவீஸ்), Dr.பிறேமினி (போதனா வைத்தியசாலை,கண்டி) ஆகியோரின் அன்புத் தந்தையும், Dr.தியாகசீலீ, ஜெயசிறி, Dr. அனுஷியா, தவமலர், Dr.ராஜேந்திரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் சரணமுத்து (கனடா), தவமணிதேவி, தியாகராஜா, (தலைவர், பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம்), காலஞ்சென்ற இராசம்மா, பூமணிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும் வியாமனி, ஆரபி, விதுரன், பிரவீண், அபிர்தன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*மடத்தடி, சாவகச்சேரி வடக்கு,*
*சாவகச்சேரி.*

(34909)(12-11-38)

தகவல்:
Dr. பிரேமகிருஷ்ணா.

### வல்லிபுரம் தங்கவடிவேல்
**(பிரதம இலிகிதர், பிரதேச சபை - சங்கானை)**



சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் சங்கானையை வதிவிடமாகவும் வவுனியா சின்னப் புதுக்குளத்தை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட வல்லிபுரம் தங்கவடிவேல் 02.08.2004 அன்று சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் - இராசம்மாவின் அன்பு மகனும் செல்வராணியின் அன்புக் கணவரும் தங்கநேசம், தங்கரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோரனும் சுதாகரன் (சுவிஸ்), பத்மலதா (கனடா), விஜிதா, பிரபாகரன் (லண்டன்), இன்பகரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் பிரேம்குமார் (கனடா), கம்சினி (சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும் ரோசினியின் (கனடா) பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 07.08.2004 சனிக்கிழமை பிற்பகல 1.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வெளிக்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*இல,26, மரதங்குளம் வீதி,*
*சின்னப்புதுக்குளம்,*
*வவுனியா.*

(சி-36435)(12-11-38)

தகவல்:
மனைவி,
பிள்ளைகள்.

# டாக்டர்களின் கடமை நேரம் பதிவது கட்டாயமாக்கப்படுகிறது

அரச மருத்துவர்கள் மருந்துவமனைகளுக்குப் பணிபுரியவரும் நேரத்தையும் பணி முடிநது வெளியேறும் நேரத்தையும் தவறாமல் குறிப்பிடுவதைக் கட்டாயமாக்க சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

கடந்த ஜூலை மாதம் 6ஆம் திகதி விபத்தொன்றில் சிக்கி கொழும்பு தேசிய மருத்துவமனையில் உயிரிழந்த காது, மூக்கு, தொண்டை மருத்துவ நிபுணரான டாக்டர் ஏ.என்.பொன்ராஜாவின் மரணத்துக்கு அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில், அங்கு கடமையில் இருந்திருக்க வேண்டிய சத்திர சிகிச்சை நிபுணர் கடமையில் இல்லாதிருந்ததும் காரணம் எனக் கண்டறியப்பட்டுள்ளது. இத்தீர்மானம் இதனை அடுத்தே மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது - என்று சிங்களப் பத்திரிகைச் செய்தி ஒன்று கூறுகிறது.

புதிய தீர்மானத்தைப் பின்பற்றி, சகல அரச மருத்துவர்களும் தினசரி தாம் மருத்துவப் பணிக்குவரும் மற்றும் பணி முடிந்து வெளியேறும், நேரங்களைக் குறிப்பிடுவது தொடர்பாக நாளேடு ஒன்றைப் பயன்படுத்த வேண்டியுள்ளதோடு, அது மருத்துவமனைகளில் பணிப்பாளர் அல்லது பிரிவுத் தலைவரின் பொறுப்பில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இந்த நடைமுறை, எதிர்வரும் இரு வாரங்களுக்குள் கொழும்பு தேசிய மருத்துவமனையில் ஆரம்பித்து வைக்கப்படுமெனவும், பின்னா அது ஏனைய மருத்துவ மனைகளிலும் நடைமுறைப்படுத்தப்படுமெனவும் சுகாதார அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். (ஐ)

## மக்கள் வங்கி ஊழியர்கள் நன்றி தெரிவிப்பு

மக்கள் வங்கி ஊழியர் ஒருவர் படுகொலை செய்யப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அழைப்பு விடுத்து கறுப்புப்பட்டிப் போராட்டத்துக்கு ஆதரவு நல்கிய சகலருக்கும் மக்கள் வங்கி ஊழியர்கள் சார்பில் மக்கள் வங்கியின் உதவிப் பொதுமுகாமையாளர் து.ரகு நன்றி தெரிவித்திருக்கிறார்.

கறுப்புப்பட்டிப் போராட்டத்துக்கு உறுதி சேர்த்துப் பலம் பெருத்த ஆதரவு தந்த சகல வங்கிகளினதும் ஊழியர்களுக்கும், வணிகர் கழகம், வணிகர் கழகங்களின் சம்மேளனம் மற்றும் பொது அமைப்புகளின் ஒன்றியம், விடுதலைப் புலிகளின் அரசியல்துறை ஆகிய தரப்பினருக்கு அவர் நன்றி தெரிவித்துள்ளார்.

இந்த அடையாள எதிர்ப்பு நிகழ்வுக்கு கிடைக்கும் பலாபலன்களின் அடிப்படையில் அடுத்த கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

## அமெ.தமிழ்ச் சங்கம் மறுத்துரைக்கிறது

அமெரிக்காவின் ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயகக் கட்சி வேட்பாளராகப் போட்டியிடும், ஜோன் கெரி, தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான ஒருவரென அமெரிக்காவிலுள்ள இலங்கைத் தமிழ்ச் சங்கம் தெரிவித்தது என்ற சாரப்பட வெளியான செய்திகளை அச்சங்க வட்டாரங்கள் மறுத்துள்ளன.

'அமெரிக்க அரசியலில் பங்குபற்றாமல் - பக்கச் சார்பாகச் செயற்படாமல் - இயங்கும் ஓர் அமைப்பு எமது சங்கம்.

"எமது சங்கத்தின் சார்பில் உத்தியோகபூர்வமாகவோ அல்லது உத்தியோகப் பற்றற்ற முறையிலோ, நிர்வாகிகளோ, எவருமோ அத்தகைய கருத்து எதனையும் வெளியிடவில்லை. அப்படியிருக்க இவ்வாறான செய்தி ஒன்று வெளியானது எமக்கு ஆச்சரியத்தைத் தருகின்றது" - என்று அந்தச் சங்கத்தின் வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேசமயம் - "ஜோன் கெரி புலிகளுக்கு ஆதரவானவர் என்று 'சிறிலங்கா யூனியன் ஒவ் யு.எஸ்.ஏ.' என்ற அமைப்பு தெரிவித்தது" என்ற செய்தி கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்றில் இணையத்தளத்தில் சில தினங்களுக்கு முன் வெளியாகியிருந்தது.

அத்தகைய சங்கம் ஏதும் அமெரிக்காவில் இயங்குவதாகத் தெரியவில்லை. ஆனால், அவ்வாறான சங்கத்துக்கும் அமெரிக்காவிலுள்ள இலங்கைத் தமிழ் சங்கத்துக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று தமிழ் சங்கம் மேலும் தெரிவித்துள்ளது. (ஐ-3)

# தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட்டில் மஹேல சதம்

கொழும்பு,ஓக.5

இலங்கை - தென்னாபிரிக்கா அணிகளுக்கிடையே நேற்று காலி சர்வதேச விளையாட்டரங்கில் ஆரம்பமான முதல்நாள் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் 90 ஓவர்கள் முடிவில் இலங்கை அணி 7 விக்கெட் இழப்பிற்கு 279 ஓட்டங்களைப் பெற்றது. இலங்கை அணியின் துடுப்பாட்ட வீரர் மஹேல ஜெயவர்த்தன இப்போட்டியில் சதம் அடித்தார்.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. துடுப்பாட்டத்தில் இலங்கை அணியின் தலைவர் மாவன் அத்தப்பத்து 9 ஓட்டங்களுடனும், சனத்ஜெயசூரிய 12 ஓட்டங்களுடனும, குமார் சங்கக்கார 58 ஓட்டங்களுடனும், திலான் சமரவீர 13 ஓட்டங்களுடனும், ரி.எம். டில்சான் 25 ஓட்டங்களுடனும், ருமேஸ் களுவிதாரண 33 ஓட்டங்களுடனும், உப்புல் சந்தன 5 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். மஹேல ஜயவர்த்தன ஆட்டமிழக்காமல் 116 ஓட்டங்களைக் குவித்தார்.

பந்து வீச்சில் தென்னாபிரிக்காவின் ஷோன் பொலக் 4 விக்கெட்டுக்களையும், நிக்கி போஜே, ஹவார்ட், நிற்றினி ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். இரண்டாம் நாள் ஆட்டம் இன்று தொடரும். (8)



நேற்றுமுன்தினம் இரவு வீசிய கடும் காற்றினால் யாழ்.பிரதான வீதியில் பஸ்த்தியன் சந்திக்கு சமீபமாக நின்ற பாரிய மரம் ஒன்று வீடொன்றின் மீது வீழ்ந்து கிடைப்பதைப் படத்தில் காணலாம். (படம்: அலுவலகப் படப்பிடிப்பாளர்)

## முகவரின் இல்லத்தில் பழைய பத்திரிகைள் தீக்கிரை

திருநெல்வேலிச் சந்திக்கு சமீபமாக உள்ள பத்திரிகை விற்பனை முகவர் ஒருவரின் வீட்டினுள் நேற்று முன்னிரவு வேளை நுழைந்த அடையாளம் தெரியாத சிலர் அங்கிருந்த பழைய பத்திரிகைக் கட்டுக்களை தீயிட்டுக் கொழுத்தினர். ஓட்டோ ஒன்றில் வந்த சிலரே மதில் பாய்ந்து வீட்டினுள் நுழைந்து வீட்டு வராந்தாவில வைக்கப்பட்டிருந்த பத்திரிகைக் கட்டுக்களைத் தீ மூட்டிக் கொளுத்தினர் என்று தெரிவிக்கப்பட்டது. இளைஞர் குழு உடனடியாகவே அங்கிருந்து தப்பிச்சென்றுவிட்டது. (ஐ-8-9)

## முல்லை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தின் கதவுகளைத் திறக்கவிடாது மறியலில் ஈடுபட்டனர். இதனால் ஊழியர்கள் அனைவரும் செயலகத்துக்குள் செல்லமுடியவில்லை.

பின்னர் மறியல் போரில் ஈடுபட்டோர் நண்பகல் 12 மணியளவில் தமது பாதிப்பை விளக்கி மகஜர் ஒன்றை செயலக அதிகாரிகளிடம் கையளித்தனர்.

முல்லைத்தீவு மாவட்ட பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்காது இழுத்தடிப்புச் செய்தால், கிளிநொச்சி, முல்லைத்தீவு அரச செயலகங்களை இயங்க அனுமதிக்கப் போவதில்லை என்று பட்டதாரிகள் தெரிவித்தனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 210 பட்டதாரிகள் வேலைவாய்ப்புக்காக விண்ணப்பித்திருந்தனர். ஆனால், அவர்களில் ஒருவருக்குக்கூட நியமனம் வழங்கப்படவில்லை. (ஐ-3)

# ஆளும் கூட்டமைப்பின் தலைமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதிலளிக்க வேண்டியவராகவும் -

ஜனாதிபதி இருந்து வந்தார். இப்போது கூட்டமைப்புத் தலைமைப் பொறுப்பிலிருந்து அவர் விலகிவிட்டார்.

இனி, ஆளும் கூட்டமைப்பின் கூட்டங்களில் பங்குபற்ற வேண்டிய தேவை அவருக்கு இல்லை, கூட்டமைப்பில் பங்காளிக் கட்சியினர் அவரிடம் கேள்வி எழுப்பவும் வாய்ப்பு இருக்காது.

இனிமேல், அமைச்சரவைக் கூட்டங்களில் தான் அவர் தமது கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிப் பிரதிநிதிகளை எதிர்கொள்வார், ஆனால, அங்கும் அவர் அமைச்சரவையின் தலைவர். அமைசசர் ஒருவர் கிளப்பக்கூடிய வினாவுக்கு ஜனாதிபதி என்ற முறையில் பதிலும் விளக்கமும் தருவதோடு அவர் பணி முடிந்துவிடும். ஆளும் கூட்டமைப்புச் சர்ச்சை குறித்து அங்கு கேள்வி எழுப்பமுடியாது.

கூட்டமைப்புக்குப் புதிதாகத் தெரிவுசெய்யப்படும் தலைவரிடமோ, கூட்டமைப்புக் கூட்டங்களிலோ கூட்டமைப்புப் பற்றிய கேள்விகள் இனிமேல் எழுப்பப்படலாம்.

ஆனால், அவை நேரடியாக ஜனாதிபதியை எட்டா.

கூட்டமைப்புக்கு புதிதாக வரக்கூடிய தலைவரினால்கூட, ஜனாதிபதி என்ற முறையில் சந்திரிகா எடுக்கும் நடவடிக்கைகள் குறித்து கேள்வி எழுப்பவோ அல்லது அதற்குப் பதிலளிக்க வேண்டிய கடமை ஜனாதிபதி சந்திரிகாவுக்கோ இருக்காது.

எதிர்காலத்தில், தமது கூட்டமைப்பின் தலைவர் என்ற வகையில் புதிதாகத் தலைவராக வரப்போகின்றவரிடமோ -

அல்லது தங்கள் அரசின் நாடாளுமன்றத் தலைவர் என்ற முறையில் பிரதமரிடமோ - கேள்வி எழுப்புவதோடு ஜே.வி.பியினர் அடங்கிவிட வேண்டியதுதான்.

கூட்டமைப்பின் புதிய தலைவருக்கும் பிரதமருக்கும்கூட ஜனாதிபதி என்ற முறையில் சந்திரிகா எடுக்கும் நடவடிக்கைகளில் தாங்கள் தலையிட முடியாது என்று கூறி கைவிரிப்பதைத் தவிர வேறு வழியிருக்காது.

- இவ்வாறு கூட்டமைப்புத் தலைவர் பதவியை இராஜினாமாச் செய்ததன் மூலம் தனது நிலையை உறுதிப்படுத்தி, தீர்க்கமான சமிக்ஞையை ஜே.வி.பிக்கு வெளிப்படுத்தியிருக்கிறார் ஜனாதிபதி சந்திரிகா என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

அமைதி முயற்சிகள் தொடர்பாக ஜனாதிபதி என்ற முறையில் தாம் எதிர்காலத்தில் எடுக்கப் போகும் நடவடிக்கைகளுக்கு ஜே.வி.பி. வெளியிலிருந்து எதிர்ப்புத் தெரிவிக்கலாமே தவிர, தன்னை ஒன்றும் செய்துவிட முடியாது என்பதை இந்நடவடிக்கை மூலம் தெளிவாக்கியிருக்கின்றார் ஜனாதிபதி.

அதுமட்டுமல்ல, தனது வழிக்கு ஜே.வி.பி. வரவில்லை என்ற காரணத்தால் கூட்டை உடைத்து ,அரசைத் தாமாகவே கலைக்காமல், தான் தனது வழியில் போக அதற்கு ஒத்துழைக்க விரும்பாவிட்டால் கூட்டமைப்பை ஜே.வி.பியே உடைத்துக்கொள்ளட்டும் என்ற இக்கட்டு நிலையை ஜே.வி.பிக்கு ஏற்படுத்தியிருக்கிறார் சந்திரிகா.

அத்தோடு, இன்றைய நிலையில் இந்த ஆளும கூட்டமைப்பு உடைந்தால் ஆட்சி ஐ.தே.க. பக்கம் கைமாறிவிடும். அதை ஜே.வி.பி.விரும்பாது. எனவே, இன்றைய நிலையில் அரசை நீடிக்க விடுவதைத் தவிர ஜே.வி.பிக்கு வேறு வழியில்லை - என்று ஜனாதிபதி கருதுகின்றார்.

எனவே, தாம் தனிவழி போகத் தீர்மானித்தாலும், தனது அரசை ஜே.வி.பியால் கவிழ்த்துவிட முடியாது. அதற்கு ஜே.வி.பி. துணியாது என்று ஜனாதிபதி நம்புகிறார். அதுவும் அவரது தற்போதைய முடிவுக்கு முக்கிய காரணம் என்று கூறப்படுகின்றது.

எனவே, கூட்டமைப்பு அரசு நீடிக்கும் அதற்கு வெளியே வந்து அந்த ஆளும் கூட்டமைப்பு அரசுக்கு வெளியில் நின்று ஜனாதிபதி என்ற முறையில் தமக்குள்ள நிறைவேற்று அதிகாரத்தை யாருடைய அழுத்தத்துக்கோ, கேள்விக்கோ இடமின்றிப் பிரயோகிக்க ஜனாதிபதி இந்த நடவடிக்கை மூலம் தயாராகிவிட்டார் என விடயமறிந்த வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

இதேசமயம் -

ஆளும் கூட்டமைப்பு தலைவர் பதவியை ஜனாதிபதி சந்திரிகா இராஜினாமாச் செய்துவிட்டால் அப்பதவி இனியாருக்கு என்ற கேள்வி எழுகின்றது.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க ஆகியோர் அப்பதவிக்குப் போட்டியிடக் கூடும் எனக் கருதப்படுகின்றது. (ஐ-3-8-9)

## ஈழவேந்தனின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னத்திற்குக் கொண்டுவரவேண்டுமென்றும் கேட்டே ஈழவேந்தன் எம்.பி.சிறப்புரிமை மீறல் விவகாரத்தைக் கிளப்பியிருந்தார்.

இந்த விடயத்தை சபையில் நேற்று சபாநாயகர் விவாத்திற்கு எடுத்துகொள்வது பற்றி அறிவித்தபோது, தனது உடல்நிலை சரியில்லாததால் தான் இந்த விவகாரத்தை சபையில் நாளை (இன்று வியாழக்கிழமை) சமர்ப்பிப்பார் என ஈழவேந்தன் கூறினார். அதையடுத்து சிறப்புரிமை மீறல் தொடர்பான விடயம் பிற்போடப்பட்டது.

ஆனால், நேற்றுப் பிற்பகல் சபாநாயகர் தலைமையில் இடம்பெற்ற 'சார்க்' நாடுகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சங்கக் கூட்டத்தில் இவ் விவகாரத்தைக் கிளப்பினார் ஈழவேந்தன்.

இவ்விவகாரம் குறித்து வெளியுறவு அமைச்சர் மூலம் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று சபாநாயர் அங்கு விடுத்த அறிவிப்பை ஈழவேந்தன் ஏற்றுக்கொண்டார். (ஐ-8-9)

## புலமைப்பரிசில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பரீட்சையை ஒத்திவைப்பதில்லை என்றும் திட்டமிட்டபடி குறிப்பிட்ட திகதியில் அதை நடத்துவது என்றும் அக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

இதையடுத்து -

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் இந்தப் பரீட்சைக்குத் தோற்றுபவர்களின் அனுமதி அட்டைகள் முதல் கட்டமாக கொழும்பிலிருந்து அனுப்பிவைக்கப்பட்டன. (ஐ-3)

## உயர்தர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இணையத்தளத்தில் முடிவுகள் வெளியிடப்படும் என்றும், மறுநாள் அவ்வப் பாடசாலைகளுக்கு முடிவுகள் அனுப்பி வைக்கபடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-3)

## கருணாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குள் அண்மைக்காலம் தொடக்கம் ஏற்பட்டுள்ள முரண்பாடுகள் காரணமாகவே இக்கொலைச் சம்வம் இடம்பெற்றிருப்பதா ஆரம்ப விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளதாக ஏறாவூர் பொலீஸார் தெரிவித்தனர்.

இவர் கருணா அணியைச் சேர்ந்தவர் எனவும், அரச புலனாய்வுப் பிரிவினருடன் தொடர்புடையவர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (ஐ-8-9)

## இடைக்கால...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சில விடயங்களைக் கூறப் போக, அதுவே அவருக்குப் பெரும் தொல்லையாகி விட்டது.

"இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனைகளின் அடிப்படையில் சமாதானப் பேச்சுக்களை நடத்துவதில்லை என்ற அரசுக் கூட்டமைப்பின் நிலைப்பாட்டில் எந்தவித மாற்றமும் இல்லை" - என ஜனாதிபதி அங்கு தெரிவித்தார் என்று அரசுதரப்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

அரசுத்தரப்பின் ஏரிக்கரை ஊடகப்பத்திரிகைகளில் அதிக முக்கியத்துவம் கொடுத்து முதல பக்கத்தில் தலைப்புச் செய்தியாக பிரசுரிக்கப்பட்ட இந்த விடயம் ஏனைய அரச ஊடகங்களிலும் அளவுக்கு அதிக முக்கியத்துவம் பெறத்தவறவில்லை.

ஆனால், இச்செய்தி வெளியான கையோடே அரசுத்தரப்பு அதனை மறுக்கப் புறப்பட்டுவிட்டது.

ஜனாதிபதி அப்படிக் கூறினார் என அவரது கட்சியின் செயலாளர் நாயகத்தை மேற்கோள் காட்டி அரச ஊடகங்கள் வெளியிட்ட செய்திகள் நேற்று மறுக்கப்பட்டன. ஜனாதிபதியின் பெயரில் அத்தகைய தகவல் எதனையும் அரசுப் பத்திரிகைகளுக்குத் தாம் தெரிவிக்கவில்லை என்று கட்சிச் செயலாளர் நாயகம் உத்தியோகபூர்வ மறுப்பு அறிக்கை ஒன்றை வெளியிட்டார். எது எப்படியென்றாலும் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை குறித்து அரசுத் தரப்பும் விடுதலைப் புலிகளுடன் பேசவதற்கு அரசின் பங்காளிக் கட்சியான ஜே.வி.பி. அனுமதிக்கவே அனுமதிக்காது எனத்தெரிகிறது. (ஐ-க)


G.A.Q. - 2005

யாழ். பல்கலைக்கழகம் [வெளிவாரி]

ஆங்கில இலக்கியம், மொழியியல் புதிய பிரிவு ஆரம்பம்: 07.08.2004 காலை 9 மணி

ஆசிரியர்: சோ.பத்மநாதன்

குறிப்பு: B.A. Part I பரீட்சை முடிந்தவர்களுக்குரிய B.A. Final

ஆரம்பம்: 14. 08. 2004.

புதிய உயர் கல்லூரி ஆரியகுளம், யாழ்ப்பாணம்.

(34865)



பாடசாலை மாணவர்களுக்கான டொச் வகுப்புகள்

ஆரம்பம்:

3, 4, 5, ஆம் வகுப்புகளுக்கு

BERN, ZURICH

ஆகிய பெரு நகரங்களில்

லிங்கம் மாஸ்ரரின் கற்பித்தலில்

தொடர்பு: 062 7974164 - 079 3344733

4665, OFTRINGEN, SWISS.

(33927)



ஈசன்

கல்வி நிலையம்

பௌதிகவியல்

A/L

2005,2006

சடப்

பொருளியல்

பாகுமை

திரு. குமரன் (B.Sc.)

Sat., Sun. 4.30 p.m.

ஆரம்பம்:

07.08.2004

(34874)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05.08.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.